
ஆன்லைன்
மாப்பிள்ளை
ஆபத்தா?



கல்கி

குடும்பத்துடன் படிக்க...

KALKI
14.10.2007 ரூ.8.00
80 பக்கங்கள்



நியாயமா
டாக்டர்ஸ்?

Team Health Shoppe
For Wellness

அரிது, அரிது ஆலோவேரா அரிது !

இயற்கை முறையினாலான
ஆலோவேரா பொருட்கள்







ஆலோ பேஷியல் ஜெல்	ஆலோ ஸ்ரெட்ச் நில்	ஆலோ மல்டிபர்பஸ் ஜெல்	ஆலோ ஸ்கின் ப்ரைட்னர்	ஆலோ பேர்னஸ் ஆயில் ஜெல்	ஆலோ டீம் பயோக்ளென்சர்

TEAM EUBIO CARE

வண்டலூர்: டீம் ஹவுஸ், ஜி.எஸ்.டி. ரோடு,
போன்: 2275 0502



அண்ணாநகர்: பிளாட் 1200, Z பிளாக், 6வது அவென்யு, (லேபர் ஆபிஸர்ஸ் குவார்ட்டர்ஸ் அருகில்) 4269 3332

இந்திரா நகர்: 3வது அவென்யு, எண்.26, தரைதளம், கார்பரேஷன் ஷாப்பிங் காம்ப்ளக்ஸ், 4269 5115

புரசைவாக்கம்: எண்.23B, பேஸ்மெண்ட், பிரின்ஸ் டவர்ஸ் (அபிராமி மெகாமால் எதிரில்) புரசைவாக்கம் ஹை ரோடு, 4542 8898

For bulk requirements,Please Contact : Team House - GST Road, Vandalur, Ch - 48
Fax : 22750860 (or) E-mail: teamhealthshoppe@drraoholdings.com

www.teamhealthshoppe.com | OPEN ON ALL DAYS

கல்கி


தீபாவளி மலர் 07



அரியதோர் அட்டைப்படக் கட்டுரை அளிப்பவர் :

சுகி. சிவம்


எதைப் பற்றி...?




வினை தீர்க்கும் நாயகனின் கருணை...



லக்ஷ்மி கடாக்ஷத்தின் மகிமை...



வெண்கமல வாசினியின் சிறப்பு...



கண்ணனின் களிப்பூட்டும் லீலைகள்...



ராம பக்தனின் தூய இதயம்...



அம்பாளின் அருள் பார்வை...

ஊஹ்ஹூம்... இவை எதுவும் அல்ல!
நீங்கள் சற்றும் எதிர்பாராத இனிய ஆச்சர்யமாக மலரப் போகும் அட்டைப்படக் கட்டுரையைத் தவறவிடாதீர்கள்!

விலை ரூ.100. கூரியர் மூலம் பெற ரூ.30 சேர்த்து எம்.ஓ. அல்லது டி.டி. அனுப்பவும். உள்ளூர் ஏஜெண்டிடமும் பதிவு செய்யலாம்.

வட்டமேஜை

'**ரா**மர் பாலத்தைக் காப்பதே பகுத்தறிவு!' - கல்கியின் தலையங்கம் போலி பகுத்தறிவுவாதிகளுக்கு நல்ல தொரு பாடம்.


- கே.ரெங்கநாதன், திருவாரூர்

இந்துக்களின் மனத்தைப் புண் படுத்துவது கலைஞர் போன்ற பழுத்த அரசியல்வாதிகளுக்கு அழகல்ல!

- என்.பாலகிருஷ்ணன் மதுரை

இயற்கை சமச்சீர் நிலையின் பாதுகாப்புக்கும், சுற்றுச்சூழலுக்கும் பாது காப்பாக ராமர் பாலம் உதவுகிறது எனில் அதனைப் பாதுகாப்பதே பகுத்தறிவு.

- எம்.இராஜேந்திரன், லால்குடி



ஆசிரியர் பக்கம் சிந்திக்கத் தூண்டிய 'சூப்பர் டென்'.

- ச.ஆ.கேசவன், கழுகாசலபுரம்

- கா.சங்கர், சாலை அகரம்

நல்லதொரு

கருணாநிதி பற்றிய இந்த வார கார்ட்டூன் கலகல.

- வி.என். கதிர்வேல், வேலூர்

- என்.எஸ்.தாஸ், ஸ்ரீவில்லிபுத்தூர்

சில மாதங்களுக்கு முன்பு ராமர் பாலம் இயற்கையானது என்று செய்தி வெளியிட்ட நீங்கள், தலையங்கத்தை மட்டும் ஏன் முரண்பாடாக எழுதினீர்கள்?

- டாக்டர் எம்.செல்வராஜ், மதுரை

விஜயகாந்தும் சரத்குமாரும் கறுப்புப் பணத்தை மறைக்க அரசியல் நடத்தாமல் இருந்தால் சரி!

- முரளீதரன், மதுரை - 3

விஜயகாந்தின் கொள்கைகளைவிட சரத்குமார் கொள்கைகள் நடைமுறைக்குச் சாத்தியமானவை.

- எஸ்.சங்கர், மதுரை

'**கா**ட்டாமணக்கு' கதை மனத்துக்குள் நம்பிக்கை வளர்க்கிறது.

- பா.அச்சுதன், வயலூர்

காதல் பொன்மொழிக் கதைகளைப் படிக்கும்போது இனம்புரியா மெல் லுணர்வு மனத்தைக் கவ்வுகிறது!

- ஏ.பி.எஸ்.ரவீந்திரன், நாகர்கோவில்

- க.இந்துமதி, நெய்வேலி

ஸ்வீட் போஸ்ட்

"**த**ப்பான விஷயங்களை டப்பிங் ஃபீல்டுல பார்க்க முடியாது. மற்றவர்களுக்கு விட்டுக் கொடுக்கறதும் நடக்கும்" என்று டப்பிங் ஆர்ட்டிஸ்ட் தேவி சொன்னதைப் படித்தபோது மகிழ்ச்சியாக இருந்தது.

- தர்மாபதி, சென்னை

- யாழினி பர்வதம், சென்னை

‘எங்கள் கட்சி ஆட்சிக்கு வரும்’ என்று சரத்குமார் சொல்வது சிறுபிள்ளைத்தனமா னது.

- லிங்கேசன், மேலகிருஷ்ணன் புதூர்

- இந்திரன், நாகர்கோயில்

- ரேவதிப்ரியன், ஈரோடு

‘பகுத்தறிவுக்கு எட்டாத பந்து’ அத்தனையும் முத்து. போலி பகுத்தறிவுவாதிகளுக்குச் சரியான சவுக்கடி.

- எஸ்.ஆர்.மணியன், துறையூர்

‘ஸ்ரீலலிதா’ பகுதி இறையருளின் ஊற்று நீர், ஆன்மிகம் கமழும் அற்புதம்.

- எஸ்.கோபாலன், நங்கநல்லூர்

‘பணத்துக்காகப் படத்தை ஒப்புக்கொள்வதில்லை’ என்று சொன்ன மதுஅம்பாட் வித்தி

பாடம்!

யாசமானவர்.

- சுந்தரவடிவு, திருச்சி

தேவைகளைக் குறைப்பதே வாழ்வின் தேவை - அருள்வாக்கு அருமை!

- பிரகாஷ், பொன்மலை

‘ஃபோலிக் ஆசிட்’டில் இவ்வளவு விஷயங்கள் இருக்கா!

- மதியழகன், கரூர்

‘தகுதியிருந்தும் தற்கொலை ஏன்?’ கட்டுரை கண்டேன். தற்கால ஆசிரியர்கள், மாணவ - மாணவியர் மீது அன்பு காட்டாமல், அதிகாரம் காட்டுவதுதான் இதற்கெல்லாம் காரணம் என்று டாக்டர் ரங்கராஜன் கூறிய கருத்து உண்மையே!

- அ.முரளிதரன், மதுரை

- மல்லிகா அன்பழகன், சென்னை

கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ்
பிரைவேட் லிமிடெட்டிற்காக
பரதன் அச்சகத்தில்
அச்சிட்டு வெளியிடுபவர்:
லக்ஷ்மி நடராஜன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

ஆசிரியர் :
சீதா ரவி
தலைமை உதவி ஆசிரியர் :
மு.மாறன்
ஆசிரியர் குழு :
சா.ஜெயராஜ், ஆரணி யுவராஜ்
வடிவமைப்பு :
எஸ்.ஸ்டீஃபன், எம்.மோகன்,
ச.கார்த்திகேயன்

தொலைபேசி :
2225 1522, 2225 0623,
2225 1324
தொலைநகல் :
044 - 22251021
மின்னஞ்சல் - ஆசிரியர் குழு :
kalki@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com
கல்கி இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

சந்தா விவரம் - உள்நாடு :
ஒரு வருடம் : ரூ. 440/-
ஆறு மாதம் : ரூ. 220/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 65 யு.எஸ்.டாலர்

**Bharathan Publications
Private Limited,**
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 032.





நியாயமா

இந்தியாவில் விளம்பர வர்த்தகத்தைக் கண்காணிக்க விளம்பரக் கவுன்ஸில் ஒன்று இருக்கிறது. வழக்கறிஞர்கள் தவறு செய்தால் தட்டிக்கேட்க பார் கவுன்ஸில் என்று வைத்திருக்கிறார்கள். பத்திரிகைகள், பொது மக்களுக்கு எதிராகச் செயல்பட்டாலோ, பத்திரிகையாளர்கள் மீது புகார் வந்தாலோ, பத்திரிகைகள் நடுநிலையின்றியோ பொய்யாகவோ செய்தி வெளியிட்டாலோ, அதை விசாரிக்க ப்ரெஸ் கவுன்ஸில் இருக்கிறது. இவற்றைப் போல சேவை மனப்பான்மையுடன் செயல்பட வேண்டிய மருத்துவர்களுக்கு நன்னடத்தை விதிகளும், நெறிமுறைகளும் உருவாக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு டாக்டரும் தங்கள் தொழிலைத் தொடங்குவதற்கு முன், அந்த நன்னடத்தை விதிகள்படி உறுதி மொழி ஏற்க வேண்டும்.

நன்னடத்தை விதிகள் மீறப்பட்டு, தர்மங்கள் எட்டி உதைக்கப்படும் நிலையில் இந்திய மருத்துவச் சங்கம் தலையிடும். இதனுடைய கிளை அமைப்புகள் எல்லா மாநிலங்களிலும் உள்ளன. ''மருத்துவத் தொழிலைப் பொது மக்களுக்கு எதிராகப் பயன்படுத்தக் கூடாது; மருத்துவ உதவி செய்வதில் இன, மத, சமூக ஏற்றத் தாழ்வுகளைப் பார்க்கக் கூடாது; நோயாளியின் நோய் ரகசியங்களைப் பாது காக்க வேண்டும். மருத்துவர்கள் மருந்துகளை விற்பனை செய்வதில் ஈடுபடக் கூடாது என்று நிறைய நன்னடத்தை விதிகள் உள்ளன. இவற்றை மீறும் மருத்துவர்கள் மீது, இந்திய மருத்துவச் சங்கம் விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்கும். இந்தச் சூழ்நிலையில், சமீபத்தில் மருத்துவர் ராமமூர்த்தி என்பவர், மருந்து மற்றும் மருத்துவ உபகரணங்கள் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றுக்கு மூலதனம் திரட்ட, 5000 தமிழக மருத்துவர்களிடம் பங்குத் தொகையாக ஆளுக்கு 25,000 ரூபாய் பெறுவதற்கு எடுத்துள்ள முயற்சி, மருத்துவ உலகத்தில் பெரிய பரபரப்பை உண்டாக்கியுள்ளது. 'ரெஜிலிக்ஸ் டிரக்ஸ் லிமிடெட்' என்ற நிறுவனத்தின் பிரமோட்டராக இருந்து இந்தப் பங்குகளைத் திரட்டத் துவங்கியிருக்கிறார் டாக்டர் ராமமூர்த்தி. கிட்டத்தட்ட 12 கோடி ரூபாய் முதலீட்டில் துவங்க இருக்கும் இந்த நிறுவனம், ஐந்து வருட காலத்தில் சுமார் 93 கோடி ரூபாய் வருமானம் ஈட்டும் என்று அதன் பளாபளா கையேடு சொல்கிறது. நன்னடத்தை விதியை மீறி, மருத்துவர்கள் மருந்து உற்பத்தித் தொழிலில் ஈடுபடுவது தர்மத்துக்கு விரோதமானது என்று குரல்கள் எழுகின்றன. மருந்து தயாரிப்புத் தொழிலில் மருத்துவர்களே இறங்கினால், அவர்கள்





''மருத்துவர்கள் மருந்து தயாரிப்பில் ஈடுபடும்போது தாங்கள் முதலீடு செய்துள்ள நிறுவனம் செழிப்பாக வளர வேண்டும் என்ற எண்ணமே மேலோங்கும். ஹோட்டல் தொழில்போல மருந்து தயாரிப்பிலும் 120 சதவிகிதம் வரை லாபம் உண்டு. அதைத் தெரிந்துகொண்டுதான் மருத்துவர்கள் இதில் இறங்குகிறார்கள். பார்மஸி படித்தவர்கள் மருந்து தயாரிப்பில் இறங்கலாம். மருத்துவர்கள் இறங்கக் கூடாது'' என்று சொல்கிறார் திண்டுக்கல்லைச் சேர்ந்த கருவியியல் நிபுணரான டாக்டர் எஸ்.பீர்முகமது.


''டாக்டர் ராமமூர்த்தி என்பவர் மருந்துவர்களைப் பங்குதாரர்களாகப் போட்டு, மருந்து தயாரிப்பு நிறுவனம் துவங்குவதில் அனுபவமுள்ளவராம். கிட்டத்தட்ட 500 மருத்துவர்களைப் பங்குதாரர்களாகச் சேர்த்து, கிராண்டிக்ஸ் என்ற நிறுவனத்தை ஏற்கெனவே நடத்திவிருக்கிறார். 70 இலட்சம் முதலீட்டில் துவங்கிய இந்த நிறுவனம் பத்து வருட காலங்களில் 46 கோடி ரூபாய் விற்பனையை எட்டியது. பங்குதாரர்களுக்கு செம லாபம். அந்த வெற்றிக் கதை பின்னணியில்தான் புது நிறுவனம் துவங்கப்படுகிறது. மருந்துகளை டாக்டர்கள் விற்கக் கூடாது என்றிருக்கிறதே தவிர, மருந்து நிறுவனத்தில் பங்குதாரர்களாக இருக்கக் கூடாது என்றில்லை'' என்கிறார் அரசு மருத்துவ அதிகாரியாக இருந்து ஓய்வு பெற்ற மருத்துவர் எம்.பாலசுப்பிரமணியம். இவர் மருத்துவ சங்கத்தின் ஒழுங்கு நடவடிக்கை குழு உறுப்பினர்.

''டாக்டர்கள் மனசாட்சிப்படியும், தர்மப்படியும் நடந்துகொள்ள வேண்டும். மருந்துகளைத் தயாரித்தால், தொழிற்சாலையிலேயே போட்டு வைத்துவிட முடியுமா?'' என்று தார்மிகக் கோபத்துடன் கேட்கிறார்

டாக்டர்ஸ்?

நிறுவனத்தின் தயாரிப்புகளையே மக்கள் தலையில் கட்டுவார்கள். காரணம் பொது நலத்தைவிட சுயநலமே முதன்மைபடுத்தப்படும் போக்கு தவிர்க்க முடியாமல் தலைதூக்கும். இதன் விளைவாக உற்பத்தியின் தரம்கூட கேள்விக் குறியாகலாம் என்ற வாதமும் உண்டு. மருத்துவர் ராமமூர்த்தி, தற்போது மருத்துவத் தொழில் பார்ப்பதில்லை என்பதை இங்கே கவனத்தில் **கொள்ள வேண்**டும்.






நரம்பியல் நிபுணர் டாக்டர் பன்னீர்.

தமிழ்நாடு மருத்துவர் கவுன்ஸில் தலைவரான மருத்துவர் பிரகாஸம் (சேலம்), ''இந்திய மருத்துவ சங்கத்தின் விதிகள் அரதப் பழசானவை. 1933ல் பிரிட்டிஷ் இந்தியாவில் உருவாக்கப்பட்டு, 1955 திருத்தப்பட்டவை. காலத்திற்கேற்றபடி பல மாறுதல்களைக் கொண்டு வர வேண்டும். உதாரணமாகத் தனிப்பட்ட மருத்துவர் மருந்து தயாரிக்கும் நிறுவனம் துவக்கக் கூடாது என்றிருக்கிறது. ஆனால், மற்ற மருத்துவர்களைப் பங்குதாரர்களாகச் சேர்த்துக் கொண்டு ஒரு லிமிடெட் நிறுவனம் துவங்கக் கூடாது என்றோ, அதில் டாக்டர்கள் பங்குதாரர்கள் ஆகக் கூடாது என்றோ விதிகள் இல்லை. எனினும், நன்னடத்தை விதிகள் மீறப்படுமானால் நடவடிக்கை உண்டு'' என்கிறார் பிரகாசம்.

ஏற்கெனவே மருத்துவர்கள் இதுபோன்ற நிறுவனம் துவங்கும்போது சர்ச்சை ஏதும் இல்லையே என்ற கேள்விக்கு, ''சமீபகாலங்களில் நுகர்வோரிடம் விழிப்புணர்வு தோன்றியிருக்கிறது. பல நுகர்வோர் அமைப்புகள் களத்தில் இருக்கின்றன. ஒரு தவறு மற்றொரு தவறுக்கு நியாயம் ஆகிவிடாது. மருத்துவர்கள் ஒன்று சேர்ந்து மருந்து தயாரிப்பு நிறுவனம் துவங்கினால், நுகர்வோர் தலையில் குறிப்பிட்ட சரக்கே திணிக்கப்படும். தரம் பற்றிய கேள்வி எழும். ஏற்கெனவே மருத்துவ தொழில் வணிகமயமாகி விட்டது. இதற்காகத்தான் நாங்கள் தனியார் மருத்துவமனைகள் மற்றும் பாலிகிளினிக்குகள் ஒழுங்குமுறை சட்டம் வேண்டும் என்று போராடி வருகிறோம்'' என்கிறார் தமிழ்நாடு நுகர்வோர் அமைப்புகள் இணையத்தின் தலைவர் துரைசிங்கம்.

''மருத்துவத் துறையில் ஆயிரக்கணக்கான கோடிகள் புரள்கின்றன. ஒரு குறிப்பிட்ட பிராண்டையே தள்ளிவிடுவது எப்போதும் சாத்தியம் அல்ல; கடும் போட்டியைச் சந்திக்க வேண்டும். மாத்திரைகளின் உற்பத்தி விலை முப்பது, நாற்பது பைசா என்றால் விற்பது மூன்று ரூபாய். அரசியல்வாதிகளின் கைக்குள் புகுந்து கொண்டு கொள்ளையடிக்கின்றன மருந்து நிறுவனங்கள். மருத்துவர்கள் இந்தத் தொழிலைத்

எந்த உள்நோக்கமும் இல்லையென்றால் மருந்துகள் தயாரிக்கும் இந்தத் தொழிலில். மருத்துவர்களை மட்டுமே நாடி பங்குதாரரர்களாக ஆக்குவது ஏன்?



துவங்குவதில் ஆபத்து என்னவென்றால், இந்த வெற்றி மற்றவர்களுக்கு வழிகாட்ட, நாடு முழுவதும் மருத்துவர்கள் குழுக்கள் அமைத்து தயாரிப்பில் இறங்கி விடுவார்கள். எதிர்காலத்தில் இது அவர்களது ஏகபோகம் ஆகிவிடும். இது நோயாளிகளுக்கு நல்ல தல்ல'' என்கிறார். மருத்துவ விற்பனைப் பிரதிநிதியாகப் பல்லாண்டுகள் இருந்து, துறை மாறியிருக்கும் நல்லகண்ணு.

தாம்பரத்தைச் சேர்ந்த டாக்டர் ரவிசங்கர் மிகக் கொதித்துப் போய், ''மருத்துவர்களை அவமானப்படுத்துவது என்று மீடியா முடிவு செய்துவிட்டது. ஏன், எங்களுக்கோ எங்கள் குழந்தைகளுக்கோ தொழில் துவங்க உரிமை கிடையாதா?'' என்று ஆவேசமாகக் கேட்டார். கிராண்டிக்ஸ் நிறுவனம் தொடர்பாக எழுந்த சசமுசாவில் சில மருத்துவர்கள் மீடியாவை கிளறிவிடுவதாகவும் சிலர் சொல்கிறார்கள்.



* கே.கே.எஸ்.எஸ்.ஆர்

இந்தச் சர்ச்சைகளைப் பற்றி ரெஜினிக்ஸ் பிரமோட்டரான மருத்துவர் ராமமூர்த்தியிடமே கேட்டோம்.

''நாங்கள் துவங்கவிருக்கும் மருந்து மற்றும் மருத்துவ சாதனங்கள் உற்பத்தித் தொழிற்சாலையின் தயாரிப்புகள் முழுவதுமே நூறு சதவிகிதம் வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்யப்பட இருப்பவை. இதனால் நமது நாட்டுக்கு அந்நியச் செலாவணி வருமானம் கூடும். எங்கள் தயாரிப்புகளை இந்தியாவில் விற்கப் போவதில்லை. எனவே, இந்திய டாக்டர்கள் எங்கள் தயாரிப்புகளைத்தான் பிரமோட் செய்வார்கள் என்ற பேச்சுக்கே இடமில்லை. நாங்கள் உள்ளூர் டாக்டர்களை அணுகியிருப்பதற்குக் காரணம் முதலீடு செய்வதற்காக மட்டும்தான். எனவே நன்னடத்தை விதிகளையோ, நெறிமுறைகளையோ மீறுவோம் என்கிற கேள்வியே எழாது'' என்று மறுக்கிறார் டாக்டர் ராமமூர்த்தி. எந்த உள்நோக்கமும் இல்லை என்றால்,

மருத்துவர்களை மட்டுமே நாடி பங்குதாரர்களாக்கவேண்டும் என்கிற எண்ணம் ஏன் எழுகிறது? பணம் முதலீடு செய்ய வசதி படைத்த எந்தப் பிரிவினரையும் அணுகலாமே?.... இந்தக் கேள்விக்குத்தான் யாரிடமும் பதிலில்லை!

தமிழக சுகாதார அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரனைத் தொடர்பு கொண்டு, 'மருத்துவர்கள் மருந்து தயாரிப்பில் இறங்குவது சரியா?' என்ற கேள்வியை முன் வைத்தோம்.

''நீங்கள் சொல்வது பற்றிய முழு விவரங்கள் என்னிடம் இல்லை. ஆனால், ஒன்று மட்டும் சொல்லிவிட முடியும். நன்னடத்தை விதிகள் மீறப்படுமானால் மருத்துவர்கள் மீது நடவடிக்கை எடுக்க மருத்துவச் சங்கம் இருக்கிறது. தொழில் துவங்குவது குறித்த அரசின் வரைமுறைகள் இருக்கின்றன. அவற்றைக் கண்காணிக்க அமைப்புகள் உண்டு. தரக்கட்டுப்பாடு மருத்துவ உலகில் மிக கண்டிப்பாகக் கடைப்பிடிக்கப்படுகிறது. எந்த விவகாரமென்றாலும் இறுதியாக நோயாளிகள் பாதிப்படைவார்கள் என்றால் அரசு அதைப் பார்த்துக் கொண்டிருக்காது'' என்றார் அவர்.

''இந்த ஒழுங்கும், வழிகாட்டுதல்களும் மருத்துவர்கள் மீது மட்டும் திணிப்பது ஆச்சர்யமாக இருக்கிறது. மருத்துவர்களைப் போல சேவை மனப்பான்மையுடன்தான் அரசியல்வாதிகள் செயல்படுவதாகச் சொல்லிக் கொள்கிறார்கள். ஆனால், அங்கே மட்டும் கப்பல்கள் வைத்துக் கொண்டிருப்பவர் கப்பல் துறைக்கு அமைச்சராகலாம். மீடியா ராஜாக்கள் தகவல் தொடர்பு அமைச்சராகலாம். மருத்துவர்கள் மட்டும் மருந்து தயாரிக்கும் தொழிலில் இறங்கக் கூடாது என்று சொல்வது எந்த வகையில் நியாயம்'' என்று கேட்கிறார்கள் சில மருத்துவர்கள். இங்கே தவறுகளையே மீண்டும் மீண்டும் முன்னுதாரணங்களாகக் காட்டி நியாயப்படுத்தப்படுகின்றன.

- ஸ்ரீநி

கலர் டீ.வி யால் குடிப்பழக்கம்

● பாஸ்கர், தஞ்சாவூர்

? சென்னை ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மாணவர்களே நோயால் பாதிக்கப்பட்டு, ஒரு மாணவி உயிரிழந்த சம்பவம் எதைக் காட்டுகிறது?

! தமிழக சுகாதாரத் துறையின் நிர்வாகச் சீர்கேட்டை மட்டுமின்றி, மருத்துவமனையின் நிர்வாகச் சீர்கேட்டையும் உணர்த்துகிறது. பல டாக்டர்கள் நோய்வாய்ப்பட்டு, ஒருவர் இறந்து போகும் அளவுக்குப் பிரச்னை பெரிதாகும் வரை என்ன செய்துகொண்டிருந்தார்கள் என்பது கே.கே.எஸ்.எஸ். ஆருக்கும், ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி டீனுக்குமே வெளிச்சம்! இருவரில் ஒருவர் கூட ராஜினாமா செய்யாதது பொறுப்பின்மையை மேலும் வளர்க்கும்.

● ப.இராம் முருகன், சிவகங்கை

? விஜயகாந்துக்கு விடுதலைப்புலிகளுடன் தொடர்பு உள்ளது என்கிறாரே சுப்ரமணியம் சுவாமி - இது குறித்து?

! 'கேப்டனுக்கு பண்ருட்டியிடம் உறவு; பண்ருட்டிக்கு எம்.ஜி.ஆருடன் தொடர்பு; எம்.ஜி.ஆர். புலிகளுக்கு உதவியது சரித்திரம். எனவே, கேப்டனுக்கும் புலிகளுக்கும் தொடர்பு உள்ளது' என்று சு.சுவாமி விளக்கமளிப்பாரோ என்னவோ! மற்றபடி இந்தக் குற்றச்சாட்டுக்கு ஆதாரம் இருப்பதாகத் தெரியவில்லை.

● அ.சுஹைல் ரஹ்மான், திருச்சி - 21

? இலவச கலர் டீ.வி. வழங்குவதால் குடிசைவாழ் மக்களிடையே குடிப்பழக்கம் குறைந்துள்ளதாகத் தலைமைச் செயலாளர் திரிபாதி சொல்கிறாரே?

! டீ.வி.யில் இடம்பெறும் (மறைமுக) மதுபான விளம்பரங்களால் குடிப்பக்கம் எல்லோரிடமுமே அதிகரித்து வருகிறது என்கிறேன் நான். டாஸ்மாக் கடைகளின் விற்பனை அதிகரிப்பது இதை உறுதிப்படுத்தும். திரிபாதி வாதத்துக்கு இந்த அளவில்கூட நிரூபணம் இல்லை.

● உமரி பொ.கணேசன், மும்பை - 37

? கண்ணுக்குத் தெரியாத ராமர் பாலத்தை இடிக்கக் கூடாது என்று கூறும் அத்வானி, பாபர் மசூதியை மட்டும் இடித்தது ஏன்?

! அன்று நடந்தது மாபெரும் தவறு. பி.ஜே.பி.க்கும் அதன் தலைவருக்கும் துடைக்க முடியாத களங்கம். ஆனால், அன்று நடந்த தவறிலிருந்து நாம் படிப்பினை பெறவேண்டுமே தவிர, அதை மற்றொரு தவறுக்கு முன்னுதாரணமாகக் கொள்ளக்கூடாது.

● ச.நாகரத்தினம், திருப்பூர் ★

? இன்றும் சாஸ்திரப்படி வாழ முடியுமா?

! ஒரு சிலர் வாழ முயன்று வெற்றியும் பெற்று வருகிறார்கள். ஆனால், சாஸ்திரப்படி வாழ்வதைக் காட்டிலும், சாஸ்திரத்தின் (விதிகளின்) நோக்கம் யாவை என்பதை உணர்ந்து வாழ்வதே முக்கியம். சடங்குகளை மட்டும் கடைப்பிடித்து, ஆன்மசுத்தத்தை விட்டுவிட்டால், பழத்தை எறிந்து விட்டுத் தோலைத் தின்றதாகும்!

● எஸ்.முரளி, குறிஞ்சிப்பாடி

? ராமர் பற்றிய கருத்து வேண்டுமானால், வால்மீகியிலிருந்து பரமாச்சார்யார் வரை உள்ள ஞானிகளின் அபிப்பிரா



★ இதயத்தில் இடம்!

குறைந்துள்ளதாமே?

தராசு

நீங்கள் கேட்டவை



✱ படமும் பாடமும்!



✱ சகாய கருத்து!



✱ முப்பாட்டன் தொடர்பு!

யத்தைப் பார்க்க வேண்டுமே தவிர, நேரு முதல் கலைஞர் வரை உள்ள நாத்திகவாதிகளின் கருத்தைப் பார்க்கக் கூடாது என்று துக்ளக் ஆசிரியர் சோ கூறியிருப்பது பற்றி...?

! சிலர் கருத்தை மட்டும் பார்த்து, பிறர் கருத்தைக் கேட்கவோ, பார்க்கவோ மறுப்பது சரியல்ல. அனைத்துக் கருத்துகளையும் எடைபோட்டு, மாற்றுக் கருத்தையும் மீறி நமது நிலைப்பாட்டில் உறுதிகொள்வதே அழகு; கம்பீரம்; நம் கருத்துக்கும் வலிமை.

● வே.சித்ரா,
கும்மிடிப்பூண்டி

? மத்திய - மாநிலங்களை ஆளும் தி.மு.க. கூட்டணிக் கட்சியினரே கோரிக்கைகளுக்கு 'பந்த்' நடத்துவது எதைக் காட்டுகிறது?

! உச்சநீதிமன்றம் தடைவிதித்த பிறகும் 'பந்த்'தை உண்ணாவிரதமாக்கி, குண்டர்களைக் கட்டவிழ்த்துவிட்டு, 'என்ன ஆகுமோ?' என்ற 'திக் திக்'கை ஏற்படுத்தி, ஜனநாயகத்தை 'பய'நாயகமாக்கி விட்டார்கள் என்பதைத்தான்.

● ஜோ. பன்னீர்செல்வம்,
சென்னை - 12


? ''கடவுள் மறுப்பும் ஹிந்து மதம்தான்'' என்று வைரமுத்து கூறுவது சரியா?

! சரிதான், கடவுளை மறுத்தாலும் உண்மையைத் தேடு; தர்மத்திலிருந்து விலகாதே என்று ஹிந்து மதம் உரிமம் வழங்குகிறது. பலர், முதல் பாதியை மட்டும் ஏற்று, மறுபாதியைப் புறக்கணிப்பதுதான் இங்கே பிரச்னை.

● ஏ.எஸ்.யோகானந்தம்,
ஔவையார்பாளையம்

? ''என் தலையே போய்விட்டாலும்கூட, தமிழகத்துக்கு நான் செய்திருக்கும் தொண்டு, பணி, தியாகம் இவற்றால் எதிர்காலத்தில் இந்தியத் தபால் தலையில் என் தலை இடம்பெற்றே தீரும்'' என்று முதல்வர் கூறியிருப்பது பற்றி?

! கலைஞர் கருணாநிதி, தமிழ



✱ களங்கத்தின் கறை!



* மறுப்புத் தத்துவம்!



* வண்டவாளம்...



* ... தண்டவாளம்!

கத்துக்கும் தமிழுக்கும் செய்துள்ள தொண்டு வெறும் ஐந்து ரூபாய் மதிப்புள்ளது அல்ல. தபால் தலையில் இடம் பெறுவது பெரிதல்ல. கோடிக்கணக்கான தமிழர் இதயத்தில் இடம்பெறுவார், நிச்சயம்.

● மு.செந்தில்குமார், திருச்சி

? சிசேரியன் அதிகரிப்புக்கு சினிமா, டி.வி. சீரியல்கள்தான் காரணம் என்று தமிழக சுகாதாரத் துறை அமைச்சர் கூறியுள்ளாரே?

! சினிமா, டி.வி. ஒரு காரணமாக இருக்கலாம்... ஆனால், அது மட்டுமே காரணம் என்று கூறிவிட முடியாது. குழந்தையின் ஜாதகம் நல்லபடியாகக் கணிக்கப்பட வேண்டும் என்பதற்காகக் கூட, பிறக்கும் நேரத்தை நிர்ணயித்து, அதற்கேற்ப சிசேரியன் செய்துகொள்கிறார்கள் என்கிறபோது, மக்களின் மூடநம்பிக்கை, டாக்டர்களின் பேராசை ஆகியவையும் காரணம்.

● க.சங்கரநாராயணன், பெங்களூர் - 40 ❒

? வாரத்துக்கு ஒரு மணி நேரம் இந்தியர்களாகிய நாம் அனைவரும் ஏதோ ஒரு வகையில் சமூக சேவையில் ஈடுபட்டால் நம் நாடு சொர்க்கபூமியாக மாறும் அல்லவா?

! அவ்வாறு ஈடுபடுவோரின் மனங்கள் மகிழ்ச்சி பூமியாக மாறுமேயொழிய, பாரதம் சொர்க்கபூமியாக மாறுவதற்கு அது மட்டுமே போதாது. அரசியல் கலப்பில்லாத பொருளாதார முன்னேற்றமும் அதற்கு அடிப்படையான அர்த்தமுள்ள கல்வியும் இருந்தால் மட்டுமே அது நடக்கும்.

● க.நா.இராஜேஸ்வரன், மொரட்டுப்பாளையம்

? ஆசிய கோப்பையை வென்ற இந்திய ஹாக்கி அணியினருக்கு எந்தப் பாராட்டும் பரிசும் கிடைக்கவில்லையே என்று நிர்வாகிகள் ஆதங்கப்பட்டிருப்பது நியாயம் தானே?

! கிரிக்கெட்டில் ரசிகர்களுக்குச் சில நிமிடங்களுக்கு ஒரு முறை ஏற்படும் த்ரில்லை ஹாக்கியில் எதிர்பார்க்க முடியாது. பெருவாரியான ரசிகர்கள் எப்பக்கமோ, ஸ்பான்ஸர்களும் அப்பக்கமே. பணம் குவியும்போது பரிசும் பாராட்டும் தாராளமாவது இயல்பு. ஆனால், அரசுகூட ஹாக்கியை இஞ்சிப் பச்சடியாக்குவது அக்கிரமம்தான்.

● சி.கார்த்திகேயன், சாத்தூர்

? 'கக்கன்' என்றொரு படமும் எடுக்கப்போகிறார்களாமே?

! அவரது எளிமையைப் போற்றிப் படமெடுப்பதோடு நில்லாமல், பின்பற்றவும் அரசுப் பொறுப்பில் உள்ளோர் முன்வர வேண்டும்.

● பொன்விழி, அன்னூர்

? 'நுணலும் தன் வாயால் கெடும்' - உதாரணம் யார்?

! தங்கர்பச்சான். சேரனை கால்ஷீட் தராததற்காகத் திட்டப் போக, தங்கரின் வண்டவாளங்கள் சேரனால் தண்டவாளம் ஏற்றப்பட்டதுதான் கோலிவுட்டின் தற்போதைய ஹாட் டாபிக்! ●

❒ ரூ.100/- பரிசு பெறுபவர்:

க.சங்கரநாராயணன்,
பெங்களூர் - 40

*** ரூ.50/- பரிசு பெறுபவர்:**

ச.நாகரத்தினம், திருப்பூர்

As per BIS,
IS:2888-1983.



உத்திரவாதமான மேனிப் பராமரிப்பு
தலைமுறை தலைமுறையாக

50 ஆண்டுகளுக்கும் மேலாக, மேனிப் பராமரிப்பில் ஸின்த்தால் நம்பகமான சோப் என்று தொன்றுதொட்டு பெயர் பெற்றுள்ளது. ஸின்த்தால் சோப் மேனியின் எழிலை மேம்படுத்துகிறது. இதன் ஒப்பற்ற நறுமணம் நாள் முழுவதும் நீடித்து உங்களை புத்துணர்வுடன் வைக்கும். எனவே ஸின்த்தால் பல தலைமுறைகளாக விசுவாசமான வாடிக்கையாளர்களை உருவாக்கியதில் ஆச்சரியமில்லை.



மேனிப் பராமரிப்பு என்றென்றும்

Orchard B GCPMSOCN 1167/06

பெண்களே



தலை நரைப்பது, தோல் சுருங்குவது போன்றவற்றோடு வயோதிகத்தின் நெடுநாளைய அடையாளமாக இருக்கிறது 'ஆர்த்தரைட்டிஸ்' என்கிற மூட்டுத் தேய்மான நோய். இது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் ஒவ்வொரு வருடமும் அக்டோபர் 12-ம் தேதியை, உலக சுகாதார நிறுவனம் ஆர்த்தரைட்டீஸ் தினமாக அறிவித்துள்ளது. ஆர்த்தரைடீஸின் வகைகள், சிகிச்சைகள், தடுக்கும் முறைகள் பற்றி நம்மிடம் பகிர்ந்துகொண்டார் சென்னை அண்ணாநகரைச் சேர்ந்த 'சௌந்தரபாண்டியன் எலும்பு மற்றும் இணைப்பு (Joint) ஆராய்ச்சி நிறுவன'த்தின் இயக்குநர் டாக்டர் எஸ்.சிவமுருகன்.

“நம்முடைய காதின் வெளிமடல் போல நம் எலும்பு மூட்டுப் பகுதியின் இணைப்பைச் சுற்றி, ஒரு தசைப்பகுதி இருக்கும். அந்தப் பகுதி மிருதுத்தன்மை இழந்தால் எலும்புகள் உராய்ந்து வலியும், தேய்மானமும் ஏற்படும். இதைத்தான் ஆர்த்தரைட்டீஸ் என்கிறோம். இதில் இரண்டு வகை உண்டு. ஒன்று ஆஸ்டியோ ஆர்த்தரைட்டீஸ், இரண்டாவது ருமட்டாய்டு ஆர்த்தரைட்டீஸ்.

ஆஸ்டியோ என்பது வயதானவர்களுக்கு வரக்கூடிய எலும்புத் தேய்மானம். ஐம்பது வயதில் உடல் தளரும்போது எலும்புகள் பலவீனமடைகின்றன. சரியான உணவு எடுத்துக்கொள்வதன் மூலமும், உடல் எடையைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொள்வதன் மூலமும் இதனை கட்டுக்குள் கொண்டு வரலாம்.

ருமட்டாய்டு என்பது பரம்பரையாக வரக்கூடியது. இதற்கு வயது ஒரு பொருட்டேயில்லை. 22 முதல் 30 வயதுக்குள்ளாகவே இதன் அறிகுறி தெரிய ஆரம்பித்து விடும்.

இருதயம், சர்க்கரை நோய் போன்றவற்றுக்குக் கொடுக்கும் முக்கியத்துவம் ஆர்த்தரைட்டீஸுக்கும் தரப்பட வேண்டும். நல்ல ஆரோக்கியமான இதயம் உள்ளவர்கள் கூட ஆர்த்தரைட்டீஸ் காரணமாக நடக்க முடியாமல் இருக்கிறார்கள்.

இந்நோய் பற்றி சில தவறான நம்பிக்கைகள் இருக்கின்றன. இதில் தெளிவானாலே இதிலிருந்து தப்பித்துக் கொள்ளலாம்.

'எலும்புத் தேய்மானம் இருப்பதால் நடந்தாலோ, வேலை செய்தாலோ இன்னும் தேய்ந்து விடுமா?'- இது பலர் என்னிடம் கேட்கும் கேள்வி.

நம்முடைய உடல் அசைவுக்கு ஏற்றவாறுதான் உடல் அமைப்பு இருக்கிறது. அதனால் நடப்பதோ, வேலை செய்வதோ

ஒருபோதும் தேய்மானத்தைத் தந்து விடாது. அசைவே இல்லாமல் ஒரே இடத்தில் இருந்தால், உடல் எடை கூடி அதுவே மூட்டுக்கு முதல் எதிரியாகி விடுகிறது. தினமும் நடைப்பயிற்சி செய்வது மிக அவசியம். நடக்கும்போது வலித்தால் மட்டும் கொஞ்சம் ஓய்வெடுத்துக் கொள்ளலாம்.

'மூட்டு மாற்று சிகிச்சை செய்து கொள்வதால் வேறெதுவும் பின்விளைவுகள் ஏற்படுமா?'- இது நான் சந்திக்கும் அடுத்த முக்கிய கேள்வி.

மூட்டு மாற்று சிகிச்சை என்பது வேறொரு மூட்டினைப் பொருத்துவது அல்ல. கெட்டுப்போன சில எலும்புகளை எடுத்துவிட்டு அதற்குப் பதிலாகச் செயற்கை உபகரணங்களை அங்கு பொருத்துவது. இந்தச் சிகிச்சையினால் பலரும் பயனடைந்து சாதாரண வாழ்க்கை

பின்பற்றி பலர் பயனடைந்துள்ளார்கள். இதற்கான சிகிச்சை முறை நவீனமாகவும், முன்னேற்றமாகவும் இருக்கிறது. நாங்கள் பலருக்கு யோகாசனம் செய்யச் சொல்கிறோம்.

எதுவாக இருந்தாலும் தொடக்கத்திலேயே சிகிச்சையை ஆரம்பித்தால் விரைவான குணம் கிடைக்கும். கை வைத்தியம், அக்கறையின்மை போன்றவை நம் உறுப்புகளை மோசமாக்கிவிடும்.

ஒவ்வொரு வருடமும் உலக சுகாதார நிறுவனம் ஆர்த்தரைட்டீஸ் தினத்தன்று ஒரு குறிக்கோளை முன் வைக்கிறது. இந்த வருடம் 'சாத்தியமாகும் சிறு விஷயங்கள்' (little things matter) என்பதை முன் வைத்துள்ளது.

முன்புபோல் உற்சாகமாக இயங்க



★ டாக்டர் எஸ்.சிவமுருகன்


டார்கெட்!

-ஆர்த்தரைட்டீஸ் அபாயம்

வாழ்கின்றனர். உடல்நிலை, வயது, பல பரிசோதனைகள் ஆகியவற்றின் பின்னணியை வைத்தே ஒருவருக்கு இந்த அறுவை சிகிச்சை செய்யப்படுகிறது.

'அலோபதி முறையில் மூட்டுத் தேய்மானத்துக்குச் சரியான சிகிச்சை உள்ளதா?' என்பது மூன்றாவது கேள்வி.

அலோபதி சிகிச்சை முறையைப்



முடியவில்லை என்கிற சோர்வை விட்டு விட்டு நடப்பது, தினசரி வேலைகளை நாமே செய்வது போன்ற சின்ன விஷயங்களிலிருந்து தொடங்கினால் எதுவும் சாத்தியமாகும்'' என்கிற டாக்டர் சிவமுருகன் கூறும் மூன்று முக்கிய விஷயங்கள்:

★ ஆர்த்தரைட்டீஸ் அதிகமாக பெண்களையே தாக்குகிறது.

★ எனவே திருமணத்துக்குப் பிறகு எடை கூடுவதைப் பெண்கள் கண்டிப்பாகத் தவிர்க்க வேண்டும்.

★ உடல் உழைப்புத் தவிர, உடலை 'ரிலாக்ஸ்' செய்ய உடற்பயிற்சி மிகவும் அவசியம்.

- ஜா.தீபா



கல்கி



2007 அக்டோபர் 14
சர்வஜித் புரட்டாசி 27
மலர் : 66
இதழ் : 11


தமிழ்த்திரு
நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி
பாப்பா - பாரதியார்.


சிறுபான்மை அரசின் கொடுங்கோன்மை!

"பந்த் நடத்தக்கூடாது என்றுதானே உச்சநீதிமன்றம் கூறியது? உண்ணாவிரதம் இருக்கக்கூடாது என்று சொல்லவில்லையே!'' என்று பேசுவது முதல்வரின் வயதுக்கும் அந்தப் பதவியின் கௌரவத்துக்கும் பெருமை சேர்க்காத விதண்டாவாதம்!

உச்சநீதிமன்றம், ராமர் பாலத்தை இடிக்காமல் மாற்று மார்க்கத்தில் சேது சமுத்திரத் திட்டத்தை நிறைவேற்ற இயலுமா என்பது குறித்து அறிக்கை தர மத்திய அரசுக்கு மூன்று மாத அவகாசம் தந்திருக்கிறது. நீதிமன்றத்தின் இந்த ஆணையை மதித்து நடப்பதில் மத்திய அரசிலுள்ள தி.மு.க. அமைச்சர்களுக்கு மட்டும் என்ன இக்கட்டு இருக்க முடியும்? பல திட்டங்கள் வருடக் கணக்கில் தாமதமாகிறபோது அதற்குக் காரணம்கூட தராமல் அரசு அலட்சியம் காட்டுகிறது. டி.ஆர்.பாலுவின் அமைச்சகப் பொறுப்பில் உள்ள சென்னை கத்திபாரா மேம்பாலம் கட்டும் பணிகூட மீண்டும் தாமதமாகியிருக்கிறது. அதற்கு சிமெண்ட் பற்றாக்குறை தொடங்கி, கட்டுமான மாறுதல்வரை பல காரணங்கள் கூறப்படுகின்றன. இந்தத் தாமதத்தால் சென்னைவாசிகள் ஏற்கெனவே அனுபவித்துவரும் போக்குவரத்து இடையூறு நீட்டிக்கப்படப்போகிறது.

ஆனால், சேது சமுத்திரத் திட்டத்தின் மூன்று மாத தாமதத்தைப் பொறுக்க முடியாமல் பொங்கியெழுந்து நாட்டையே இரண்டாக்கிக் கொண்டிருக்கிறது தி.மு.க.! அக்கட்சியின் ஆதரவால் ஆட்சியில் இருக்கின்ற பாவத்துக்காக, மத்திய அரசும் கருணாநிதி முடிவை ஆதரித்ததன் மூலம், உச்சநீதிமன்றத்தை அவமதித்துள்ளது.





நீதிமன்றங்களை அரசே மதியாத நாட்டில், அமைதியும் மக்களின் பாதுகாப்பும் அச்சுறுத்தலுக்குள்ளாகின்றன. எப்பேர்ப்பட்ட பெரும்பான்மை ஜனநாயக ஆட்சியும் நீதியை மதியாதபோது கொடுங்கோன்மையாகத்தான் மாறும். தமிழ்நாட்டிலோ ஒரு சிறுபான்மை அரசே கொடுங்கோன்மை அரசாகி, போக்குவரத்து, வர்த்தகம், சராசரி வாழ்க்கை என அனைத்தையும் ஸ்தம்பிக்கச் செய்திருக்கிறது! கட்சித் தொண்டர்களின் வன்முறையும் நிகழ்ந்திருக்கிறது.

உச்சநீதிமன்றம் பந்த் நடத்தக்கூடாது என்று ஆணை பிறப்பித்த உடனேயே முதல்வர் தி.மு.க. தொழிற்சங்கத் தலைவர்களையும் கூட்டணிக் கட்சித் தலைவர்களையும் அழைத்துப் பேசி, பந்த் வாபஸ் பெறப்பட்டிருக்க வேண்டும். அப்படி கௌரவமாக நடந்துகொள்ளாமல், உண்ணாவிரதத்துக்கு அறைகூவல் விடுத்ததன் மூலம், வழக்கு நிலுவையில் உள்ள நிலையில் உச்சநீதிமன்றத்தை மீண்டும் ஒரு முறை அவமதித்திருக்கிறார் முதல்வர்.

''நீதிபதிகள் லஞ்ச-ஊழலுக்கு அப்பாற்பட்டவர்களல்ல!'' என்று உச்சநீதிமன்றம் குறித்துக் கூறிய டி.ஆர்.பாலு, சென்னை உயர்நீதிமன்றம் பந்துக்குச் சாதமாகத் தீர்ப்பு அளித்ததை மறந்துவிட்டுப் பேசியிருக்கிறார்!

''ஞாயிறு அன்று உச்சநீதிமன்ற அமர்வுக்கு அவசியம் என்ன?'' என்று கேட்பதும் ''சோனியாவும் பிரதிபா பாட்டீலும் இருக்கும்வரை தமிழகத்தில் ஜனாதிபதி ஆட்சி வராது'' என்று கொக்கரிப்பதும் மத்திய அரசின் பெரும்பான்மை பலத்தைத் தி.மு.க. நிர்ணயிக்கிறது என்கிற ஒரே தைரியத்தில்தான்.

இதையெல்லாம் மத்திய அரசு மௌனமாகப் பொறுத்துக் கொண்டிருப்பதும் தி.மு.க.வை முறைத்துக்கொள்ள முடியாது என்கிற அச்சத்தில்தான்; பதவி ஆசையில்தான்.

'மக்களுக்காகப் பதவியில் இருக்கிறோம்; அவர்களுக்கு உகந்ததைச் செய்ய வேண்டும்' என்பதை மறந்துவிட்டு, தி.மு.க. தலைவர் தவறிழைத்துவிட்டார். தாம் ராமபிரானை இழித்துப் பேசியதை மூடி மழுப்புவதற்காக 'சேது சமுத்திரத் திட்டத்துக்கு முட்டுக்கட்டை முயற்சி' என்று பிரச்னையை திசை திருப்பி, அந்தப் பொய்யை நிலைநாட்டும் ஆர்வத்தில் ஜனநாயக மரபுகளைக் காவுகொடுத்துவிட்டார்.

ஆட்சியிலிருப்பவர்கள் மன அடக்கத்துடன் செயல்பட வேண்டும் என்று கூறியிருப்பது தனிமனித உயர்வுக்காக மட்டுமல்ல; மன அடக்கமே சீரிய சிந்தனைக்கு அடிகோலி நாட்டை உயர்த்த முடியும். ●

'மச்சம்' என்றால்

★ ஆர்.அஜிதா, கம்பம்

அமர காதல்களில் தங்கள் மனம் கவர்ந்த காதல் எது...?

கண்ணுக்குத் தெரியாத காதலனை, பாவை நோன்பிருந்து, வாரணமாயிரம் கனவுகண்டு, அந்த ஆரா அமுதனை ஆற அமரக் காதலித்து, தன் வலைக்குள் சிக்க வைத்த ஆண்டாளின் காதல், என்னைக் கவர்ந்த காதல். ரோமியோ-ஜூலியட், லைலா -மஜ்னு, அம்பிகாபதி-அமராவதி மூன்றுமே டிராஜிடியில் முடிந்தது... பெற்றவர் பெரியாழ்வார் சம்மதத்துடன், அரங்கனை மணந்த ஆண்டாளின் காதல்தான் காமெடியாக (சுபமாக) கல்யாணத்தில் முடிந்தது.

★ என்.குப்புசாமி, கோவை

தாங்கள் விரும்பிக் கொண்டாடும் பண்டிகை எது, ஏன்..?


அவதாரங்களில் குஷியான அவதாரம் கிருஷ்ணாவதாரம். நவரஸங்களில் குஷியானது நகைச்சுவை. பகைச்சுவை நரகாசுரன் நகைச்சுவை கிருஷ்ணனால் அழிக்கப்பட்டதைக் கொண்டாடும் தீபாவளி. இதிகாச கிருஷ்ணனை என்.எஸ். கிருஷ்ணன் என்றும் செல்லமாகக் கூறலாம். N.S. for நகைச்சுவை.

★ மு.ரா.பாலாஜி, கோலார் தங்கவயல்

இவரிடம் கைகுலுக்க முடியவில்லையே என்று நீர் வருந்தும் மனிதர் யார்...?



கைகுலுக்க முடியவில்லையே என நான் ஏங்குவது மனிதரிடம் அல்ல; மகாவிஷ்ணுவிடம். காரணம் புராணக் கதை: இதோ மழலைப் பிள்ளையார், விளையாட்டாக மகாவிஷ்ணுவின் சக்கரத்தை எடுத்து வாய்க்குள் போட்டுக்கொண்டுவிட்டாராம். சக்கரத்துக்கு ஸ்டெப்னி இல்லாத மகாவிஷ்ணு, சமயோஜிதமாகத் தனது நான்கு கைகளால் இரண்டு காதையும் பிடித்தவாறு உட்கார்ந்து எழுந்து, உட்கார்ந்து எழுந்து, கணபதியின் முன்பு காமெடி செய்தாராம் (தோர்பி என்றால் நான்கு கர்ணம் என்றால் காது... இந்த தோர்பி கர்ணம்தான் சுருங்கித் தோப்புக் கரணம் ஆகிவிட்டது) விஷ்ணு காட்டிய வேடிக்கையைப் பார்த்து, விநாயகன் விழுந்து விழுந்து சிரிக்க, அவர் வாய்க்கு எட்டிய சக்கரம் கீழே விழுந்து விஷ்ணுவின் கைக்கு எட்டியதாம். சிறுவர்கள் இரசிக்கும் 'ஸ்லாப்ஸ்டிக் காமெடியை'க் கண்டுபிடித்ததற்காக மாவிஷ்ணுவின் நான்கு கைகளையும் பிடித்துக் குலுக்கி 'வெல்டன் விஷ்ணு' சொல்ல வேண்டும் என்பது எனது நீண்ட நாள் மசக்கை.



★ பி.சிவா, பாளையங்கோட்டை

உடம்பில் மச்சம் இருந்தால் யோகமா...?

என் நண்பனுக்கு மச்சான் ஒருவன் இருக்கிறான். அவன் மச்சான் இல்லை மச்சன். அந்த அளவுக்கு அவனுக்கு முதுகில் யாரோ பேனாவால் 'ஏப்ரல் ஃபூல்' இங்க் தெளிச்சா போல மச்சம் மானாவாரியாகச் சிந்திக் கிடக்கும். எல்லோருக்கும் உடம்புல மச்சம் என்றால், இவனுக்கு மச்சத்துக்கு நடுவுல கொஞ்சம் உடம்பு இருக்கு. ஆயிரம் மச்சம் இருந்தும், பாவம் இவனுக்கு 'நோ பீஸ் ஆஃப் யோகம்'. தெருவில் போட்ட கோலம் தடுக்கி, காலை முறித்துக்கொள்வான். இவன் பேனாவுக்கு இங்க் போடும்போது பூகம்பம் வரும். ஒருவேளை மச்சத்துக்கான



அதிர்ஷ்டமா?

யோகத்தையெல்லாம் போன ஜென்மத்தி லேயே வினியோகம் செய்துவிட்டானோ என்னவோ?

★ **சம்யுக்தா, சென்னை**

'தீமை' செய்யும் வரம் உங்களுக்குக் கிடைக்கிறது... என்ன தீமை செய்வீர்கள்?

எனது அடுத்த நாடகத்துக்கான 'தீமை'(Theme) முடிவு செய்வேன்.

★ **அ.முரளீதரன், மதுரை**

ஆண்கள் தமது 90-வது வயதிலும் தாம்பத்ய உறவு வைத்துக்கொள்ளலாம் என்று அமெரிக்க மருத்துவர்கள் கண்டு பிடித்துள்ளனராமே...?

அதே கிட்டத்தட்ட 90-வது வயதில், தமது தள்ளாமையையும் பொருட்படுத் தாது மூதறிஞர் இராஜாஜி அமெரிக் காவுக்குத் தூது சென்று, அதிபர் கென் னடியிடம் அணு ஆயுதத் தயாரிப்பைக் கைவிடுமாறு உலக மக்கள் சார்பாக வற்புறுத்தினார். அதே 90-வது வயதில் மொரார்ஜி தேசாய் ஒரு கப்பலிலிருந்து இன்னொரு கப்பலுக்கு நூலேணி வழி யாகத் தீரமாகத் தாவிச் சென்று இளைஞர்களையும் திகைக்க வைத்தார். அதே 90-வது வயதில் பி.ஜி.வுட் ஹவுஸ் சுறுசுறுப்பாக நாவல் எழுதி நகைக்க வைத்தார். அதே 90-வது வயதில் பிராட் மேன், டெண்டுல்கருக்கு கிரிக்கெட் நுணுக்கங்களைக் கற்றுக் கொடுத்தார்.

மேற்கூறிய சாதனைகள் Sucessful - True Stories. அமெரிக்க மருத்துவரின் கண்டுபிடிப்பு தேவையில்லாத Sexcess-ful ficition... தாம்பத்யம் ஒரு சங்கீதம் என்பார்கள். நாம் - பத்தியமாக இருக்க வேண்டிய 90 வயதில், தாம் பத்தியம் ஓர் அபஸ்வரம்!

★ **தணிகாசலம், தேனி**

ஹலோ க்ரேஸி... ஐஸ்வர்யாராயின் கண்கள், சுஷ்மிதா சென்னின் கன்னம், ராணி முகர்ஜியின் உதடு.. ஒப்பிடுங்களேன்?

ஹலோ தணிகாசலம், மேற்கூறிய மங் கையர் திலகங்களுக்கு கண்ணுக்கு மை, கன்னத்துக்குப் பூச்சு, உதட்டுக்குச் சாயம் என்று மேக்கப் போட்டு 'ஒப்பனையிடுங் களேன்' என்று உற்சாகப்படுத்துவதை விட்டு, ஒப்பிடுங்களேன் என்று சொல்லி என்னை பேக்கப் செய்து, இப்படி உதா சீனப்படுத்தி விட்டீர்களே... நீங்கள் அடுத்த ஜென்மத்தில், தண்ணியில்லா காட்டில் பிறந்து 'தண்ணிகாட்டுஜலமாக' இருந்து தவிக்கக் கடவது....



சுதா சேஷய்யன்

மனத்தை சரியான கதியில் வழிப்படுத்தக் கூடியவள் மனோன்மணி.

அதனால்தான் மார்கழி மாதத்தில் விசேஷமாகப் பாடக்கூடிய **திருப்பாவை** திருவெம்பாவையில் ஒரு விஷயம் வரும் - அதுவும் திருவெம்பாவையில் நிறைய வரும். திருவெம்பாவையில் இருக்கக் கூடிய முதல் பாட்டு, **மனோன்மணி**யைத் தட்டி எழுப்புவதாக இருக்கக்கூடிய பாட்டு.

மனோன்மணி எங்கே இருக்கிறாள் என்றால், மனத்துக்குள் இருக்கிறாள். அவள் நம் மனத்தை வழிப்படுத்தி அழைத்துக்கொண்டு போகிறாள். அந்த மனம் எப்படிப் போகிறதோ, அந்த வழியிலே மற்ற எல்லாமே போகும். ஆங்கிலத்தில் சாதாரணமாக ஒன்று சொல்லுவார்கள் - ''வாட் தி மைண்ட் டஸ் நாட் நோ, தி ஐ டஸ் நாட் ஸீ...'' மனம் அறியாத ஒரு விஷயத்தைக் கண்ணினால் பார்க்க முடியாது என்று அர்த்தம்.

ஒரு பேனாவைப் பார்க்கிறோம். அது பேனா என்று முன்னதாகவே தெரிந்திருந்தால்தான் அது புரிகிறதேயொழிய, ''இது என்ன?'' என்று பேனாவை அறியாத ஒரு குழந்தையிடம் கேட்டால், சொல்லத் தெரியாது. தெரிந்ததையே நாம் சொல்ல வேண்டும் என்றால்கூட, மனத்திலே தெரிந்து வைத்துள்ளதைத்தான், தெரிந்திருந்தால்தான் சொல்ல முடியும்.

ஒரு பொருளைத் தேட வேண்டும் என்றால், அது என்ன பொருள் என்று தெரிந்திருந்தால்தானே தேட முடியும்! மனசுக்கு அந்தப் பொருள் தெரிந்து பதிவாகியிருந்தால்தான் தேட முடியும்; கண்டுபிடிக்க முடியும். முன் பின் தெரியாத ஒருத்தரைப் போய் திடீரென்று தேடுகிறோம் என்று வைத்துக் கொள்வோம். அவரை எப்படி அடையாளம் கண்டுபிடிப்பது? கண் முன்னால் அவர் நின்றால்கூட அடையாளம் கண்டு பிடிக்க முடியாது; தெரியாது. மனத்துக்குத் தெரிந்து பதிவாகி இருந்தால்தான் முடியும்.

இதற்கு என்ன அர்த்தம் என்றால், மனம் எங்கே போகிறதோ அங்குதான் மற்ற இந்த்ரியங்கள் போகும்; புலன்கள் போகும். அந்த மனத்தைச் சரியான பாதையில் வழி நடத்தக்கூடியவள் அம்பாள். மனத்துக்குள்ளேயே இருக்கக் கூடியவள். அதனாலே **மனோன்மணி**.

இப்படி மனோன்மணியாக இருக்கக் கூடியவள் **மாஹேஸ்வரி**யாக இருக்கக் கூடியவள்.


மஹாதேவியாக இருக்கக்கூடியவள்.

மஹாலக்ஷ்மியாக சகலவிதமான ஐச்வர்யங்களையும் தரக்கூடியவள்.

ம்ருடப்ரியா - ம்ருடன் என்கிற திருநாமம் சிவகாமேசுவரருக்கு இருக்கக் கூடிய திருநாமம். சிவகாமேசுவரருக்கு ப்ரீதியானவள், அதனால் ம்ருடப்ரியா.

மஹாரூபா மஹத் ரூபமாக - இந்த அண்ட பிரும்மாண்டத்தின் வடிவமாக இருப்பவள். மிகப்பெரிய அதன் ரூபமாக அவள் இருக்கிறாள்.

மஹாபூஜ்யா - பெரிய பெரிய பூஜைகளுக்கு அவள் அடங்காதவள்!


* ஸ்ரீ காமாக்ஷி

தந்திர ரூபமாக இருக்கக்கூடியவள்தான் மஹா தந்த்ராவாகவும் மஹா யந்த்ராவாகவும் இருக்கின்றாள்!

இப்படி வைத்துக்கொள்வோமே - ஒரு சிறிய பூஜை; ஒரு பெரிய பூஜை; அதைவிட பெரிய பூஜை - இவற்றுள் எந்தப் பூஜையைப் பண்ணினாலும் அம்பாளுக்கு முழுசாகப் பூஜை பண்ணிவிட்டோம் என்று நினைக்க முடியுமா? எவ்வளவு பெரிய பூஜையானாலும் அதற்கு ஆதாரமாக இருக்கக்கூடியவளே அவள்தானே! அப்பூஜையினால் ஆராதிக்கப்படக்கூடியவளும் அவள்தானே! அதனால் மஹா பூஜ்யா.

மஹா பாதக நாசினி - எவ்வளவு பெரிய சிக்கல், பாதகம், பிரச்னை வந்தாலும் அவற்றையெல்லாம் போக்கக்கூடியவளாக, நாசம் செய்யக்கூடியவளாக இருப்பவள் அம்பாள்.

மஹாமாயா - மஹா மாயையாக இந்த உலகத்திலே திரோபாவத்தை நடத்தக்கூடியவள். ஒரு மாயையைக் கொடுத்து, இதுதான் வாழ்க்கை என்று இந்தச் சிருஷ்டியும் ஸ்திதியும் சம்ஹாரமும் (ஆக்கல், காத்தல், நீக்குதல்) நடப்பதற்காக பெரியதொரு மாயையைத் தரக்கூடியவள். அந்த மாயையாகவும் அவள்தான் இருக்கிறாள். ஆகவே, மஹாமாயா.

மஹா ஸத்வா - ஸத்வம் நிறைந்ததாக - ஸத்வ குணத்தின் மொத்த உருவமாக இருக்கக் கூடியவள்.

அனுபவிக்கத் தருபவள்!

அபிராமி பட்டர், அபிராமவல்லியைப் பாடிக்கொண்டு வருவார். அதிலே, 'பதினாறு பேறு' என்று சொல்கிறார்களே, அதற்கான சரியான பட்டியலைக் கொடுத்தவர் அபிராமி பட்டர்தான். அந்தப் பட்டியலுக்குள்ளே நாம் முழுசாகப் போக வேண்டாம். ஆனால், அதனை ஆரம்பிக்கிறபோது 'நோயின்மை' என்று ஆரம்பிக்கிறார். ஏனென்றால் முதலில் நோயின்மை இருந்தால்தான் பிற பேறுகளை அனுபவிக்க முடியும்!

முதலில் அந்தாதி பாடியபோது 'தனம் தரும், கல்வி தரும்' என்றாரே, வரிசைப் படுத்தினாரே... ஆனால், இதையெல்லாம் அனுபவிக்க வேண்டுமென்றால் நோயின்மை இருக்க வேண்டும். ஆகவே பின்னாலே, பதிகம் பாடுகிறபோது 'நோயின்மை' என்று ஆரம்பித்தார். ஆரம்பித்து முடிக்கிறபோது நுகர்ச்சி (போக்யம்) என்று முடித்தார்.

நுகர்ச்சி என்று முடிக்கிறபோது, அது என்ன அர்த்தத்தைக் கொடுக்கிறது...? என்னதான் பதினாறு பேறுகள் வாய்த்திருந்தாலும், அவற்றை அனுபவிக்கிற பேறு இருக்கிறதே, அதனை அம்பாள்தான் தரவேண்டும். என்னதான் சொத்து இருந்தாலும், சுகம் இருந்தாலும், வசதி இருந்தாலும் அனுபவிக்க முடியாமல் போய் விட்டால் என்ன பண்ணுவது? அவ்வாறு அனுபவிக்கக்கூடிய தகுதியைத் தரவல்லவள் **மஹாபோகா**.

மஹா ஐச்வர்யா - சகல ஐச்வர்யங்களும் படைத்தவளாக, அவை அனைத்தும் குடிகொண்டவளாக அவள் இருக்கிறாள்.

மஹாவீர்யா - வீரம் நிறைந்தவள்.

மஹாபலா - பலம் நிறைந்தவள்

மஹாபுத்திர் - எல்லா புத்தியும் எங்கே இருக்கிறது என்று கேட்டால் அம்பாளிடம் இருக்கிறது.

புத்தியின் ஆதாரமாக இருக்கக்கூடியவள் அம்பாள். அறிவு - புத்தி; அறிவாளி, புத்திசாலி என்கிறோம்.

உண்மையில் யாரை அறிவாளி, புத்திசாலி என்று சொல்லுவோம்... யாருக்கு அந்தப் பட்டம் தகும்?

வள்ளுவர் ரொம்ப அழகாக ஒரே ஒரு வார்த்தையில் இதற்குப் பதில் சொல்லி விட்டுப் போனார். உலகத்திலேயே - ஏன், இந்த அண்ட பிரும்மாண்டத்திலேயே ஒருத்தரைத்தான் அறிவாளி என்று

ஏற்கலாம்:

கற்றதனால் ஆயபயன் என்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்?

- என்ன கேள்வி கேட்கிறார் வள்ளுவர்.

'நான் கல்வி கற்றதனாலேயோ, படித்ததனாலேயோ என்ன பயன்?' என்று கேட்கிறார். எல்லா படிப்பும் படித்திருந்தாலும் அவற்றால் பயனே கிடையாது. எப்போது அவற்றால் பயன் உண்டாகும் என்றால், நற்றாள் தொழுகிறபோது. **அந்தத்** திருவடியிலே போய் விழவில்லையென்றால், எந்தப் படிப்பினாலும் பயன் கிடையாது.

எந்தத் திருவடி...? என்கிற கேள்விக்கு ரொம்ப அழகாகப் பதிலும் தருகிறார்: 'வால் அறிவன் நற்றாள்'. முழுமையான அறிவாளி இருக்கிறாரே, அவரது காலில் போய் விழுந்தால், நாம் இவ்வளவு நாள் படித்ததற்குப் பிரயோஜனம். அப்படியானால் அறிவாளி என்று யாரைக் குறிப்பிடலாம்...? பரமாத்மாவைத் தவிர முழுமையான எல்லாம் தெரிந்த அறிவாளி வேறு யாரும் கிடையாது.

அதனால்தான் ஸ்ரீலலிதா சஹஸ்ரநாமத்தில் முதலிலேயே **சர்வக்ஞா** என்கிற திருநாமம் வருகிறது. அம்பாள் பரமேசுவரியே அனைத்தும் அறிந்த ஞானஸ்வரூபி.

ஆகவேதான் அவளை **மஹாபுத்திர்** என்று குறிப்பிடுகிறது சஹஸ்ரநாமம்.

மஹாசித்திர் - சகல சித்திகளையும் தரக்கூடியவள். என்னவெல்லாம் வேண்டுமோ அவற்றைச் சித்திக்கச் செய்யக்கூடியவள்.

மஹாயோகேசுவரேசுவரி - எல்லா யோகங்களுக்கும் ஆதாரமாக, அவற்றுக்கெல்லாம் தலைவியாக இருக்கக்கூடியவள்.

மஹாதந்த்ரா, மஹா மந்த்ரா - ஏற்கெனவே வந்த திருநாமங்களின் பிரதி பிம்பங்கள் இவை.

தந்திர ரூபமாக இருக்கக்கூடியவள்தான் மஹா தந்த்ராவாகவும் மஹா யந்த்ராவாகவும் இருக்கின்றாள்.

மஹாஸனா - பெரிய சிம்மாஸனத்தில் இருக்கக்கூடியவள்.

மஹாயாகக்ரமாராத்யா - பெரிய யாகங்களினால் ஆராதனை செய்யப்பட வேண்டியவள். எவ்வளவு பெரிய யாகம் செய்தாலும், அதனை முறைப்படி செய்வித்து, அதனால் ஆராதிக்கப்படக் கூடியவள் அவள்.

மஹா பைரவ பூஜிதா - பைரவரால் பூஜிக்கப்படக் கூடியவள்.

நாட்டியம் ரசிப்பவள்

இதற்கு அப்புறம் ஒரு திருநாமம்...

மஹேசுவர மஹாகல்ப மஹா தாண்டவஸாக்ஷிணி

மஹாகல்ப காலத்தில், மஹேசுவரன் ஆடக்கூடிய தாண்டவம் இருக்கிறதே, அந்தத் தாண்டவத்துக்குச் சாட்சியாக இருப்பவள் அம்பாள்.

இன்னொரு இடத்திலே அம்பாளுக்கு **லாஸ்ய ப்ரியா** என்று ஒரு திருநாமம் உண்டு. இது ஸ்ரீலலிதா திரிசதியிலே வரும்.

தாண்டவம், லாஸ்யம் என்று இரண்டு வகை நடனங்கள். ஆண்கள் ஆடக்கூடியதற்குத் தாண்டவம் என்று பெயர். அந்தப் பெயர் எப்படி வந்தது என்று பார்த்தால், பூமியைத் 'தண்ட் தண்ட்' என்று தட்டித் தட்டி ஆடுவது தாண்டவம்.

லாஸ்யம் என்பது மென்மையான நடனம். இப்போதும் பார்க்கலாம். இந்தியாவின் பாரம்பரிய நடனங்களுள் சிலவற்றில் லாஸ்யத்தின் தாக்கம் அதிகம்; வேறு சிலவற்றில் தாண்டவத்தின் தாக்கம் அதிகம்.

யார் தாண்டவம் ஆடுகிறார் - மஹா சம்ஹார (மஹா கல்ப) காலத்தில் பரமேசுவரனாக இருக்கக்கூடிய அந்த சிவன் தாண்டவம் ஆடுகிறார்...!



(வளரும்)

அப்பா சொன்ன




* அர்த்தநாரி

'பெத்த அம்மா - அப்பாவையே முதியோர், அனாதை இல்லங்கள்ல கொண்டுபோய் விடுற காலமிது. எங்க ஊர்ல ஒருத்தர், அனாதைப் பிணங்களைத் தன் சொந்த செலவுல அடக்கம் பண்ணி அஞ்சலி செலுத்திட்டு வர்றாரு. கேட்கவே ஆச்சர்யமா இருக்கா? வந்து பாருங்க எங்க ஊருக்கு!'' பழனியிலிருந்து அழைப்பு வரவும் சென்றோம்.

கோயில் நகரமான பழனியில் ஆண்டுதோறும் பக்தர்கள் வெள்ளம் பெருக்கெடுத்து வருவதுபோல, பிச்சை எடுப்பவர்களும், மனநலம் பாதித்தவர்களும் அதிக அளவில் வந்து சேர்கின்றனர். இதில் பலர் வயோதிகத்தினாலும் உடல்நலக் குறைபாடுகள் காரணமாகவும் இறக்கும்போது, இவர்களைப் பழனி கோயில் நிர்வாகம், நகராட்சி நிர்வாகம் மூலமாக அடக்கம் செய்து வந்துள்ளது.

இந்நிலையில் கடந்த பதினோரு வருடங்களாக கோயில் சுற்றுப்புறப் பகுதிகளில் இறந்து போகும் அனாதைகளை அடக்கம் செய்யும் பொறுப்பை மனமுவந்து ஏற்றுச் செயல்பட்டு வருகிறார்! கோயிலில் போஷ்கராக வேலை பார்த்து வரும் அர்த்தநாரி.

''அனாதைப் பிணங்களை அடக்கம் செய்வதற்கான செலவுகளை, எனது சம்பளத்திலிருந்து பிடித்தம் செய்துகொள்ள மனப்பூர்வமாகச் சம்மதிக்கிறேன். என்னுடைய இந்தக் கோரிக்கையைத் தயவு செய்து ஏற்றுக்கொள்ளுங்கள்!' என்று பழனி திருக்கோயில் நிர்வாகத்திடம் எழுத்துப்பூர்வமாக அர்த்தநாரி கடிதம் எழுதிக் கொடுத்திருக்கிறார். விலைவாசி ஏறிப்போனதும் ஒரு பிணத்தை எரிக்க நூறு ரூபாய் என்று இருந்தது முன்னூறு என கூடுதல் செலவில் வந்து நின்றிருக்கிறது. அர்த்தநாரி தரும் நூறு ரூபாய் போக மீதி இருநூறு ரூபாயை கோயில் நிர்வாகமே ஏற்றுக்கொள்ளும் என முடி




வார்த்தை!



வெடுக்கப்பட்டபோது, முழுச் செலவை யும் தானே ஏற்றுக்கொள்வதாய் தெரிவித்து நிர்வாகத்தின் சம்மதத்தையும் பெற்றிருக்கிறார் அர்த்தநாரி என்று பெருமிதப்படுகிறார் கோயில் பணியாளர் ஒருவர்.

அனாதைகளின் மீது அபரிமிதமாக அக்கறை பொழியும் அர்த்தநாரியிடம் பேசினால், பேச்சு முழுக்க அக்கறை நிரம்பி வழிகிறது. 'நீ சாகப் போகும் நேரத்துக்கு முன்பு வரை, இந்த உலகில் ஏதேனும் நல்லது செய்துகொண்டே இரு' என்று என் தகப்பனார் சுப்பிரமணிய குருக்கள் அடிக்கடி என்னிடம் கூறுவார். ஒருவர் வாழும் போது வராதவர்கள்கூட இறந்தவுடன் தூக்கிச்சென்று அடக்கம் செய்ய நான்கு பேராவது வந்து நிற்பார்கள். ஆனால், அந்த நான்கு பேர்கூட வராத அவலம் இந்த அனாதைப் பிணங்களுக்கு! அதுவும் நாம் வேலைபார்க்கும் கோயில் பகுதியில் நடக்கும் இந்த அவலம் என்னைச் சுடும். எந்தவொரு ஆதரவற்ற மனிதனுக்கும் இந்த நிலை வந்துவிடக் கூடாது என்று மனமுவந்து இந்தக் காரியத்தில் ஈடுபட்டு வருகிறேன். இன்னும் ஒன்றிரண்டு வருடங்களில் ஓய்வு பெற்றுவிடுவேன். அதற்குப் பின்னரும் இந்தப் பணி தொடர வேண்டும் என்பதற்காக, என்னுடைய சொந்தப் பணத்தில் இருபத்தைந்தாயிரம் ரூபாய் செலவில் அமரர் ஊர்தி வண்டி ஒன்றினை உருவாக்கி வைத்துள்ளேன். எனது ஓய்வுக் காலப் பணத்தில் ஒரு குறிப்பிட்ட தொகையினை வங்கியில் டெபாசிட் செய்து, வரும் வட்டித் தொகையைக் கொண்டு இந்தச் சீரிய பணியினைத் தொடர்ந்து செயல்படுத்திடவும் திட்டமிட்டுள்ளேன்!'' என்கிறார் அர்த்தநாரி.

– ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு



6.10.2007 முதல்
13.10.2007 வரை



நடக்குமென்பார்;

மேஷம்: பண வசதி பெருகும் வாரம். மனத்தில் நினைத்தது நடக்கும். இல்லற வாழ்வு நன்றாக இருக்கும். நெருங்கிய நண்பர் மூலம் ஆதாயம் கிட்டும். உடல் ஆரோக்கியம் சீராகும். கல்வி வளம் சிறப்படையும். புதிய வேலை வாய்ப்பு வந்து சேரும். குரு வழிபாடு வியாழக்கிழமைதோறும் செய்துவர நற்பலன் கிட்டும்.

ரிஷபம்: திருமணக் காரியம் கைகூடும். நண்பர் / உறவினர் மூலம் அனுகூலம் ஏற்படும். தொழில் மூலம் நன்மைகள் கிட்டும். பணப் பற்றாக்குறை இருக்காது. சிலருக்கு வெளியூர்ப் பிரயாணம் வந்து சேரும். குடும்ப வாழ்வு நன்றாக இருக்கும். சனி பகவானுக்குப் பூ வைத்து, விளக்கு ஏற்றி, சனி காயத்ரி படித்து வருவது நற்பலனை அளிக்கும்.

மிதுனம்: மன நிறைவான வாரம். சாதுக்கள் தரிசனம் கிட்டும். வேலையில் இருக்கும் நெருக்கடிகள் விலகும். வியாபாரத்தில் முன்னேற்றம் ஏற்படும். வழக்கு வெற்றி பெறும். வெளிநாட்டு அழைப்புக் கிட்டும். தந்தையின் உடல்நிலை பாதிக்கும். வியாழக்கிழமைதோறும் ராகவேந்திரர் சுவாமியை தரிசனம் செய்து நெய்தீபம் ஏற்றிவர நற்பலன் கிட்டும்.

கடகம்: சில எதிர்பாராத நண்பர்கள் இடம் மாறிப் போவார்கள். வழக்கு வெற்றி அளிக்கும். கணவன் / மனைவிக்குள் இருந்து வந்த கருத்து வேற்றுமை விலகும். யாரிடமும் வாக்குவாதம் செய்யக்கூடாது. வீடு/மனை வாங்கச் சரியான காலம் இது. வெள்ளி, சனி, ஞாயிறு மூன்று நாட்களிலும் நவகிரஹ கோயிலுக்குச் சென்று தீபம் ஏற்றி ஒன்பது முறை வலம் வருவது நற்பலனை அளிக்கும்.

சிம்மம்: தெய்வ அனுகூலம் நிறைந்த வாரம். குடும்ப வாழ்வில் விட்டுக் கொடுத்து நடந்துகொள்வது நல்ல பலனை அளிக்கும். உத்தியோகத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். உடல்நிலை சீராகும். கோர்ட் வழக்கு முடிவுக்கு வரும். வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். நவகிரஹ வழிபாடு செய்து வர நினைத்தது நடக்கும்.

கன்னி: உல்லாசப் பிரயாணம் செய்வீர்கள். சுபச் செலவு ரெடி. மனப் பிரம்மை தீரும். வேலையில் உயர்வு கிட்டும். நண்பர் / உறவினர்கள் மூலம் ஆதாயம்

பரத்வாஜ் பதில்கள்!

* என் மகனுக்கு எப்போது திருமணம் நடக்கும்?

– வி.ஆர்.மஹாலிங்கம், சித்தமல்லி

நவம்பர் 2007க்குப் பின் திருமணம் நடக்கும். பிறந்த ஊருக்குத் தெற்கு திசையில் பிறந்த பெண் அமைவார். உறவில் கிடையாது. உடன் பிறப்பு இருவர் உள்ள இடத்தில் வரன் அமையும். தோஷம் எதுவும் இல்லை. பரிகாரம் வேண்டாம்.



நடக்கும்!

ஏற்படும். கல்வி வளம் மேலோங்கும். கொடுக்கல் வாங்கல் சிக்கல் தீரும். வியாழக்கிழமை, சனிக்கிழமைதோறும் குரு பகவானுக்கு, சனி பகவானுக்கு பூ வைத்து விளக்கு ஏற்றி ஒன்பது முறை வலம் வந்தால் நற்பலன் கிட்டும்.

துலாம்: உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். உத்தியோகத்தில் நற்பெயர் ஏற்படும். நீண்ட காலக் கடன் தொல்லை விலகும். செலவுகள் கட்டுக்குள் இருக்கும். குடும்ப வாழ்வு நன்றாக இருக்கும். நல்ல தகவல் கிட்டும். சத்ரு தொல்லை விலகும். பூர்வீகச் சொத்துகளில் இருந்து வந்த சிக்கல் விலகி நல்லது நடக்கும். செவ்வாய், வெள்ளிகிழமைதோறும் ராகு, கேதுவுக்கு விளக்கு ஏற்றி பூ வைத்து வழிபட்டு வர நற்பலன் கிட்டும்.

விருச்சிகம்: கடன் தொல்லை தீரும். ஆடை ஆபரணப் பொருட்கள் வாங்குவீர்கள். சிலருக்கு வேலையில் இடமாற்றம் ஏற்படும். சிலருக்கு வீடு மாற்றம் ஏற்படும். கல்வி வளம் மேலோங்கும். நண்பர், உறவினர்கள் மூலம் ஆதாயம் கிட்டும். புதிய தொழில் முயற்சி பலன் அளிக்கும். இல்லற வாழ்வில் சந்தோஷம் ஏற்படும். குரு / சனி / ராகு / கேது நவகிரஹ வழிபாடு நல்ல நலனைத் தரும்.

தஞ்சை பரத்வாஜ்

தனுசு: மிகவும் அற்புதமான வாரம். தூரத்தில் உள்ள மனிதர்களால் நற்பலன் உண்டாகும். கடல் கடந்து போகும் சூழ்நிலை உருவாகும். தொழில் துறையில் நல்ல முன்னேறம் ஏற்படும். குடும்ப வாழ்வு நன்றாக இருக்கும். வியாழக்கிழமைதோறும் குரு பகவானுக்கு விளக்கு ஏற்றிப் பூ வைத்து வழிபாடு செய்து வர வற்பலன் கிட்டும்.

மகரம்: சற்று முன்னேற்றமான வாரம். யாரிடமும் அதிக பேச்சு வைத்துக் கொள்ளக் கூடாது. வாகனங்களில் செல்லும் போது உஷார். திருமணக் காரியம் கைகூடும். வீடு / மனை வாங்க நல்ல காலம். மறைமுக எதிர்ப்புகள் இருக்கும். கூட்டாளிகள் விலகிச் செல்வார்கள். செலவுகள் கட்டுக்குள் இருக்கும். வழக்கு இழுபறியாக இருக்கும். செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் நவகிரஹ வழிபாடு செய்து, விளக்கு ஏற்றி, பூ வைக்க நற்பலன் கிட்டும்.

கும்பம்: மனக் குழப்பம் விலகும் வாரம். உத்தியோகத்தில் மாறுதல் ஏற்படும். இல்லற வாழ்வில் அனுசரணை தேவை. உடல்நிலை பாதிக்காது. சிலருக்கு வெளியூர்ப் பிரயாணம் செல்ல வேண்டி இருக்கும். பண வசதி கிட்டும். வேலைப் பளு அதிகரிக்கும். திருமணம் கைகூடும். பொன், பொருள் சேரும். குழந்தைகள் மூலம் மனமகிழ்ச்சி ஏற்படும். ராகு / கேது / குரு / சனி வழிபாடு செய்து வர நற்பலன் உண்டாகும்.

மீனம்: மிகவும் சந்தோஷமான வாரம். எண்ணின யாவும் ஈடேறும். வேலையில் பதவி உயர்வு ஏற்படும். பொருளாதாரம் சிறப்படையும். பணக் கஷ்டம் இருக்காது. சத்ரு தொல்லை விலகும். வழக்கு வெற்றி பெறும். வீடு / மனை வாங்க ஏற்ற நேரம். பரிகாரம் தேவையில்லை.

எம்.ஜி.கன்னியப்பன்

வைதேகி காத்திருந்தாள்!

"**சா**ர் போஸ்ட்" கையில் வெள்ளை நிறக் கவரைக் கொடுத்தார் தபால்காரர்.

பிரித்துப் படித்தேன். 'அன்புள்ள மனோகருக்கு! வணக்கத்துடன் பாண்டியன்...' என தொடங்கியிருந்தது. 'அடுத்த வாரம் இந்தியா வருகிறேன். உன்னை வந்து சந்திக்கிறேன்' சிக்கனமாக முடித்திருந்தான்.

பாண்டியன், பத்தாண்டுகளுக்கு முன்னால்... (கொசுபத்தி சுருளை முகத்துக்கு முன் சுற்றிவிட்டு ஃப்ளாஷ்பேக்குக்கு வாருங்கள்) காஞ்சிபுரத்தில் என்னோடு பத்து, பதினொன்று, பன்னிரண்டு என மூன்றாண்டுகள் படித்தவன். என்னைப் போல் இல்லாமல் நன்றாகப் படிக்கக் கூடியவன். அழகானவன், சற்று வசதியானவனும்கூட. இருபாலர் பள்ளிக்கூடம் என்பதால் அழகான பாண்டியனுக்கு உடனே காதலி கிடைத்தாள். அவள் பெயர் வைதேகி. ஒல்லியும் குண்டுமில்லாத சராசரி. சிகப்பான தேகம், செதுக்கினது போன்ற முக அமைப்பு.

முதலில் அவர்கள் காதல் எனக்குத்தான் தெரிய வந்தது.

பள்ளிக்கு என்னுடன் சேர்ந்து வந்து கொண்டிருந்த பாண்டியன், ஆற்றுப் பாலம் அருகில் வந்ததும் சட்டெனப் பின்வாங்கி, எதையோ மறந்து வீட்டில் வைத்துவிட்டு வந்ததாகத் திரும்பி நடந்தான். அப்படி நடந்த பலமுறையில், ஒரு முறை அவனுக்குத் தெரியாமல் நான் தொடர, பாலத்தின் கீழே வைதேகியும் - பாண்டியனும் பேசிக் கொண்டிருந்ததைக் கண்டுபிடித்தேன். உண்மையான காதல் என்பதால் உதவியும் செய்தேன். ஒரு முறை அம்மா - அப்பா இல்லாத சமயம் என் வீட்டில் இருவரும் சந்திக்க ஏற்பாடு செய்தேன்.

பின், சினிமா, பார்க் என எச்சரிக்கையுடன் சுற்ற ஆரம்பித்தார்கள். படம் பார்க்கச் செல்லும்போது கண்காணிப்புக்காக என்னையும் அழைத்துப் போவார்கள்.

பாண்டியன் காதல் செய்கிற ஜோரில் ஹீரோ போன்ற தோரணையில் வலம் வர ஆரம்பித்தான். கபடி என்றால் அறவே பிடிக்காத பாண்டியன், +2 தேர்வுக்கு முன் நடந்த ஆண்டு விழாவில் கபடி டீமில் பெயர் கொடுத்தான். ஒப்புக்குச் சேர்த்துக் கொண்டோம். ஆனால், வைதேகி பார்த்துக் கொண்டு இருக்கிறாள் என்பதற்காக ஒடி.. ஒடி.... எதிரணியினரை அவுட் ஆக்கினான். எகிறிக் கழுத்துக்குப் பிடிபோட்டுக் கீழே தள்ளினான். வைதேகி கண்களால் கை தட்டினாள். பறக்கும் முத்தம் அனுப்பினாள். பையன் மேலும் உற்சாகமானான். அவனது உற்சாகம் எங்கள் அணிக்கு



காதல் பொன்மொழிக் கதை-11

ஷீல்டு பெற்றுக் கொடுத்தது.

இப்படி அவர்கள் காதல் வேர், பூ, காய், கனி விட்டு வளர்ந்தது. ப்ளஸ்டு தேர்வும் முடிந்தது. மேற்கொண்டு நான் உள்ளூர் காலேஜில் சேர முடிவெடுத்திருந்தேன். வைதேகி, அதோடு படிப்புக்கு முழுக் குப்போட வீட்டில் சொல்லிவிட்டதாகச் சொன்னாள்.


பாண்டியன்தான் கம்ப்யூட்டர் சயின்ஸ் சென்னையில் படிக்கப் போவதாகச் சொன்னதோடு, அவனது அப்பாவுக்குச் சென்னைக்கு மாற்றலான விஷயத்தையும் சொல்லி எனக்கு அதிர்ச்சியையும், வைதேகிக்குக் கண்ணீரையும் கொடுத்தான். இருவருக்கும் ஆறுதல் சொன்னான். அடிக்கடி வைதேகியைப் பார்க்க வருவதாகச் சத்தியம் செய்தான். ஊருக்குக் கிளம்பும்போது வைதேகிக்கு மறக்காமல் இருக்க ஏதேதோ 'கிஃப்ட்' வாங்கிக் கொடுத்தான்.

சொன்னதுபோல் இரண்டொரு மாதங்கள் வந்தான்.

அதன்பிறகு எந்தத் தொடர்புமில்லை. வைதேகி மிகவும் கவலைப்பட்டாள்.

மூன்றாண்டுகள் கழித்து ஒரு நாள் தனக்கு லண்டனில் மாதம் ஒரு லட்ச ரூபாய் சம்பளத்தில் வேலை கிடைத்ததாகத் தகவல் சொன்னான். அவனைப் பார்க்காமல் இருக்க முடியவில்லை என்று முந்தானை நனையும்வரை அழுதாள். மூன்றாண்டு காண்ட்ராக்ட் முடிந்ததும்தான் இந்தியா வர முடியும். வந்ததும் அப்பாவிடம் பேசிக் கல்யாணத்துக்கு ஏற்பாடு செய்யப்போவதாக வைதேகிக்கு நம்பிக்கை அளித்தான்.

அதன்பின் அவனைப் பற்றி எந்தத்



தகவலும் இல்லை. வைதேகி உடலாலும், மனதாலும் சோர்ந்து போனாள். சொந்தம் அசலார் என்று தேடி வந்த நான்கைந்து வரன்களை ஏதேதோ காரணம் சொல்லித் திருமணத்தைத் தள்ளிப் போட்டுக் கொண்டு வந்தாள். பொறுத்திருந்து பார்த்துவிட்டு...

''இங்க பார் வைதேகி, பாண்டியன் எப்போ வருவான்? இல்லை வரவே மாட்டானான்னும் தெரியலை. எந்த நாட்டுல இருக்கான்? எந்தத் தகவலும் இல்லை. சும்மா அவனையே நெனச்சுக்கிட்டு நீ உன்னோட வாழ்க்கையைச் சீரழிச்சுக்கிட்டு இருக்காதே'' என்றேன் ஒரு நாள்.

''என்ன மனோ, என் காதலைப் புரிஞ்சுக்கிட்ட நீயே இப்படிப் பேசுறே! அவனுக்காக இன்னும் எத்தனை வருஷம் காத்திருந்தாலும் அதிலே எனக்குச் சுகம்தான். நீயும் எங்கப்பா அம்மாவும் சொல்ற மாதிரி சுப்பனையோ குப்பனையோ நான் கட்டிக்கிட்ட பின்னாடி, அவர் தாலியோட வந்து நின்னு கழுத்தை நீட்டுன்னு சொன்னார்ன்னா நானில்ல செத்துப்போவேன்.''

காலங்கள் உருண்டோடின. எனக்கு ஐ.டி.யில் வேலை. திருமணம்; மூன்று, இரண்டு வயதில் பிள்ளைகள்.

வைதேகி வீட்டில் இருக்கப் பிடிக்காமல் பக்கத்துத் தெரு நர்சரியில் இரண்டாம் வகுப்பு மிஸ் ஆனாள். கிட்டத்தட்ட பத்தாண்டுகளுக்குப் பின்னும் பாண்டியன் வருவான் என்று உறுதியுடன் இருந்தாள்.

இந்த நிலையில்தான் பாண்டியனிடமிருந்து ரத்தினச் சுருக்கமான இந்தக் கடிதம்.

சட்டையும், செருப்பும் அணிந்து கொண்டு வைதேகி வீடு சென்றேன். அவள் சக ஆசிரியர்களோடு ஒரு வாரம் ஆக்ரா டூர் போயிருப்பதாக அவள் அப்பா சொன்னார். செல்ஃபோனில் தொடர்பு கொள்ள... 'நீங்கள் தொடர்புகொள்ளும் வாடிக்கையாளர் தொடர்பு எல்லைக்கு வெளியே..' என்று திரும்பத் திரும்ப பதிவுப் பெண் ஒப்பித்தாள்.

வைதேகி சந்தோஷப்படுவாள். காத்திருந்தது வீண் போகவில்லை; இனி கண்ணீர் சிந்தமாட்டாள். நல்ல வாழ்க்கை அமையப்போகிறது.

கடிதம் வந்த ஐந்தாவது நாள் பாண்டியன் வந்தான். வரவேற்று உட்கார வைத்தேன்.

''மனோகர் எப்படி இருக்கீங்க?'' முன்பிருந்த மனோ இல்லை; 'டா' இல்லை.

''நீ எப்படிடா இருக்கே?'' என்று கேட்க, பழைய சிநேகிதன் முறையில் பேச முடியாமல் ''நல்லா இருக்கேங்க'' என்றேன்.

''வீடு கண்டுபிடிக்க ரொம்ப சிரமப் பட்டுட்டேன். ஊரு ரொம்ப மாறிப் போயிடுச்சுங்க...''

இதையெல்லாம் அவனிடம் எதிர்பார்க்கவில்லை. வந்ததும் வைதேகி பற்றிக் கேட்பான் என்று பார்த்தால் ஊரைப் பற்றி விசாரித்தான்.




''என்னங்க, ஜன்னலோரம் திருடன் நிக்க மாதிரி இருக்கு; போய்ப் பாருங்க!''

''அவன் என்ன பெரிய வி.ஐ.பி.யா? வேணும்னா அவனே வந்து என்னைப் பார்க்கட்டும்!''

- லீலாஜி

வாகீச கலாநிதி கி.வா.ஜகன்னாதன் ஒரு சொற்பொழிவுக்காக வெளியூருக்குப் போயிருந்தபோது, இரவு ஒரு அன்பர் வீட்டில் தங்கியிருந்தார். கி.வா.ஜ. 'இரவு உணவு வேண்டாம்' என்று சொன்னதற்கு, அந்த அன்பர் 'பழம், பால் கொண்டு வருகிறேன், சாப்பிட' என்று சொன்னார். அதற்கு கி.வா.ஜ. 'பழம் பால் வேண்டாம். புதுப் பாலாவே கொண்டு வாருங்கள்' என்று நகைச்சுவையாகச் சொன்னாராம். அன்பர் ரசித்து மகிழ்ந்தார். நகைச் சுவையாகவும் சிலேடையாகவும் பேசுவதில் கி.வா.ஜ.வுக்கு ஈடு இணை இல்லை.

– பிச்சை சுவாமிநாதன்,
சென்னை



ரீடர்ஸ் கார்னர்

''இப்பவும் லண்டன்லதான் இருக்கீங்களா?''

''இல்லை அமெரிக்காவுல. அமெரிக்காகாரனுக்கு இந்திய மூளைன்னா ரொம்பப் பிடிக்கும். தமிழ் ஆளுங்க கம்ப்யூட்டர்ல கிங். அதனால அங்க நல்ல மதிப்பு.'' தொடர்ந்து நுனி நாக்கில் ஆங்கிலம்.... என ஏதேதோ பேசினான்; வைதேகியைத் தவிர.

மதிய உணவு வீட்டில் சாப்பிடச் சொன்னேன். மறுத்தான். சென்னை லீ மெரீடியன் ஹோட்டலில் நடக்கும் கான்பரன்ஸுக்கு வந்ததாகவும், லன்ச் அங்கேயே சாப்பிடப்போவதாகவும் சொன்னான். அடிக்கடி மணி பார்த்துக் கொண்டு, ''சரிங்க, நான் கிளம்பறேன்'' எழுந்தான்.

''வந்ததும் கிளம்பறீங்க?''

''நிறைய கமிட்மெண்ட் வெச்சிருக்கேன்'' என்றான்.

எனக்கு என்ன சொல்லதென்று தெரியவில்லை. வைதேகியை எப்படி மறந்து போனான்? அல்லது மறந்து போனதாக நடிக்கிறானா? என்னால் கேட்காமல் இருக்க முடியவில்லை.

''வந்ததே வந்தீங்க வைதேகியைப் பாத்துப் பேசிட்டுப் போங்களேன்.''

''வைதேகி'' கண்களைச் சுருக்கி யோசித்தான். ''ஓ... அந்தப் பொண்ணா! எப்படி இருக்காங்க? கல்யாணம் பண்ணிக்கிட்டாங்களா? கேட்டேன்னு சொல்லுங்க'' மீண்டும் மணி பார்த்து ''வர்றேங்க மனோகர் பை'' என்றான்.

எனக்குப் 'போனேர்' என்று அறைய வேண்டும்போல் இருந்தது. அடக்கிக் கொண்டேன். அவன் காரில் ஏறிச் சென்று, கார் மறையும் வரை பார்த்துக் கொண்டு நின்றேன்.

இரண்டு நாட்கள் கழித்து வைதேகி வந்தாள்.

''என்ன மனோ, வீட்டுக்கு வந்தீங்களாமே... அப்பா சொன்னார். டூர் போயிட்டு இன்னைக்குக் காலைலதான் வந்தேன்... என்ன விஷயம் சொல்லுங்க?''

''அது வந்து...'' தயங்கினேன்.

''என்ன தயக்கம்... சும்மா சொல்லுங்க.''

''ரெண்டு நாளைக்கு முன்னாடிதான் தெரியும், பாண்டியன் ஏதோ விபத்துல இறந்துட்டானாம். அதைச் சொல்லத்தான் வீட்டுக்கு வந்தேன்.'' திக்கித் திணறி உண்மை போல சொல்லி முடித்தேன்.

அவள் விக்கித்துச் சுவற்றில் சரிந்தாள். ஓங்கிக் குரலெடுத்து அழ ஆரம்பித்தாள். அழுவதைப் பார்க்க முடியாமல் தெருவில் இறங்கி நடந்தேன். என் மனைவி அவளுக்கு ஆறுதல் சொல்லிக்கொண்டிருந்தாள். இனி வைதேகி பாண்டியனுக்காகக் காத்திருக்கப் போவதில்லை.

முதல் படத்திலேயே பிரச்னை என்று வந்தபோது, எதைப் பற்றியும் கவலைப்படாமல் உண்ணாவிரதம் வரைக்கும் போனவர் என்று கோடம்பாக்க வட்டாரத்திலும், ரசிகர்கள் மத்தியிலும் ஏகப்பட்ட எதிர்பார்ப்புகளை ஏற்படுத்தி வைத்திருக்கிறார் 'கற்றது தமிழ்' (தமிழ் எம்.ஏ.) பட இயக்குநர் ராம். அவரைச் சந்தித்தோம்.

''போராட்டம், உண்ணாவிரதம்னு திடீர்னு பாப்புலராயிட்டீங்களே... திட்டமிட்டதா?''

''அதெல்லாம் ஒண்ணுமில்லைங்க! பொதுவா, ரைட்ஸ் வாங்கின ஆடியோ கம்பெனிக்காரங்க, கேஸட் ரிலீஸ் பண்ணின பத்து நாள்ல, எல்லா கேஸட்டையும் மார்க்கெட்டுக்குக் கொண்டு வந்துடுவாங்க. எங்க விஷயத்துல அப்படி நடக்கலை. மூணரை லட்ச ரூபாய் செலவு செஞ்சு கேஸட் ரிலீஸ் செஞ்சோம். அடுத்த நாளே கேஸட் கடைகளுக்கு வந்துடும்னாங்க. பதினெட்டு நாளாகியும் வரலை. படம் ரிலீஸ் ஆகற தேதி வேற நெருங்கிக்கிட்டே இருந்தது. இந்தச் சமயத்துல படத்தோட பாட்டு மக்களுக்குப் போய்ச் சேரலைன்னா நஷ்டம். வேற வழியில்லாமத்தான் உண்ணாவிரதம் இருந்தோம். அன்னிக்குச் சாயந்தரமே புரொடியூசர் கவுன்சில்ல கூப்பிட்டுப் பேசினாங்க. அடுத்த நாளே எல்லாக் கடைகளுக்கும் கேஸட் வந்துடுச்சு.''

"பேப்பர் இல்லாம ஓர்க் பண்றதால மெமரி பவரை இம்ப்ரூவ் பண்ணிக்க முடியுது!"

'' சரி, படத்தோட கதை என்ன?''

''கதைன்னு பிரிச்சு சொல்ல முடியாது. எல்லாருடைய வாழ்க்கையிலும் நடக்கக்கூடிய காதல், சோகம், சந்தோஷம், உற்சாகம் எல்லாம் இந்தப் படத்துல இருக்கு, அவ்வளவுதான்.

நடிகர் ஜீவாவுக்கு இது முக்கியமான படம். தான் ஒரு நல்ல நடிகன்ங்கறதை இந்தப் படத்துல நிரூபிச்சிருக்காரு. கதாநாயகியா வர்ற அஞ்சலி புதுமுகம். ரொம்ப நாளைக்கு அப்புறம் சொந்தக் குரல்ல அதுவும் தமிழில் பேசி நடிச்சிருக்காங்க. இயக்குநர் அழகம்பெருமாளுக்கு முக்கியமான கதாபாத்திரம். நாகர்கோவில் பாஷையில் பேசி, அந்த ஊர்க்காரராவே வாழ்ந்திருக்காரு.



ஸ்ரீராம்னு ஒரு குட்டிப் பையன் நடிச்சிருக்கான். யூனிட்ல இருக்கற எல்லாருமே அவனோட நடிப்பைப் பாத்து அசந்துபோய்ட்டோம். நிச்சயம் அவனோட நடிப்புக்கு விருது கிடைக்கும். நடிகர் கருணாஸ், யுவான் சுவாங்ற ஒரு பாத்திரத்துல கலக்கியிருக்கார்.''

''ஷூட்டிங் ஸ்பாட்ல டயலாக் பேப்பர், எடிட்டிங் ரிப்போர்ட் எதுவும் இல்லாம டைரக்ட் பண்றீங்களாமே...

நம்பிக்கைதான் என் பலம்!



இயக்குநர் ராம் பேட்டி

எப்படி சாத்தியமாகுது?''

''ஸ்கிரிப்ட் என்னோடது. ஒவ்வொரு சீனும் என் மனசுலயே இருக்கு. முதல் நாள் ராத்திரி, என்ன எடுக்கப்போறோம்ங்கறதை முடிவு பண்ணிடுவோம். கற்பனைல இதுதான் லொகேஷன்னு ஒரு படம் வரைஞ்சு வெச்சிருப்போம். யாரு நடிக்கப் போறாங்கங்கறதும் தெரியும். மாஸ்டர் ஷாட், டூ ஷாட், க்ளோசப்னு என்ன ஷாட் வைக்கப் போறோம்ங்கறதையும் முன்னாடியே தீர்மானிச்சு வச்சிருப்போம். பிறகென்ன, பேப்பர் இல்லாம ஷூட்டிங் பண்ண முடியுது. சில சமயங்கள்ல, ஒரு லொகேஷன் சீனை மாத்தும். ஆனா அதுக்கும் ஸ்பாட்ல பேப்பரோட ஓர்க் பண்றதுக்கும் சம்பந்தம் இல்லை. என்னோட பலம் நம்பிக்கைதான். இப்படி பேப்பர் இல்லாம ஓர்க் பண்றதால நம்பிக்கை பலப்படுது. மெமரி பவரை இம்ப்ரூவ் பண்ணிக்க முடியுது.''


''எடிட்டிங் ரிப்போர்ட் இல்லாமப் பண்ணும்போது எடிட்டிங் கஷ்டமா இருக்குமே...''


''இப்போ Avid எடிட்டிங் வசதியால எந்த ஷாட்டுமே வீணாகுறது கிடையாது. எல்லாமே தாத்தோடதான் இருக்கு. இருபது ஷாட் எடுத்திருக்கேன்னா எல்லாத்தையும் உட்கார்ந்து பார்ப்பேன். எது ரொம்ப நல்லா இருக்கோ அதை பயன்படுத்திக்குவேன். இப்படிப் பண்ணும்போது எடிட்டிங் ரிப்போர்ட் எழுதணுங்கற அவசியம் இல்லை. நம்ம வேலையும் ஈஸியாகுது.''



– கே.பாலு

சத்யா





போனஸ் சந்தோஷம்!

உதவி இயக்குநராகலாம் வாங்க - திருவாரூர் பாபு, ராம்பிரசாந்த் பப்ளி கேஷன்ஸ், 106/4, ஜானி ஜான்கான் சாலை, இராயப்பேட்டை, சென்னை - 14, விலை ரூ.70/-

இயக்குநராகும் முயற்சியில் இருக்கும் எழுத்தாளர் திருவாரூர் பாபுவின் உதவி இயக்குநர் அனுபவங்கள். மேலோட்டமாக இல்லாமல் சினிமாவின் அடி ஆழம் வரை சென்று ஆக்கபூர்வமாக அலசியிருக்கும் எழுத்துப் பாங்கு அற்புதமாக இருக்கிறது. ஒவ்வொரு உதவி இயக்குநரும் வாசிக்க வேண்டிய புத்தகம். பின்னிணைப்பாக சினிமா சார்ந்த சிறுகதைகளும் இடம்பெற்றிருப்பது போனஸ் சந்தோஷம்.

அன்புராஜாவும் காற்றுக் குதிரையும் - சுபா, விகடன் பிரசுரம், 757, அண்ணா சாலை, சென்னை -2. விலை ரூ. 65/-

சிறுவர்களுக்கான கதைபோல் தோற்றமளித்தாலும் அனைத்து வயதினரும் வாசித்து மகிழ வேண்டிய சாகசக் கதை. க்ரைம் கதைகளுக்கே உரிய திடீர் திருப்பங்களும் சாகசங்களும் நெஞ்சை அள்ளுகின்றன. முத்துவின் ஓவியங்கள் கூடுதல் பலம்.

6.3 - ஆர்.முத்துக்குமார், கிழக்குப் பதிப்பகம், 33/15, இரண்டாம் தளம், எல்டாம்ஸ் ரோடு, ஆழ்வார்பேட்டை, சென்னை - 18. விலை ரூ.60/-


ஆறடி மூன்றங்குல உயர மனிதரான அமிதாப்பின் ஏற்ற - இறக்கமான வாழ்வின் சுவாரஸ்யங்களை, அவர் வெற்றியின் இரகசியங்களை, தோல்வியிலிருந்து மீண்ட உத்வேகங்களை உணர்ச்சித் துடிப்புடன் வடித்துள்ளார் முத்துக்குமார். சாதிக்கத் துடிக்கும் நெஞ்சங்களுக்கு டானிக்.

வேலைக்கு ரெடியா? - மா. ஆண்டோ பீட்டர், சாஃப்ட் வியூ பப்ளிகேஷன்ஸ், தமிழ்க்குடில், 118, நெல்சன் மாணிக்கம் சாலை, சென்னை - 29. விலை ரூ. 45/-

இது இளைய தலைமுறைக்கான புத்தகம். வேலையை எப்படிப் பெறலாம்; எந்தெந்த துறைகளில் வாய்ப்புகள் பிரகாசமாக இருக்கின்றன; நேர்முகத் தேர்வுகளில் வெற்றிகரமாக பங்குபெறுவது எப்படி, படித்தவனை விடப் படிக்காதவனுக்கு எளிதில் பணி கிடைத்து விடும் சூட்சுமம் என்று பல விஷயங்களைத் தொட்டு அலசியிருக்கிறார் ஆண்டோ பீட்டர்.

- மதுமிதா





■ புத்தக விமர்சனம்

கவிதை



பயணம்

முடிவற்ற பயணத்தின்
நீண்ட வெளிகளில்
விரிந்து கிடக்கும்
காலம்

வசந்தகால இலைகளின்
இலையுதிர் தழுவல்களால்
பூப்படையும்
நிலம்

கொக்குகள் மீன்களுக்கு
முத்தம் கொடுக்கும்
கனவுகளுடன்
தோல் சுருங்கிய வெடிப்புகளாய்
ஏரி

வெப்ப உமிழ்களின்
குதப்பலால்
எரிந்துபோன
எறும்புகள்

கணங்களின் உயிர்ப்பைக்
கற்றுத்தரும் பித்தனைத் தேடியலையும்
யாத்திரையின்
முற்றுப் புள்ளியாகும் வரை...

காலம்
விரிந்து கிடக்கும்
வெளிகளில்
நீண்டு கொண்டேயிருக்கிறது
முடிவிற்ற பயணம்!

• நெப்போலியன்


ஆகவே,

முகமத் அஹ்மதின்ஜத் (Mahmoud Ahmadinejad). இரான் தேசத்து அதிபர். அவருக்கு ஒரு கடிதம் வந்திருக்கிறது. அனுப்புனர், கொலம்பியா பல்கலைக் கழகம், அமெரிக்கா. உள்ளே ஒரு குறிப்பு: ஐயா, எங்கள் பல்கலைக்கழகத்தில் ஒரு விழா ஏற்பாடு செய்திருக்கிறோம். தாங்கள் வந்து உரையாற்றுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

அஹ்மதின்ஜத் அமெரிக்க மண்ணில் காலடி எடுத்து வைப்பதற்கு முன்னால் அங்கே சர்ச்சைகள் வெடிக்க ஆரம்பித்து விட்டன. குறிப்பாக, அமெரிக்கப் பத்திரிகைகள் பல்கலைக்கழகத்தைப் போட்டு டார் டாராகக் கிழித்து எடுத்துவிட்டன. அமெரிக்காவுக்கும் இரானுக்கும் ஒத்துக் கொள்ளாது என்று உமக்குத் தெரியாதா? எந்தத் தைரியத்தில் அந்த மனிதரை வர வேற்றாய்? ஏதாவது பிரச்னை ஆகிவிட்டால் யார் பதில் சொல்வது?

மனிதர் கிளம்பி வந்திருக்கிறார். பல்கலைக்கழக வளாகத்தில் நல்ல கூட்டம். பத்திரிகையாளர்கள், டி.வி. ஆட்கள், மாணவர்கள், மாணவிகள். பல்கலைக் கழக வேந்தர் லீ போலிங்கர், மெத்த படித்த அறிவுஜீவி. பேச ஆரம்பித்தார். பத்து நிமிடங்கள் நிறுத்தாமல் பேசினார். அந்த அரங்கமே அதிர்ந்துவிட்டது. காரணம், அந்தப் பத்து நிமிடங்களில் அஹ்மதின் ஜத்தை எத்தனை முறை அவர் திட்டியிருப்பார் என்று கணக்கிடுவது சிரமம்.

'சர்வாதிகாரி', 'படிப்பறிவற்றவர்', 'கொடூரமானவர்', 'உணர்ச்சிவசப்படுபவர்'- இதெல்லாம் ஆங்காங்கே தெறித்து விழுந்த ஒரு சில வார்த்தைகள் மட்டுமே. முழு உரையையும் படிக்கும் ஒருவர் நிச்சயம் அதிர்ந்து போவார். ஒரு பல்கலைக்கழக வேந்தரால் இந்த அளவுக்குத் தரம்தாழ்ந்து பேச முடியுமா? அதுவும், அறிவாளிகளின் கூடமாக, நாகரிகத்தின் உச்சமாக



★ அஹ்மதின்ஜத்

அமெரிக்கர்களால் கொண்டாடப்படும் பல்கலைக்கழகத்தில் வைத்து?

ஒரு நிமிடம் நினைத்துப் பாருங்கள். அஹ்மதின்ஜத் மேடையில் அமர்ந்திருக் கிறார். எதிரே மீடியா. ஆனால், எதுவும் பொருட்டில்லை என்பதுபோல் திட்டித் தீர்த்துவிட்டார் போலிங்கர்.

'நான் வரட்டுமா, வந்து உரை ஆற் றட்டுமா' என்று அஹ்மதின்ஜத் கேட் டாரா? வருந்தி வருந்தி அவரை அழைத்தது யார்? பல்கலைக்கழகம்தானே? கூப்பிட்டு உட்கார வைத்து அவமானப்படுத்துவது எத் தனை பெரிய அநாகரிகம்? நாகரிகம் பற்றிப் போதிக்கும் ஒரு பல்கலைக்கழகத்துக்கு இந்த அடிப்படைகூட தெரியாதா?

இரான் அதிபர் இப்போது உரையாற்று வார் என்று சொல்லிவிட்டு மைக்கை அவர் பக்கம் நகர்த்தியிருக்கிறார்கள். எல்லோர் கண்களும் அவர் மீதுதான். என்ன செய்யப் போகிறார்?

எல்லோரையும் பார்த்து ஒரு முறை


சர்வாதிகாரி!

புன்னகை செய்தார் அஹ்மதின்ஜத். பிறகு, கேமராவைப் பார்த்தபடி பேச ஆரம்பித்தார். 'இரான் அமெரிக்காவைப் போன்ற நாடு கிடையாது. அங்கே நாங்கள் விருந்தினர்களை மிக்க மரியாதையுடன் நடத்துவோம்; மதிப்போம்.'

போதாது? அஹ்மதின்ஜத் கொஞ்சம் உணர்ச்சிவசப்பட்டிருந்தாலும் நிலைமை மாறிபோயிருக்கும். ஆனால், அஹ்மதின்ஜத் நிதானத்தைத் தவறவிடாமல் அடுத்தடுத்து தன் வாதங்களை முன்வைக்க ஆரம்பித்தார். எல்லாம் முடிந்த பிறகு, டாடா காட்டிவிட்டு, புன்னகை மாறாமல் கிளம்பிப் போயே போய்விட்டார்.

இன்னொரு விஷயத்தையும் இங்கே பார்த்துவிடுவோம். 'இரட்டை கோபுரம் இருந்த இடத்தைப் பார்க்கலாமா?' அனுமதி கேட்டு கடிதம் எழுதியிருக்கிறார் அஹ்மதின்ஜத். 'ஐயோ மாட்டவே மாட்டோம்' என்று மறுத்துவிட்டது அமெரிக்கா. இரட்டை கோபுரம் தாக்கப்பட்டபோது, இதே அஹ்மதின்ஜத் புஷ்ஷுக்குப் பிரத்யேகமாகக் கடிதம் எழுதி, தன் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்திருக்கிறார். இரானியர்கள் மெழுகுவர்த்தி ஏற்றி அமைதி ஊர்வலம் நடத்தியிருக்கிறார்கள். ஆனால், பதிலுக்கு அமெரிக்கா, அவரைக் குறிப்பிட்ட பிரதேசத்துக்குள் நுழைய விடாமல் தடுத்து நிறுத்தியிருக்கிறது. இரான் என்னும் ஒரு தேசத்தையே அவமதிக்கும் செயல் இல்லையா இது?

அஹ்மதின்ஜத்தைத் திட்டியது சரி



தான் என்கிறது அமெரிக்க மீடியா. புரிகிறது அல்லவா? ஒரு பல்கலைக்கழக வேந்தரின் தனிப்பட்ட அபிப்ராயம் மட்டும் அல்ல இது. அமெரிக்க அரசாங்கத்தின் அபிப்ராயமும் இதுவேதான்: அஹ்மதின்ஜத் ஒரு தீவிரவாதி; அவர் நடத்துவது சர்வாதிகார ஆட்சி. 'எப்படிச் சொல்கிறீர்கள்?' என்றால்



அமெரிக்கா இப்படி ஒரு பட்டியலை எடுத்து நீட்டுகிறது. அந்த மனிதர் இஸ்ரேலுக்கு எதிரானவர். இஸ்ரேல் என்றாவது ஒரு நாள் சரிந்துவிழும் என்று பேச்சுக்குப் பேச்சு மேடைதோறும் சொல்லி வருபவர். அமெரிக்காவுக்குப் போட்டியாக அணு ஆயுதச் சோதனைகள் நடத்தி வருபவர். ஆகவே, அயோக்கியர்.

அயோக்கியர்? அஹ்மதின்ஜத் இதுவரை எந்த நாட்டின் மீதும் படையெடுத்ததில்லை. எந்த நாட்டு அரசாங்கத்தையும் கவிழ்த்ததில்லை? இஸ்ரேல் அரசுக்கு எதிரானவர் என்றபோதும் யூதர்கள் மீது அவர் கை கண்டு விரல்கூட பட்டதில்லை. மிக முக்கியமாக, அடுத்த நாட்டு அதிபரை தன் நாட்டுக்கு வரவேற்று அவமானப்படுத்தி அனுப்பியதில்லை!

மருதன்

கனவின் நுழைவாயில்

அப்பாவின் கை பிடித்து...



பார்த்திபன் கனவு இரண்டாவது பரிசுப் போட்டிக்குத் தயாரா?

இது பெண்களுக்கு மட்டுமேயான போட்டி. ஆகவே, ஆண்கள் சற்று ஒதுங்கி நில்லுங்கள். போட்டிக்குள் போகலாமா பெண்களே!

நரசிம்ம பல்லவரும், மகள் குந்தவியும் உரையாடிக்கொள்வதை கடந்த இரண்டு மூன்று வாரங்களாகப் படித்திருப்பீர்கள். பாசம், குறும்பு, கேலி கொப்பளிக்கும் அவர்களின் பேச்சில் தந்தை, மகள் என்பதைத் தாண்டி ஒரு தோழமை மிளிரும்.

இதுபோல் உங்கள் தந்தையுடன் உங்களுக்குள்ள தோழமை, பல்வேறு விஷயங்களைப் பகிர்ந்துகொண்ட விதம், மறக்க முடியாத சம்பவம்... இப்படி எதுவாக இருந்தாலும் பத்து வரிகளில் 'சுருக்' 'நறுக்'காக எழுதி அனுப்புங்கள். அத்துடன் கீழ்க்கண்ட கூப்பனையும் பூர்த்தி செய்து இணையுங்கள். **ஆசிரியர் தீர்ப்பே இறுதி.**

முடிவு தேதி : **20.10.2007**

பார்த்திபன் கனவு - பரிசுப் போட்டி - 2

பெயர் : ....

வயது : ....

முகவரி : ....

....

கல்கியில் மிகவும் பிடித்த பகுதிகள் : ....

கல்கியில் பெண்கள் பகுதி அவசியமா? : ....

ஆம் எனில் தாங்கள் எதிர்பார்க்கும் செய்தி?: ....

....

பார்த்திபன் கனவு

அமரர் கல்கி

11. பொன்னனின் சந்தேகம்

பொன்னி ஆற்றின் வெள்ளத்தின் மீது மற்றொரு நாள் பால் சூரியனின் பொற்கிரணங்கள் படிய, நதிப் பிரவாகமானது தங்கம் உருகி வெள்ளமாய்ப் பெருகுவது போலக் காட்சி தந்தது. அந்தப் பிரவாகத்தைக் குறுக்கே கிழித்துக்கொண்டும் வைரம், வைடூரியம் முதலிய நவரத்தினங்களை வாரித் தெளித்துக்கொண்டும் பொன்னனுடைய படகு தோணித் துறையிலிருந்து கிளம்பி, வசந்த மாளிகையை நோக்கிச் செல்லலாயிற்று. படகில் ஜடாமகுடதாரியான சிவனடியார் வீற்றிருந்தார். கரையில் பொன்னனுடைய மனைவி நின்று, படகு போகும் திசையைப் பார்த்துக்கொண்டிருந்தாள்.

நதியில் படகு போய்க்கொண்டிருந்த போது, பொன்னனுக்கும் சிவனடியாருக்கும் பின்வரும் சம்பாஷணை நடந்தது.

''பொன்னா! கடைசியில் இளவரசருடன் எவ்வளவு பேர்தான் சேர்ந்தார்கள்!'' என்று சிவனடியார் கேட்டார்.

''அந்த அவமானத்தை ஏன் கேட்கிறீர்கள், சுவாமி! ஆகா! அந்தக் கடைசி நேரத்தில் மகாராணிக்குச் செய்தி சொல்லும்படி மட்டும் இளவரசர் எனக்குக் கட்டளையிடாமற் போயிருந்தால்...''

''என்ன செய்துவிட்டிருப்பாய், பொன்னா? பல்லவ சைன்யத்தை நீ ஒருவனாகவே துவம்சம் செய்திருப்பாயோ?''

''ஆமாம், ஆமாம். நீங்கள் என்னைப் பரிகாசம் செய்ய வேண்டியதுதான். நானும் கேட்டுக்கொள்ள வேண்டியதுதான். இந்த உயிரை இன்னும் வைத்துக் கொண்டிருக்கிறேனல்லவா? ஆனால், சுவாமி! என்னத்துக்காக நான் உயிரை வைத்துக்கொண்டிருக்கிறேன் தெரியுமா? மகாராணியின் வார்த்தைக்குக் கட்டுப்பட்டு உடம்பைச் சுமக்கிறேன்...''

''மகாராணியின் வார்த்தைக்காக மட்டும்தானா பொன்னா? நன்றாக யோசித்துப் பார், வள்ளிக்காகக் கொஞ்சங்கூட இல்லையா?''

''வள்ளி அப்படிப்பட்டவள் இல்லை சுவாமி! எப்படியாவது உயிரைக் காப்பாற்றிக்கொண்டால் போதும் என்று நினைக்கிறவள் அவள் இல்லை. வீரபத்திர ஆச்சாரியின் பேத்தி அல்லவா வள்ளி? ஆகா! அந்தக் கிழவனின் வீரத்தைத்தான் என்னவென்று சொல்வேன்?''

''வீரபத்திர ஆச்சாரி இதில் எப்படி வந்து சேர்ந்தான், பொன்னா?''

''கிழவனார் சண்டை போடும் உத்தேசத்துடனேயே வரவில்லை. என்ன நடக்கிறதென்று தூரத்திலிருந்து பார்த்துக் கொண்டிருந்தார். ஆனால், அந்தச் சமயத்தில் இளவரசர் அநாதைபோல் நிற்பதைப் பார்த்ததும்



அவருக்கு ஆவேசம் வந்துவிட்டது. இளவரசருடைய கட்சியில் நின்று போரிடுவதற்கு ஆயிரம், பதினாயிரம் வீரர்கள் வருவார்கள் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தோம். உண்மையில் வந்து சேர்ந்தவர்கள் என்னைத் தவிர ஐந்தே பேர்தான். அவர்கள் கிராமங்களிலிருந்து வந்த குடியானவர்கள். திடீரென்று நாலாபுறத்திலிருந்தும் வீர கோஷத்துடன் வந்த பல்லவ வீரர்களைப் பார்த்ததும், அந்தக் குடியானவர்கள் கையிலிருந்த கத்திகளைக் கீழே போட்டுவிட்டுத் திகைத்துப் போய் நின்றார்கள். இதையெல்லாம் பார்த்தார் வீரபத்திர ஆச்சாரி. ஒரு பெரிய கர்ஜனை செய்துகொண்டு, கண் மூடித் திறக்கும் நேரத்தில் இளவரசர் நின்ற இடத்துக்கு வந்துவிட்டார். கீழே கிடந்த கத்திகளில் ஒன்றை எடுத்துச் சுழற்றத் தொடங்கினார். 'வீரவேல்! வெற்றிவேல்! விக்கிரம சோழ மகாராஜா வாழ்க!' என்று அவர் போட்ட சத்தம் நெடுந்தூரத்துக்கு எதிரொலி செய்தது. அடுத்த கணத்தில் பல்லவ வீரர்கள் வந்து எங்களைச் சூழ்ந்து கொண்டார்கள். ஆகா! அப்போது நடந்த ஆச்சரியத்தை நான் என்னவென்று சொல்வேன், சுவாமி? கிழவனாரின் கைகளில்தான் அவ்வளவு பலம் எப்படி வந்ததோ, தெரியவில்லை! கொல்லுப் பட்டறையில் சம்மட்டி அடித்த கையல்லவா? வாளை வீசிக்கொண்டு இடதுசாரி வலதுசாரியாகச் சுற்றிச் சுற்றி வந்தார். தொப்பு தொப்பென்று பல்லவ வீரர்கள் மண் மேல் சாய்ந்தார்கள். ஏழெட்டு வீரர்களை யமலோகத்துக்கு அனுப்பிவிட்டுக் கடைசியாக அவரும் விழுந்து விட்டார். இதையெல்லாம் தூரத்தில் நின்று தளபதி அச்சுதவர்மர் பார்த்துக் கொண்டிருந்தாராம். கிழவனாரின் வீரத்தைக் கண்டு அவர் பிரமித்துப்போய் விட்டாராம். அதனாலேதான் அந்தக் தீரக் கிழவருடைய உடலைச் சகல மரியாதைகளுடன் எடுத்துப் போய்த் தகனம் செய்யும்படியாகக் கட்டளையிட்டாராம்.''

''அதில் ஆச்சரியம் என்ன பொன்னா! வள்ளியின் பாட்டனுடைய வீர மரணத்தைக் கேட்டு உலக வாழ்க்கையை வெறுத்த எனக்குக்கூட உடம்பு சிலிர்க்கிறது. ஒரு தேசமானது எவ்வளவுதான் எல்லா விதங்களிலும் தாழ்வு அடைந்திருக்கட்டும். இப்படிப்பட்ட ஒரு வீர புருஷனுக்குப் பிறப்பளித்திருக்கும்போது அந்தத் தேசத்துக்கு இன்னும் ஜீவசக்தி இருக்கிறது என்று சொல்வதில் தடை என்ன? சோழநாடு நிச்சயம் மேன்மையடையப் போகிறது என்ற நம்பிக்கை எனக்கு இப்போது உண்டாகிறது'' என்றார் சிவனடியார்.

சற்றுப் பொறுத்து, ''அப்புறம் என்ன நடந்தது?'' என்று கேட்டார்.

''அப்புறம் என்ன? இளவரசரும் நானும் கிழவருடைய ஆச்சரியமான பராக்கிரமச் செயல்களைப் பார்த்துக் கொண்டே திகைத்து நின்றுவிட்டோம். அவர் விழுந்ததும் நாங்கள் இருவரும் ஏக காலத்தில் 'ஆகா' என்று கத்திக்கொண்டு அவர் விழுந்த திசையை நோக்கி ஓடினோம். உடனே, இளவரசரை அநேக பல்லவ வீரர்கள் சூழ்ந்துகொண்டார்கள். நான் வெறி கொண்டவனைப் போல் என் கையிலிருந்த வாளை வீசிப் போரிட ஆரம்பித்தேன். அப்போது, 'நிறுத்து பொன்னா?' என்று இளவரசரின் குரல் கேட்டது. குரல் கேட்ட பக்கம் பார்த்தேன். இளவரசரைச் சங்கிலியால் பிணைத்திருந்தார்கள். அவர் 'இனிமேல் சண்டையிடுவதில் பிரயோஜனமில்லை. பொன்னா! எனக்காக நீ ஒரு காரியம் செய்ய வேண்டும். மகாராணியிடம் போய் நடந்ததைச் சொல்ல வேண்டும். மேற்கொண்டு என்ன நடந்தபோதிலும், என் தந்தையின் பெயருக்கு அவமானம் வரும்படியான

நரசிம்மச் சக்கரவர்த்தி எவ்வளவு நல்லவர் பார்த்தாயா பொன்னா? விக்கிரமன் எதற்காக இவ்வளவு பிடிவாதம் பிடிக்க வேண்டும்?

காரியம் மட்டும் செய்ய மாட்டேன் என்று நான் சபதம் செய்ததாய்த் தெரியப்படுத்த வேண்டும்!' என்றார். எனக்குப் பிரமாதமான ஆத்திரம் வந்தது. 'மகாராஜா! உங்களைப் பகைவர்களிடம் விட்டுவிட்டு நான் போகவா!' என்று கத்திக்கொண்டு, என் வாளை வீசினேன். பின்புறமிருந்து என் மண்டையில் பலமான அடி விழுந்தது. உடனே நினைவு தவறிவிட்டது. அப்புறம் காராக்கிரகத்திலேதான் கண்ணை விழித்தேன்.''



''ஓகோ! காராக்கிரகத்தில் வேறு இருந்தாயா? அப்புறம் எப்படி விடுதலை கிடைத்தது!''

''மறுநாளே விடுதலை செய்துவிட்டார்கள். இளவரசரைத் தவிர மற்றவர்களையெல்லாம் மன்னித்து விட்டு வரும்படி மாமல்லச் சக்கரவர்த்தியிடமிருந்து கட்டளை வந்ததாம்'' என்றான் பொன்னன்.

''சக்கரவர்த்தி எவ்வளவு நல்லவர் பார்த்தாயா பொன்னா? உங்கள் இளவரசர் எதற்காக இவ்வளவு பிடிவாதம் பிடிக்க வேண்டும்? அதனால்தானே அவரை சக்கரவர்த்தி தேசப்பிரஷ்டம் செய்ய நேர்ந்தது'' என்றார் சிவனடியார்.

''ஆமாம்; நரசிம்மச் சக்கரவர்த்தி ரொம்ப நல்லவர்தான். பார்த்திப மகாராஜாவும் விக்கிரம மகாராஜாவுந்தான் பொல்லாதவர்கள்!'' என்றான் பொன்னன்.

பிறகு, ''நான் சக்கரவர்த்தியைப் பார்த்ததேயில்லை. பார்க்க வேண்டுமென்று ரொம்ப ஆசையாயிருக்கிறது. உறையூருக்கு எப்போதாவது வருவாரா, சுவாமி!'' என்றான்.

''ஆமாம்; சீக்கிரத்திலேயே வரப் போகிறார் என்றுதான் பிரஸ்தாபம்... ஏது பொன்னா! சக்கரவர்த்தியிடம் திடீரென்று உனக்கு அபார பக்தி உண்டாகிவிட்டது போல் தெரிகிறதே! சண்டையில் செத்துப் போகவில்லையென்று கவலைப்பட்டாயே! இப்போது பார்த்தாயா? உயிரோடு இருந்ததனால்தானே உனக்குச் சக்கரவர்த்தியைப் பற்றிய உண்மை தெரிந்து அவரிடம் பக்தி உண்டாகி இருக்கிறது.''

''ஆமாம், சக்கரவர்த்தியிடம் எனக்கு ரொம்பப் பக்தி உண்டாகியிருக்கிறது. எனக்கு மட்டுமில்லை; இதோ என்னுடைய வேலுக்கும் பக்தி உண்டாக்கியிருக்கிறது!'' என்று சொல்லிக்கொண்டே பொன்னன், படகில் அடியில் கிடந்த வேலை ஒரு கையால் எடுத்தான்.

''இந்த வேலுக்குச் சக்கரவர்த்தியிடம் சொல்ல முடியாத பக்தி. அவருடைய மார்பை எப்போது தழுவப் போகிறோம் என்று தவம் கிடக்கிறது!'' என்று சொல்லி பொன்னன் சிவனடியாரின் மார்புக்கு நேரே வேலை நீட்டினான்.

சிவனடியார் முகத்தில் அப்போது புன்சிரிப்புத் தவழ்ந்தது. ''பொன்னா! நான்தான் சக்கரவர்த்தி என்று எண்ணிவிட்டாயா, என்ன?'' என்றார்.

பொன்னன் வேலைக் கீழே போட்டான்.

''சுவாமி, சக்கரவர்த்தி எவ்வளவுதான் நல்லவராயிருக்கட்டும்; மகா வீரராயிருக்கட்டும்; தெய்வாம்சம் உடையவராகவே இருக்கட்டும். அவர் எனக்குப் பரம சத்ரு! ஒருநாள் இல்லாவிட்டால் ஒருநாள் அவரை நான் நேருக்குநேர் காண்பேன். அப்போது...'' என்று பொன்னன் பல்லை நறநறவென்று கடித்தான்.

சிவனடியார் பேச்சை மாற்ற விரும்பியவராய், ''ஏன் பொன்னா! அன்றைய தினம் மாரப்ப பூபதி உங்களுக்கு அருகில் வரவேயில்லையோ?'' என்று கேட்டார்.

''அந்தச் சண்டாளன் பேச்சை ஏன் எடுக்கிறீர்கள்? அவன் இளவரசரையும் தூண்டி விட்டுவிட்டு அச்சுதவர்மரிடம் போய்ச் சகல விவரங்களையும் தெரிவித்து

விட்டான். அப்படிப்பட்ட துரோகி அன்றைக்கு ஏன் கிட்ட வரப் போகிறான்? ஆனால், சுவாமி! அவனுடைய வஞ்சகப் பேச்சில் நாங்கள் எல்லாருமே ஏமாந்து போய்விட்டோம். வள்ளி ஒருத்தி மட்டும், 'பூபதி பொல்லாத வஞ்சகன். அவனை நம்பக்கூடாது' என்று சொல்லிக்கொண்டிருந்தாள். அவள் சொன்னதுதான் கடைசியில் சரியாப் போச்சு'' என்றான் பொன்னன்.

''வள்ளி ரொம்பவும் புத்திசாலி, பொன்னா! சந்தேகமேயில்லை. அவள் ஒரு பெரிய தளபதியின் மனைவியாயிருக்கத் தகுந்தவள்...''

''என்ன சொன்னீர்கள், சுவாமி?''



''வள்ளி ஒரு பெரிய சேனாதிபதியின் மனைவியாயிருக்கத் தகுந்தவள் என்றேன்.''

''நீங்கள் சொன்ன இதே வார்த்தையை இதற்கு முன்னாலும் ஒருவன் சொன்னதுண்டு.''

''யார் அது?''

''மாரப்ப பூபதிதான்; அவன் சோழ சேனாதிபதியாயிருந்த காலத்தில் அப்படிச் சொன்னான்.''



''ஓகோ!''

''எனக்கு ஒவ்வொரு சமயம் என்ன தோன்றுகிறது தெரியுமா? தாங்கள் கோபித்துக் கொள்ளாமலிருந்தால் சொல்லுகிறேன்.''

''தாராளமாகச் சொல்லு, பொன்னா! நான் சந்நியாசி; ஐம்புலன்களையும் அடக்கிக் காமக் குரோதங்களை வென்றவன்.''

''நீங்கள்கூட மாரப்ப பூபதியின் ஆளோ, அவனுடைய தூண்டுதலினால்தான் இப்படி வேஷம் போட்டுக்கொண்டு வஞ்சகம் செய்கிறீர்களோ என்று தோன்றுகிறது.''

சிவனடியார் கலகலவென்று சிரித்துவிட்டு, ''இதைப் பற்றி வள்ளியின் அபிப்பிராயம் என்னவென்று அவளை எப்போதாவது கேட்டாயா?'' என்றார்.

''வள்ளிக்கு உங்களிடம் ஒரே பக்தி. 'நயவஞ்சகனை நம்பி மோசம் போவாய், உத்தம புருஷரைச் சந்தேகிப்பாய்' என்று என்னை ஏசுகிறாள். மாரப்ப பூபதி இப்படிப்பட்ட பாதகன் என்று தெரிந்த பிறகு அவளுடைய கை ஓங்கிவிட்டது. என்னைப் பரிகாசம் பண்ணிக்கொண்டே இருக்கிறாள்.''

''நான்தான் சொன்னேனே பொன்னா, வள்ளி புத்திசாலி என்று. அவள் புத்திமதியை எப்போதும் கேள். வள்ளி தளபதியின் மனைவியாயிருக்கத் தகுந்தவள் என்று நான் சொன்னது மாரப்ப பூபதி சொன்ன மாதிரி அல்ல; நீயும் தளபதியாகத் தகுந்தவன்தான்!''

''ஆமாம் யார் கண்டது? விக்கிரம மகாராஜா சோழ நாட்டின் சிம்மாசனம் ஏறும் போது, ஒருவேளை நான் தளபதியானாலும் ஆவேன்.''

> **''விக்கிரம மகாராஜா சோழ நாட்டின் சிம்மாசனம் ஏறும்போது ஒரு வேளை நான் தளபதியானாலும் ஆவேன்'' என்றான் பொன்னன்!**

''இரண்டும் நடக்கக் கூடியதுதான்.''

''ஆகா! இந்தப் பெரிய பாரத பூமியில் எங்கள் இளவரசருக்கு இருக்க இடமில்லையென்று கப்பலில் ஏற்றி அனுப்பிவிட்டாரே, சக்கரவர்த்தி! அவருடைய நெஞ்சு எப்படிப்பட்ட கல் நெஞ்சு! அதைக் காட்டிலும் ஒரே அடியாக உயிரை வாங்கியிருந்தாலும் பாதகமில்லை...''

''நீ சொல்வது தவறு, பொன்னா! உயிர் உள்ள வரையில் எப்படியும் நம்பிக்கைக்கும் இடமுண்டு. ஒரு நாள் இல்லாவிட்டால் ஒரு நாள் நம்முடைய மனோரதங்கள் நிறைவேறும். நீ வேணுமானால் மகாராணியைக் கேட்டுப்பார். மகன் இந்த மட்டும் உயிரோடு இருக்கிறானே என்று மகாராணிக்குச் சந்தோஷமாய்த்தானிருக்கும்... அதோ மகாராணி போலிருக்கிறதே!'' என்று சிவனடியார் வியப்புடன் சொன்னார்.

அப்போது படகு வசந்த மாளிகைத் தீவின் கரைக்குச் சமீபமாக வந்து கொண்டிருந்தது. கரையில் அருள்மொழி தேவியும் ஒரு தாதியும் வந்து தோணித் துறையின் அருகில் நின்றார்கள். அருள்மொழி தேவி படகிலிருந்த சிவனடியாரை நோக்கிப் பக்தியுடன் கை கூப்பிக் கொண்டு நிற்பதை பொன்னன் பார்த்தான். உடனே சிவனடியாரை நோக்கி, ''சுவாமி! ஏதோ நான் தெரியாத்தனமாக உளறிவிட்டேன்; அதையெல்லாம் மன்னிக்க வேண்டும்'' என்று உண்மையான பச்சாதாபத்துடனும் பக்தியுடனும் கூறினான்.

12. ராணியின் துயரம்

சிவனடியார் படகிலிருந்து இறங்கியதும் அருள்மொழி நமஸ்கரித்துவிட்டு நிமிர்ந்து பார்த்தாள், அவளுடைய கண்களில் நீர் ததும்பிற்று.

''சுவாமி! விக்கிரமன் எங்கே?'' என்று சோகம் நிறைந்த குரலில் அவள் கதறி விம்மியபோது, சிவனடியாருக்கு மெய் சிலிர்த்தது. பொன்னன் முகத்தைத் திருப்பிக் கொண்டான். மரங்களின் மீதிருந்த பறவை இனங்களும் அந்தச் சோகக் குர

லைக் கேட்கச் சகிக்கா தவை போல் சிறகுகளை அடித்துக்கொண்டு பறந்து சென்றன.

''அருள்மொழி! இது என்ன பைத்தியம்? உன்னுடைய பதி உனக்கு என்ன சொல்லி விட்டுப் போனார்? நீ வீரத் தாயாக இருக்க வேண்டுமென்று அவர் சொன்ன கடைசி வார்த்தையை மறந்துவிட்டாயா? இப்படியும் தைரியத்தை இழக்கலாமா? வா, அரண்மனைக்குப் போய் சாவகாசமாகப் பேசலாம்'' என்றார் சிவனடியார்.



மாஞ்சோலைக்கிடையே அமைந்திருந்த அழகிய பாதை வழியாக எல்லாரும் வசந்த மாளிகைக்குப் போய்ச் சேர்ந்தார்கள். ஒரு காலத்தில் எவ்வளவோ குதூகலமும் கொண்டாட்டமுமாயிருந்த வசந்த மாளிகை, இப்போது பொலிவிழந்த சூன்யமாகக் காணப்பட்டது. அரண்மனை ஊழியர்களின் முகங்களும் களையின்றிச் சோகம் நிறைந்து தோன்றின.

மாளிகை முன் மண்டபத்திலே புலித் தோல் விரித்திருந்த உயரமான பீடத்தில் சிவனடியார் அமர்ந்தார். அருள்மொழி கீழே வெறுந் தரையில் உட்கார்ந்தாள்.

''அம்மா! உன் மனத்தைக் கலங்கவிடக் கூடாது...'' என்று சிவனடியார் ஆரம்பித்த போது, அருள்மொழி அவரைத் தடுத்து துக்கம் பொங்கும் குரலில் கூறினாள்:

''ஐயோ! மனத்தைக் கலங்கவிடக் கூடாது என்கிறீர்களே? மனத்தைத்தான் நான் கல்லாகச் செய்துகொண்டு விட்டேனே? என் தேகமல்லவா கலங்குகிறது? குழந்தையை நினைத்தால் வயிறு பகீரென்கிறதே! குடல் எல்லாம் நோகிறதே! நெஞ்சை இறுக்கிப் பிழிவது போல் இருக்கிறதே! நான் என்ன செய்வேன் சுவாமி! விக்கிரமனைக் காப்பாற்றுகிறேன் என்று வாக்குக் கொடுத்தீர்களே, அந்த வாக்கை நிறைவேற்றினீர்களா?''

''ஏன் நிறைவேற்றவில்லை, அருள்மொழி? நிறைவேற்றித்தான் இருக்கிறேன். விக்கிரமனுடைய உயிரைக் காப்பாற்றுவதாக உனக்கு வாக்குக் கொடுத்தேன். அவனுடைய உயிரைக் காப்பாற்றித் தான் இருக்கிறேன். விக்கிரமனை வீரமகனாகச் செய்வதாக அவனுடைய தந்தைக்கு வாக்களித்திருந்தேன். அதையும் நிறைவேற்றியே இருக்கிறேன். அம்மா! நீ மட்டும் அன்று காஞ்சியில் பல்லவ சக்கரவர்த்தியின் நீதி சபையில் இருந்திருந்தாயானால், உடல் பூரித்திருப்பாய்! பொய்யாமொழிப் பெருமான்,

'ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்'

என்று சொன்னது உன் விஷயத்தில் மட்டும் பொய்யாகப் போகுமா? சக்கரவர்த்தி எவ்வளவோ நல்ல வார்த்தை சொன்னார் விக்கிரமனுக்கு. 'பல்லவ சாம்ராஜ்யத்துக்குள் அடங்கிக் கப்பங் கட்டிக்கொண்டு வருவதாயிருந்தால் உன்னுடைய துரோகத்தை மன்னித்து சோழ நாட்டுக்கும் பட்டங்கட்டுகிறேன்!' என்றார். விக்கிரமன் அணுவளவாவது மனம் சலிக்க வேண்டுமே? மலையைப் போல் அசையாமல் நின்றான். அது மட்டுமா? சக்கரவர்த்தியையே தன்னுடன் சண்டைக்கு அழைத்தான். 'நீர் வீரன் என்பது உண்மையானால், என்னுடன் வாட்போர் செய்ய வாரும்; என்னை ஜெயித்துவிட்டுப் பிறகு கப்பம் கேளும்' என்றான். அவனுடைய கண்களிலேதான் அப்போது எப்படித் தீப்பொறி பறந்தது? அருள்மொழி! அதைப் பார்க்க நான் கொடுத்து வைத்திருந்தேன்; நீதான் அந்த பாக்கியத்தைச் செய்யவில்லை.

ஆவலினால் விரிந்த கண்களில் கண்ணீர் ததும்ப மேற்கூறிய விவரத்தைக் கேட்டுக்கொண்டிருந்த அருள்மொழி கூறினாள்: "நான் பாக்கியமற்றவள்தான். அதற்கும் சந்தேகமா? பதியைப் போர்க்களத்தில் பலி கொடுத்துவிட்டு, இந்த உயிரை வைத்துக் கொண்டிருக்கிறேன்; மகன் தேசப் பிரஷ்டனாகிக் கண் காணாத தேசத்துக்குப் போன பிறகும் உயிர் வைத்துக் கொண்டிருக்கிறேன். சுவாமி! பல்லவச் சக்கரவர்த்தி உறையூருக்கு வரப்போகிறார் என்று சொல்கிறார்களே, அது உண்மையா? அப்படி வந்தால், அவர் காலில் விழுந்து, 'என்னையும் விக்கிரமனை அனுப்பிய இடத்துக்கே அனுப்பி விடுங்கள்!' என்று வேண்டிக்கொள்ளப் போகிறேன்..."

"என்ன சொன்னாய், அருள்மொழி! அழகுதான்! உன் புருஷனுடைய ஜன்ம சத்ருவின் காலில் விழுந்தா கெஞ்சுவாய்! வீர சொர்க்கத்தில் இருக்கும் பார்த்திப மகாராஜா இதை அறிந்தால் சந்தோஷப்படுவாரா? யோசித்துப் பார்!"

"ஆமாம், அவர் சந்தோஷப்பட மாட்டார்; நானும் அவருடைய சத்ருவிடம் பிச்சை கேட்கப் போகமாட்டேன்! ஏதோ ஆத்திரப்பட்டுச் சொல்லிவிட்டேன். ஆகா! அவர்தான் என்னவெல்லாம் ஆகாசக் கோட்டை கட்டினார்? கன்னியாகுமரியிலிருந்து இமய பர்வதம் வரையில் புலிக் கொடி பறக்க வேண்டுமென்று ஆசைப்பட்டாரே! அவருடைய பிள்ளைக்கு இந்தப் பெரிய தேசத்தில் இருக்கவும் இடமில்லாமல் போய்விட்டதே...!"

"பார்த்திப மகாராஜா வேறொரு மனக்கோட்டையும் கட்டவில்லையா அம்மா? சோழ ராஜ்யம் கடல்களுக்கு அப்பாலுள்ள தேசங்களிலும் பரவ வேண்டுமென்று அவர் ஆசைப்படவில்லையா? இரகசிய சித்திர மண்டபத்தில் அவர் எழுதியிருக்கும் சித்திரங்களைக் கொஞ்சம் ஞாபகப்படுத்திக் கொள்."

"ஐயோ! அவருடைய ஆசை இம்மாதிரியா நிறைவேற வேண்டும்? விக்கிரமன் இன்று கடல்களுக்கப்பாலுள்ள இராஜ்யங்களைப் பிடிப்பதற்காகப் படையெடுத்தா போயிருக்கிறான்? எந்தக் காட்டுமிராண்டித் தீவில் கொண்டுபோய் அவனை விட்டிருக்கிறார்களோ? காட்டிலும் மலையிலும் எப்படி அலைந்து கஷ்டப்படுகிறானோ? ஏன் என்னை ஏமாற்றப் பார்க்கிறீர்கள், சுவாமி!"

"உன்னை நான் ஒரு நாளும் ஏமாற்ற மாட்டேன் அம்மா! உன்னை ஏமாற்றி எனக்கு என்ன காரியம் ஆக வேண்டும்? உன் மகனுக்கு ஒரு குறையும் வராது என்பது என் நம்பிக்கை. விக்கிரமனுக்கு முன்னால் யாரும் தேசப்பிரஷ்டராகிக் காட்டுக்குப் போனதில்லையா? இராமர் போகவில்லையா? பஞ்சபாண்டவர்கள் போகவில்லையா? விக்கிரமன் கடல்களுக்கு அப்பாலுள்ள நாடுகளில் அனுபவிக்கும் கஷ்டங்கள் எல்லாம், அவனுடைய வீர பராக்கிரமங்களை இன்னும் அதிகமாக வளர்க்கும்! திரும்பத் தாய் நாட்டுக்கு அவன் வரும்போது..."

"ஐயோ! அவன் வரவேண்டாம், சுவாமி, வரவேண்டாம். தாய்நாட்டில் காலடி வைத்தால் சிரசாக்கினை என்றுதான் சக்கரவர்த்தி விதித்திருக்கிறாரே? எங்கேயாவது கண்காணாத தேசத்திலாவது அவன் உயிரை வைத்துக் கொண்டிருக்கட்டும். அதுவே போதும்!" என்றாள் அருள்மொழி.

"ஆனால், அப்படி அவன் வராமல் இருக்க முடியாது அருள்மொழி! என்றைக்காவது ஒரு நாள் அவன் வந்துதான் தீருவான். தாயின் பாசமும் தாய் நாட்டின் பாசமும் அவ

> **"ஐயோ எனக்கு மிஞ்சியிருந்த செல்வம் எல்லாம் என் பிள்ளையின் அன்பு ஒன்றுதான். அதற்கும் ஆபத்து வந்துவிட்டதா" என்றாள் அருள்மொழி!**

னைக் கவர்ந்து இழுக்கும். இந்த இரண்டு பாசங்களைக் காட்டிலும் வலிமை பொருந்திய இன்னொரு பாசமும் சேர்ந்திருக்கிறது. உனக்கு அது தெரிந்திருக்க நியாயமில்லை...'' என்று சொல்லி சிவனடியார் நிறுத்தினார்.



''என்ன சொல்கிறீர்கள், சுவாமி!''

''ஆமாம்; தாயின் அன்பையும் தாய்நாட்டுப் பற்றையுங் காட்டிலும் பெரியதொரு சக்தியும் அவனைத் திரும்பவும் இத்தேசத்துக்கு வரும்படி இழுக்கும். அது ஒரு இளம் பெண்ணின் கருவிழிகளிலுள்ள காந்த சக்திதான். அம்மா! நான் இன்று பற்றை அறுத்த துறவியானாலும் பூர்வாசிரமத்தில் ஸ்திரீ பிரேமையினால் ஏற்படும் இன்ப துன்பங்களை அறிந்தவன்...''

''இது என்ன, சுவாமி! நீங்கள் சொல்வது எனக்கு விளங்கவில்லையே? விக்கிரமனுக்கும் ஸ்திரீ பிரேமைக்கும் என்ன சம்பந்தம்?'' என்று வியப்புடன் கேட்டாள் அருள்மொழி.

சிவனடியார் புன்னகையுடன் கூறினார்:

''ஒவ்வொரு தாயும் தன் மகனைப் பற்றி இப்படித்தான் வெகு காலம் எண்ணிக் கொண்டிருக்கிறாள். கடைசியில் நேருக்கு நேர் உண்மையைக் காணும்போது திடுக்கிடுகிறாள். நீயாவது முன்னாலேயே தெரிந்துகொள் அம்மா! உன் மகன் விக்கிரமன் காஞ்சி நகரின் வீதியில் ஒரு கன்னியைச் சந்தித்தான். அவனைக் குறுக்கும் நெடுக்குமாய்ச் சங்கிலியால் பிணைத்துக் குதிரை மீது கட்டிக்கொண்டு போன போதுதான் அந்தச் சந்திப்பு ஏற்பட்டது. அந்த நிலையிலேயே அந்தப் பெண்ணும் தன்னுடைய உள்ளத்தை அவனுக்குப் பறிகொடுத்து விட்டாள். இது நான் கேட்டும் ஊகித்தும் அறிந்த விஷயம். ஆனால் நேரில் நானே ஒரு அதிசயத்தைப் பார்த்தேன். மாமல்லபுரத்துக் கடற்கரையில் விக்கிரமனை ஏற்றிச் சென்ற கப்பல் கிளம்பக் கரையோரமாய்ச் செல்ல ஆரம்பித்த சமயத்தில், அந்தப் பெண் காஞ்சியிலிருந்து ஓடோடி வந்து சேர்ந்தாள். மறுபடியும் அவர்களுடைய கண்கள் சந்தித்தன; உள்ளங்கள் பேசிக்கொண்டன. காதலும் கனிவும் ததும்பிய அந்தப் பெண்ணின் விசால நயனங்களை விக்கிரமனால் ஒருநாளும் மறக்க முடியாது. இரவிலும், பகலிலும் விழித்திருக்கும் நிலையிலும், தூக்கத்திலே கனவிலும், அந்தப் பெண்ணின் மதிவதனம் அவன் முன்னால் தோன்றிக் கொண்டுதானிருக்கும். எங்கே இருந்து எந்தத் தொழில் செய்தாலும், எத்தகைய இன்ப துன்பங்களை அனுபவித்தாலும் விக்கிரமன் அந்தப் பெண்ணை மறக்க மாட்டான். என்றைக்காவது ஒருநாள் அவளைப் பார்க்க ஆசையுடன் அவன் தாய்நாட்டுக்குத் திரும்பி வந்தே தீருவான்.''

இத்தனை நேரமும் திகைத்து உட்கார்ந்துகொண்டிருந்த அருள்மொழி, ''ஐயோ! எனக்கு மிஞ்சியிருந்த செல்வமெல்லாம் என் பிள்ளையின் அன்பு ஒன்றுதான், அதற்கும் ஆபத்து வந்துவிட்டதா? அந்தப் பெண் யார் சுவாமி!'' என்று தீனக் குரலில் கேட்டாள்.

''பல்லவச் சக்கரவர்த்தியின் மகள் குந்தவி.''

''ஆகா! என் பதியினுடைய பரம சத்ருவின் மகளா? சுவாமி! என்னமோ செய்கிறதே! தலையைச் சுற்றுகிறதே!'' என்றாள் அருள்மொழி. அடுத்த கணம் தரையில் மூர்ச்சித்து விழுந்தாள்.

(தொடரும்)

கிறுக்கெழுத்துப் போட்டி!



"டாக்டரின் கையெழுத்துக்குப் பரிசு கொடுத்திருக்காங்களா!?"

"ஆமாம், சிறந்த கிறுக்கெழுத்துக்கான பரிசுதான் அது."

- லலிதா செல்லப்பா

"என் மாப்பிள்ளையோட அப்பாவே கல்யாணத்துக்குத் தடையா இருக்காரு?"

"ஒரு ஆம்பளையோட கஷ்டம் இன்னொரு ஆம்பளைக்குத்தானே தெரியும்!"

- ஜெ.மாணிக்கவாசகம்





"போர்க்களத்தில் மன்னர் எதற்கு தான தர்மம் பண்றார்?"


"தர்மம்தான் தலை காக்கு மாமே!"


- சி.பி.செந்தில்குமார்

"தாத்தா நாலஞ்சு நாளா உனக்குப் பாக்குவெத்தல இடிச்சுத் தர்றாங்களே, என் பாட்டி?"

" எனக்கு பென்ஷன் வர்ற தேதி நெருங்கிட்டிருக்கில்ல!"

- உ. ராஜாஜி





''இது கூட்டணிக் கட்சித் தலைவர்கள் எல்லாம் சேர்ந்து கட்டின கட்டடமா?''

''ஏன்?''

''எங்கே பார்த்தாலும் விரிசலா இருக்கே?''

- மோகன்

''அந்த டாக்டர் போலின்னு எப்படிச் சொல்ற?''

''தங்கப் பல் கட்டினா செய்கூலி, சேதாரம் இலவசம்னு சொல்றாரே, அதை வெச்சுத்தான்.''


- அ. ராதா



''கட்சியில் புதுசா கோஷ்டி ஒண்ணு உண்டாயிடுச்சுன்னு தலைவர் சந்தோஷப்படுறாரே?''

''ஆமாம், கோஷ்டிப் பூசல் வர்ற அளவுக்குக் கட்சி வளர்ந்துடுச்சு இல்லையா, அதான்!''

- எம்.அசோக்ராஜா



''காலையில பத்து மணிக்கு தினமும் நான் ஆபீஸ்ல இருந்தாகணும்.''

''இல்லன்னா?''

''எங்கே இருக்கேனோ அங்கேயே தூங்கிடுவேன்.!''

- கு. அருணாசலம்



‘உபவாசம்’ என்றால் ‘கூட வசிப்பது’. பகவானோடுகூட, அவனுக்குப் பக்கத்தில் ஒட்டிக்கொண்டு வசிப்பதுதான் உபவாசம். அன்றைக்கு வயிற்றில் ஒன்றையும் தள்ளாவிட்டால்தான் அப்படி அவனோடுகூட, கிட்டக்க வசிக்க முடியும். மனசு அவன் கிட்டக்கவே கிடக்க வேண்டுமானால் அதற்கு முதலில் வயிறு வெறுமனே கிடக்கணும். சாப்பிட்டால் வயிற்றிலே ‘கடபுடா’; வேலை செய்ய முடிவதில்லை. மனசையும் எதிலேயும் நிறுத்த முடிவதில்லை. வயிறு அடைசலில்லாமல் இருந்தால்தான் நன்றாகப் பிராணாயாமம் பண்ணி, மனசைச் சுத்தி செய்துகொண்டு ஒருமுகமாக நிறுத்த முடியும். பெரிசாக மூச்சடக்கிக் கும்பகம் பண்ண வேண்டுமென்று இல்லாவிட்டாலும், தடைபடாமல் தீர்க்கமாக சுவாசம் விடும்படியிருந்தால்தான் மனசு தியானத்தில் நிற்கும். வயிற்றில் கனம் இருந்தால் இப்படி இலகுவாக சுவாசிக்க முடிவதில்லை. இதற்காகத்தான் உடம்பை நெற்றுபோல ஆக்கிக்கொண்டு, அதனால் சுவாசத்தை இலகுவாகவும் மனசை லைட்டாகவும் பண்ணிக்கொண்டு, நன்றாக ஈஸ்வர தியானத்தில் ஈடுபடும் பொருட்டு எப்போதுமே ஆகாரத்தை இலகுவாக வைத்துக்கொள்ள வேண்டுமென்றும், பக்ஷத்துக்கு ஒரு நாள் சுத்த உபவாசம் அநுஷ்டிக்க வேண்டுமென்றும் சாஸ்திரம் விதிக்கிறது.

– ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகள்

அருள்வாக்கு



உபவாசம்!

ஆவி

ஜகஜ்ஜால ஜோடி

சீக்ரெட் ஆஃப் சிறுநீரகம்

சென்னைவாசிகளிடம் கூவம் ஆறு எதுவென்று கேட்டுப் பாருங்கள். அடையாறையும் கூவம் என்பார்கள்; பக்கிங்ஹாம் கால்வாயையும் கூவம் என்பார்கள். அவர்களைப் பொறுத்தவரை, கழிவுநீர் ஆக்கிரமித்துவிட்ட ஆறுகள், கால்வாய்கள் எல்லாமே கூவம்தான். ஆனால், ஒரு உண்மை தெரியுமா? கூவம் ஆற்று நீரை



அறுபது ஆண்டுகளுக்கு முன்பு சென்னை மக்கள் குடிநீராய்க் குடித்தார்கள்! சென்னைக்கு வடமேற்கே உள்ள திருவள்ளூரை ஒட்டியிருக்கும் கிராமம்தான் கூவம். சிவபெருமான் அசுரனை அழித்து உலகைக் காத்து, தணிந்த சினத்தோடு கோயில் கொண்டிருக்கும் இந்தப் புனித கிராமத்தில் கடல்போல காட்சியளிப்பது தான் கூவம் ஏரி.

இந்த ஏரியிலிருந்து உற்பத்தியாகி சென்னை நகருக்குள் வரும் கூவம் ஆறு, இன்று தனது புனிதத்தைத் தொலைத்து விட்டு நிற்பது சோகம்தான்.

சிறுநீரகங்களாகிய நாங்களும் ஒரு ஆறு போலத்தான் பலரது உடலில் கூவத்தைப்போல மெல்ல மெல்ல சிதைந்து, இறுதியில் செயலிழந்து போகிறோம்.

உங்கள் உடலில் உள்ள கணையத்தில் உற்பத்தியாகும் 'இன்சுலின்' ஹார்மோனை, அதன் பயன்பாட்டுக்குப் பிறகு உடைத்துச் செரிமானம் செய்கிறோம். ஒரு ஹார்மோனோ அல்லது புரதமோ, உடலில் எங்கே உற்பத்தியானாலும், அது உடலின் மற்றொரு இடத்தில் அழிய வேண்டும். அதாவது, செரிமானம் ஆக வேண்டும். நாங்கள் செயல்திறன் இழக்கும்போது, இன்சுலினை உடைத்துச் செரிமானம் செய்ய முடியாத நிலைக்குத் தள்ளப்படுகிறோம். இதனால் இன்சுலின் அளவு உடலில் திடுதிபுவென்று அதிகரிக்கிறது. இந்த இடத்தில் சர்க்கரை நோயுள்ள இனிய மனிதர்கள், ஒரு தப்புக் கணக்கைப் போட்டு விடுவார்கள். இன்சுலின், உடம்பில் இருந்தால் நல்லதுதானே என்பது இவர்களின் கருத்து. ஒரு கட்டத்தில் இவர்கள் போட்டுக்கொள்ளும் இன்சுலின் ஊசியோடு சேர்ந்து, மேலும் இன்சுலின் அளவு அதிகரித்து விடும். இதனால் சர்க்கரை பரிசோதனையில் இரத்த சர்க்கரை இயல்பான நிலையை எட்டிவிட்டது போன்ற ஒரு மாயத்தோற்றம் உருவாகும். ஆனால்,



டாக்டர் பி.ரவிச்சந்திரன்

நிஜம் அதுவல்ல. நாங்கள் செயல்திறன் இழந்திருப்போம். அதன் விளைவுதான் இந்த மாயத் தோற்றம்.


ஹீமோகுளோபின் அதிகரிப்பும்கூட எங்களின் சித்து விளையாட்டு தான். மாண்புமிகு இறைவன், ஆக்ஸிஜன் தணிக்கை அணுக்களை ஏன் எங்களின் உள்ளே வைத்தார் என்றால், உடலில் உள்ள மொத்த இரத்தத்தில், இருபது சத விகிதத்தை தினசரி சுத்தம் செய்கிற வேலையை நாங்கள்தான் செய்து வருகிறோம் என்ற சிம்பிள் லாஜிக்தான். இரத்தத்தில் ஆக்ஸிஜன் குறைவாக இருந்தால், ஹீமோகுளோபின் அதிகமாக இருக்கும். புகை பிடிப்பவர்களுக்கும், ஆஸ்துமா நோயாளிகளுக்கும் நுரையீரல் குறைவாகத் தான் வேலை செய்யும். அதேபோல கடல் மட்டத்தைவிட்டு மிக உயரமான மலைப் பகுதியில் வசிப்பவர்களுக்கும் ஆக்ஸிஜன் குறைவாகத்தான் இருக்கும். ஹீமோகுளோபின் குறைவாக இருந்தாலும் பிரச்னை; அதிகரித்தாலும் பிரச்னை. ஹீமோகுளோபின் அதிகரித்தால், இரத்தத்தில் அளவுக்கு அதிகமாக அணுக்களும் அதிகரித்து விட்டன என்று அர்த்தம். இரத்தத்தில் அணுக்களாகவே இருந்தால் நீர் ஓடாது. அணுக்களால் இரத்த வழிகள் அடைத்துக் கொள்ளும். குறைவாக இருந்தால் இரத்த சோகை நோய் வந்து இதயத்தசைகள் பல வீனமாகும். எங்களது பி.சி.டி. குழல்களை இரசாயனங்கள் தாக்கும்போது, அங்கே



யுள்ள ஆக்ஸிஜன் சென்சார்களும் பாதிப் படைகின்றன. இதனால், எரித்ரோபொயட்டினை உற்பத்தி செய்ய முடியாமல் நாங்கள் தடுமாறுகிறோம். எரித்ரோபொயட்டின் உற்பத்தி பாதிக்கப்படும் போது, இரத்த அணுக்களின் உற்பத்தி பாதிக்கிறது. இரத்த அணுக்கள் உற்பத்திக் குறையும்போது ஹீமோகுளோபின் குறைகிறது. இதைச் சமாளிக்கத்தான் இப்போது எரித்ரோபொயட்டின் ஊசிகளாக வந்து விட்டன. ஊசி வழியே எடுத்துக்கொள்ளும் எரித்ரோபொயட்டின், நேரே எலும்பு மஜ்ஜைக்குச் சென்று அங்கே இரத்தத்தை உற்பத்தி செய்துவிடுகிறது. மருத்துவ அறிவியலின் மகத்தான சாதனைகளில் ஒன்று எரித்ரோபொயட்டின் ஊசி. புற்று நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு, இரத்தம் கொடுத்துக்கொண்டே இருக்க வேண்டும். இவர்களுக்கு எரித்ரோபொயட்டின்

ஊசி ஒரு மாமருந்து.

உடலில் உப்பைப் பிடித்து வைத்துக் கொள்ளும் ரெனினைக் கண்டுபிடித்த பிறகும் ஒரு புரட்சி நடந்தேறியது. இன்று ரெனின் செயல்பாட்டைத் தடுக்கவும் மாத்திரைகள் வந்தாகிவிட்டன. ஆயிரம் மாத்திரைகள் வந்தாலும் எங்களது பி.சி.டி. ஹென்லே, டி.சி.டி. குழல்களின் மீதான தாக்குதல் நிறுத்தப்பட வேண்டும். அதற்குக் கொடிய இரசாயனங்கள் இல்லாத உணவு முறையும், நச்சுக்கள் இல்லாத குடிதண்ணீரும், மனஅழுத்தம் இல்லாத வாழ்க்கை முறையும் வேண்டும். உங்கள் குடிநீரில் இருக்கும் இரசாயனங்களை,



ஆவியாக்கி வடித்தல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி நீங்களே வீட்டில் ஜமாய்க்கலாம். நாங்களே சொல்லித் தருகிறோம். இதுவொன்றும் நவீன கண்டு பிடிப்பு அல்ல. உங்களின் தாத்தா, பாட்டன், முப்பாட்டன் பயன்படுத்திய முறை தான். இதை இன்று நல்ல தண்ணீருக்கு வழியே இல்லாத சவுதி அரேபியர்கள் வீட்டுக்கு வீடு பயன்படுத்துகிறார்கள்.

ஆவியாக்கி வடிப்பதற்கு நான்கு குவளை முறை பயன்படுகிறது. இதில் உப்புத் தண்ணீரையே ஆவியாக்கி தூய தண்ணீராகப் பருகலாம். இந்த முறையைச் செயல்படுத்த வெயில் சுட்டெரிக்கும் உங்கள் வீட்டின் மொட்டைமாடியே போதும். இருபது லிட்டர் கொள்ளளவு கொண்ட நான்கு ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் குவளைகள் தேவை. அவற்றில் இரண்டுக்கு மேல் மூடி தேவை. நடுவில் இருக்கும் இரண்டுக்கும் தேவையில்லை. இந்த நான்கு குவளைகளையும் துளைத்துச் செல்ல, ஒரு ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் குழாய் தேவை. படத்தில் காட்டியபடி முதல் குவளையின் மேற்பகுதியில் ஒரு முனையைப் பதித்துவிட்டு, அந்தக் குழாய் சாய்வு கோணத்தில் இரண்டாவது, மூன்றாவது குவளைகளின் உள்ளே பயணித்து இறுதியாக, கடைசி மூடப்பட்ட குவளையின் அடிப்பகுதியில் மற்றொரு முனை, அதாவது வாய்ப்பகுதி பதிக்கப்பட வேண்டும். இப்படிப் பதிக்கப்பட்ட பின்பு, முதல் குவளையின் மற்றொரு துளை வழியே குடிநீர் ஆதாரமாக நீங்கள் பயன்படுத்த நினைக்கும் தண்ணீரைக் குவளையின் கொள்ளளவான 20 லிட்டரில், பாதி அளவான 10 லிட்டரை உள்ளே நிரப்ப வேண்டும். கொதிக்கும் வெயிலில் சூடாகும் தண்ணீர் ஆவியாகிக் குழாய் வழியே இரண்டாவது மூன்றாவது குவளைகளை அடையும். திறந்திருக்கும் இரண்டாவது மூன்றாவது குவளைகளில் சுழற்சி முறையில் சொட்டுச் சொட்டாகத் தண்ணீரைக் கொட்ட வைத்து, நீராவி பயணப்படும் குழாயைக் குளிர்விக்கலாம். மேலும் நான்காவது மூடப்பட்ட குவளையையும் இதேபோல் குளிர்வித்தால், நீராவியை நான்காவது குளையில் தண்ணீராகச் சேமிக்கலாம். பன்னிரெண்டு மணி நேரத்தில் முப்பது லிட்டர் தண்ணீரை இப்படி ஆவியாக்கி வடிக்கலாம். எங்கள் 'லூப் ஆஃப் ஹென்லே' குழலிலும் இதே போன்ற தொழில்நுட்பம் இருக்கிறது என்று சொன்னால் நம்புவீர்களா?

(இன்னும் பேசுவோம்...)

ஓட்டை வாளியும் தேவதைகளும்!



* லீனா மணிமேகலை

எந்த தேவதையாவது கலைந்த தலை, கிழிந்த புடைவையுடன் கட்டுமரத்தை வலித்துக்கொண்டு மீன்பிடிக்கப் போனதுண்டா? கால்களில் சலங்கை கட்டி, இழவு வீடுகளில் மார்பில் அடித்துக்கொண்டு ஆடியதுண்டா? சுடுகாட்டில் குழிவெட்டிப் பிணத்தைப் புதைத்ததுண்டா?


கவிஞர் லீனா மணிமேகலை சமீபத்தில் எடுத்திருக்கும் 'தேவதைகள்' ஆவணப் படத்தில் இந்த வேலைகளையெல்லாம் செய்கிறார்கள் சில பெண்கள். ஆண்களே செய்யத் தயங்கும் மேற்படி வேலைகள்தான் அவர்களுடைய பிழைப்பு. நாற்பத்தைந்து நிமிடங்கள் ஓடும் இந்தப் படம் மூன்று பெண்களைப் பற்றின படம். பாண்டிச்சேரியில் அனாதைப் பிணங்களைத் தள்ளுவண்டியில் ஏற்றிச் சுடுகாட்டில் புதைக்கிறார் ஒரு பெண். திருவண்ணாமலை பகுதியில் வயிற்றுப் பிழைப்புக்காக இழவு வீடுகளில் ஆடுகிறார் ஒரு பெண். இராமேஸ்வரம் கடலில் தன் இரு தோழிகளுடன் கட்டுமரத்தில் ஏறிப்போய் மீன் பிடிக்கிறார் ஒரு வயதான மூதாட்டி. சுய பச்சாதாபமோ, கழிவிரக்கமோ இல்லாமல் தாங்கள் செய்கிற வேலையை மனதார இந்தப் பெண்கள் ஏற்றுக்கொண்டிருப்பதுதான் நம்மை பிரமிக்க வைக்கிறது. இந்த மாதிரியான பெண்களைத் தேடிப்பிடித்து அவர்களுடைய வாழ்க்கையை ஆவணப் படுத்திய லீனா மணிமேகலையைப் பாராட்டி ஒரு பூங்கொத்துக் கொடுக்கலாம்.

'தேவதைகள்' படத்தோடு 'எ ஹோல் இன் த பக்கெட்' என்ற லீனா மணிமேகலையின் இன்னொரு படமும் சென்னை, பிரசாத் தியேட்டரில் திரையிடப்பட்டது. முப்பத்தைந்து நிமிடப் படம். குப்பத்திலிருந்து மிகப்பெரிய அடுக்குமாடிக் குடியிருப்பு வரை தேவைப்படும் தண்ணீர் அளவு, தண்ணீர்ப் பற்றாக்குறை, தேவையான தண்ணீர் இருப்பு என்று பலதையும் பேசுகிறது படம். கோடிகளில் புரண்டு கொண்டிருக்கிறது தண்ணீர் வியாபாரம். சாதாரண அடித்தட்டு ஜனங்கள் சுத்தமில்லாத தண்ணீரைப் பயன்படுத்தி, நோயை வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். சராசரி மனிதர்களுக்கு வரும் பெரும்பாலான நோய்களுக்குக் காரணம் தண்ணீர்தான் என்பதையும் நினைவூட்டுகிறார்கள். ஒட்டை வாளியில் தண்ணீரைப் பிடித்து வைத்த கதைதான் நம் கதை என்பதை அழுத்தமாகச் சொல்லும்போது மனசுக்குள் ஈரக் கசிவு.

– சத்யா







மக்களையும், அவர்கள் தம் உணர்வுகளையும் பாதிக்கும் எந்தப் பிரச்னைகள் குறித்தும் இன்றைக்கு பொதுநல வழக்குத் தொடுக்க முடியும். அதற்கான வழிமுறைகள் என்ன? இதோ...

★ அரசியல் சட்டப் பிரிவு 32 மற்றும் 226-ன் கீழ் உச்சநீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்றங்கள் பொதுநல வழக்குகளை விசாரிக்கும் அதிகாரங்களைப் பெறுகின்றன. வேறு எந்த நீதிமன்றத்திலும் பொது நல வழக்குகள் போட முடியாது.

★ பொது மக்கள் சார்பாகப் போடுவது; பாதிக்கப் பட்டவர்களால் தொடரப்படுவது என்று பொதுநல வழக்குகளில் இருவகை உண்டு. முழு அடைப்பு அன்று வீட்டிலிருக்கிறீர்கள். பக்கத்து வீட்டு, எதிர்வீட்டுக் குழந்தைகள் பள்ளிக்குச் செல்ல முடியாமல் தடுக்கப் படுகிறார்கள் என்று வைத்துக்கொள்ளுங்கள். அவர்கள் சார்பில் நீங்கள் பொது நல வழக்குப் போடலாம்.

★ ரிட் மனுத் தாக்கல் செய்வதற்கு என்ன நடைமுறையோ, அதே நடைமுறை தான் பொது நல வழக்குகளுக்கும். மனுவுடன் 200 ரூபாய் ஸ்டாம்பு கட்டணம் மற்றும் அதில் குறிப் பிடப்பட்டுள்ள எதிர்க் கட்சிக்காரர்கள் எண் ணிக்கையின் அடிப் படையில் 35 ரூபாய் ஸ்டாம்பு கட்டணம் கூடுதலாக ஒட்ட வேண்டியிருக்கும்.

★ பொதுநல வழக்கில் வழக்குத் தொடுப்பவரே நேரிடையாக ஆஜராகி வழக்காடலாம். மனுவில் party, in person என்று குறிப்பிட வேண்டும். சமூக ஆர்வ அடிப்படையில், இலவசமாகவும் உதவுவதற்கு வழக்கறிஞர்கள் பலர் இருக்கிறார்கள்.

★ மனுவுடன் முக்கியமாக இணைக்க வேண்டியது, உங்கள் வழக்குக்கு ஆதாரமாக இருக்கும் பேப்பர் கட்டிங், அரசுக் கடிதம் அல்லது புகைப்படங்கள். அவசரத்தில் வைக்க முடியவில்லையென்றால், மனு



புண்ணியம்

முதன் முறை விசாரணைக்கு வரும்போது அவற்றை வைத்துக் கொள்ளலாம்.

★ வீட்டிலிருந்த படியே ஒரு கடிதம் எழுதிப் போட்



டால், அதன் அவசரம், முக்கியத்துவம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு, பொதுநல வழக்காக எடுத்து அதனை விசாரிக்கும் உரிமை உச்சநீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்றத்துக்கு உண்டு.

★ 1982-ல்தான் முதன்முதலாகப் பொதுநல வழக்குகள் இந்தியாவில் அறிமுகமாயின. நீதிபதிகள் மாற்றம் குறித்த கொள்கைக் குறிப்பை எதிர்த்து, வழக்கறிஞர்கள் மனுத் தாக்கல் செய்தார்கள். பாதிக்கப்பட்டவர்கள் தாமே வழக்குப் போட வேண்டும் என்று அரசு சொன்னபோது, 'நீதிபதிகள் எப்படி வழக்குப் போடுவார்



தரும் பொதுநல வழக்கு!

கள்? அவர்கள் சார்பாக வழக்கறிஞர்கள் போட்டது சரியே' என்று சுப்ரீம் கோர்ட் சொல்லிவிட்டது. இதுவே பொதுநல வழக்கு என்ற புது சகாப்தம் உருவாகக் காரணம்.

★ சமூக மற்றும் பொருளாதார அடிப்படையில் பின்னுக்கு இருக்கும் கோடிக் கணக்கான மக்கள் குரல் கொடுக்க முடியாத நிலையில் இருப்பதால், அவர்கள் சார்பில் மற்றவர்கள் நீதிமன்றத்தை அணுகலாம் என்றும் சுவாமி சுக்னீகேஷ் போட்ட ஒரு வழக்கில் உச்சநீதிமன்றம் சொல்லியிருக்கிறது.



★ பொதுநல வழக்கு என்ற கருத்தோட்டம் வந்து வெள்ளி விழா காலமாகிறது. இந்த வகை வழக்குகள் நமது நிர்வாகத்தில் மகத்தான மாற்றங்களைக் கொண்டு வந்திருக்கின்றன. மனித உரிமைகள், சுற்றுச்சூழல், பெண்கள், குழந்தைகள் உரிமைகள், ஜெயில் கைதிகள் போன்ற பல விவகாரங்களில் பொதுநல வழக்குகளின் புண்ணியத்தால் புதிய சட்டங்களும், வழிகாட்டுதல்களும் வந்திருக்கின்றன. ஆனால், சமீபகாலமாக சுயநல அடிப்படையிலும், பரபரப்பு உண்டாக்கும் நோக்கத்திலும், வழக்குகள் போடப்படுவதை நீதிமன்றங்கள் கண்டு பிடித்திருக்கின்றன. சில வழக்குகளில் அபராதம் கூட போட்டிருக்கின்றன என்பதையும் கவனத்தில் கொள்ளவேண்டும்.

– கௌசி

அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டியில் பிரசுரத்துக்குத் தேர்வான கதை

ஏற்றம்!



படிக்கட்டின் கீழே அடி மட்டத்தில் இருக்கிறாள் முத்து லட்சுமி. இருபது படிகளாவது இருக்கும். ஏறிவிட வேண்டு மெனத் தீர்மானித்து விட்டாள் அவள்.

இளமங்கை முத்துலட்சுமி சென்னை நகரப் பெண்கள் கல்லூரி ஒன்றில் இளநிலை சமூகவியல் மாணவி. மாணவிகளுக்கு ஒரு தன்னார்வு மையத்தில் வாரம் இரண்டு நாள் தொண்டு செய்ய வேண்டியது பாடத் திட்டத்தின் ஒரு பகுதி. வகுப்பில் விரிவுரையாளர் கூறியபோது, அவள் தங்கியிருக்கும் 'ஒளிவிளக்கு' மையத்தின் நிர்வாகி ஸீமா அக்காவிடம் கேட்டு, குடிப் பழக்கத்துக்கு அடிமையானவர்களுக்கு ஆலோசனை அளிக்கும் மையத்தைத் தேர்ந்தெடுத்தாள் முத்துலட்சுமி.

தன் நினைவு தெரிந்த நாளிலிருந்து முத்துலட்சுமிக்கு கை, கால் முடங்கித்தான் இருக்கின்றன. இரண்டு மூன்று வயதுவரை அவள் மற்ற குழந்தைகளைப் போல் இல்லாததைக் கண்ட அவள் அம்மா, டாக்டரிடம் காண்பித்ததில் 'இது 'ஸ்பாஸ்டிக்' என்ற மூளை முடக்கு வாதம். இதற்குப் பிரத்யேகப் பள்ளியில் சேர்க்க வேண்டும்' என்று கூறி, விலாசத்தைக் கொடுத்து அனுப்பிவிட்டார். அம்மா, நகரின் மையப் பகுதியில் இருந்த ஸீமா அக்காவின் மையத்துக்கு அழைத்துச் சென்றாளாம். அப்போது முத்துலட்சுமியின் தந்தை மதுரையில் இருந்தார். அம்மா சென்னையில் சிறுவர் பள்ளி ஒன்றில் ஆயா. வேலையை விடமுடியாத கட்டாயம். அப்பா சம்பளத்தில் குடித்தது போக கடன் மிஞ்சாமல் இருந்தாலே போதுமென்று இருந்தது.

ஸீமா அக்கா மையத்தில் சில பயிற்சிகளும் ஆலோசனைகளும் அளித்தார்களாம், அம்மா சொல்லுவாள். இரண்டு வருடங்களில் தம்பி தனாவும் பிறந்துவிட, குடும்பம் மதுரையில் அப்பாவுடன் இருக்கத் தீர்மானித்து விட்டது. ஸீமா அக்கா, அம்மாவிடம் சொன்னார் : ''மதுரையிலிருந்து மாதம் ஓரிரு முறை வந்து போய்க்கூட பயிற்சியைத் தொடரலாம். இல்லையெனில் மதுரையில் வேறு மையத்தில் சேர்த்து விடலாம்'' அம்மாவும் வந்துபோக முடியும் என்றுதான் நம்பினாள். ஆனால், தம்பி தனாவையும்




அழைத்துக்கொண்டு அவ்வப்போது நோய் வாய்ப்பட்டுக் கொண்டிருந்த அப்பாவை விட்டுவிட்டு வர வசதி இல்லாமல் போயிற்று.

விரிவுரையாளர் அவளிடம் குரலைத் தாழ்த்திக்கொண்டு கேட்கிறார்: ''ஆர் யூ ஷ்யூர்... யூ வாண்ட் டு டு திஸ்?''

''அஃப்கோர்ஸ், கட்டாயமாக என்னால் முடியும்'' என்கிறாள் முத்துலட்சுமி.

நினைவுகள் மீண்டும் பின்னோக்கி ஓடுகின்றன. மதுரையில் குடிபெயர்ந்து இரண்டு மூன்று வருடங்கள் வரை அம்மாவால் முத்துலட்சுமியைக் கவனிக்க நேரம் இல்லை. தம்பியைப் பள்ளியில் சேர்த்த பின்புதான் அம்மாவுக்கு இவள் நினைவு சற்று வந்தது. மதுரையில் தனியார்



ஆசிரியர் மாணவர்களைப் பார்த்து ''சொர்க்கத்துக்குப் போக விருப்பம் உள்ளவர்கள் எல்லாம் எழுந்து நில்லுங்கள்'' என்றார்.

உடனே எல்லா மாணவர்களும் ஒன்றாக எழுந்து நின்று விட்டனர் - ஒரே ஒரு மாணவனைத் தவிர.

இதைக் கண்ட ஆசிரியர் வியந்து அந்த மாணவனை அழைத்து, ''உனக்குச் சொர்க்கத்துக்குப் போக விருப்பம் இல்லையா?'' என்று கேட்டார்.

அந்த மாணவன், ''எனக்கும் சொர்க்கத்துக்குப் போகத்தான் ஆசை. ஆனால், இவர்கள் எல்லாரும் அங்கு போன பிறகு அது சொர்க்கமாக இருக்காதே! அதனால்தான் நான் எழுந்து நிற்கவில்லை'' என்றான்.

அந்த மாணவனின் புத்திக் கூர்மையான பதிலைக் கேட்டு அத்தனை பேரும் வியந்து வாய்விட்டுச் சிரித்துவிட்டனர். யார் அந்த மாணவன்? பேரறிஞர் பெர்னார்ட் ஷா!

- லலிதா செல்லப்பா

ரீடர்ஸ் கார்னர்

பள்ளி ஒன்றில் அம்மாவுக்கு ஆயா வேலை கிடைத்தது. சம்பளம் குறைவுதான். ஆனால், எப்படியோ சமாளித்தாள்.

முத்துலட்சுமிக்கும் கோபம் வரும். மற்ற குழந்தைகள் பந்து போட்டால் இலாகவமாகப் பிடிப்பதுபோல் நமக்கு முடிவதில்லையே. சாப்பிடும்போது சோறெல்லாம் பரத்தியடித்துப் போகிறதே! எல்லாவற்றையும்விட பள்ளிக்கூடம் போக முடிவதில்லை. தம்பியின் பாடப் புத்தகங்கள், அக்கம்பக்கத்துக் குழந்தைகளின் புத்தகங்கள் எல்லாவற்றையும் வாங்கிக் கொள்வாள். அவர்களிடம் கேட்டுக் கேட்டு, தானாகவே மெதுவாகப் படிக்கக் கற்றுக்கொண்டாள். இருப்பினும் பள்ளிக்கூடம் போகாதது பெரிய குறையாகவே இருந்தது.

தம்பி இவளிடம் அதிகம் பேசமாட்டான். அவனுடைய தோழர்கள் யாரையும் வீட்டுக்குக் கூட்டிவர மாட்டான். ''நீ ஏன்க்கா இப்படி இருக்கற? எனக்கு அவமானமா இருக்கு'' என்பான். முத்துலட்சுமி தான் என்ன செய்ய முடியும்?

இன்னொரு இரண்டு படிகள் ஏறியாகி விட்டது. கல்லூரித் தோழி ரம்யா அவளுடைய கவுன்ஸலிங் முடிந்து வருகிறாள். ''என்னப்பா இது, உன்னை யாரு மேல ஏறச் சொன்னது? என்ன வேணும்... சொல்லு, நான் எடுத்து வருகிறேன்'' என்கிறாள். முத்துலட்சுமி முறுவலிக்கிறாள். ''இல்லை, இன்று நான் ஏறித்தான் ஆக வேண்டும்'' என்கிறாள். மெதுமெதுவாக ஆறாவது படியை எட்டிவிட்டாள் முத்துலட்சுமி. அவள் எண்ணம் மீண்டும் பின்நோக்கி ஓடுகிறது.

ஸீமா அக்காவைத் திரும்பப் பார்ப்போம் என்று அவள் நினைத்துக்கூட பார்த்ததில்லை. முத்துலட்சுமிக்குப் பதினைந்து வயதானபோது அவள் அப்பாவுக்கு ஒரு முறை உடல்நிலை மிக மோசமாகிப் போக, சென்னையிலிருந்த அத்தை வீட்டில் போயிருந்துகொண்டு வைத்தியம் பார்க்கலாம் என்று குடும்பத்தோடு கிளம்பி வந்தார்கள். அம்மா-அப்பாவுடன் ஆஸ்பத்திரியில் தங்க வேண்டியதாயிற்று. அத்தை வீட்டுப் பக்கத்தில் ஒரு தொலைபேசி மையம் இருந்

தனை முத்துலட்சுமி பார்த்தாள். அத்தை மகள் ரேவதியிடம் ''நான் ஒருவரிடம் பேச வேண்டும். நீ எனக்கு உதவுவாயா?'' என்றாள்.

''டெலிபோன் டைரக்டரி கொண்டு வாயேன், ப்ளீஸ்'' என்றவளைப் புரியாதவளாய்ப் பார்த்த ரேவதி, பக்கத்துக் கடைக்காரரிடமிருந்து அந்தப் பெரிய புத்தகங்களைத் தூக்கி வந்தாள்.

''இதில் ஸ்பாஸ்டிக் என்று ஆரம்பிக்கும் பெயரைத் தேடு...'' என்றாள் முத்துலட்சுமி.

''என்ன கேட்கப் போகிறாய்?''

''ஸீமா அக்காவிடம் பேச வேண்டும்.''

''உனக்கு அவர்களுடைய மையத்தின் பெயர்கூடத் தெரியாது. எப்படி கண்டு பிடிக்கப் போகிறாய்?''

அதற்குள் ஸ்பாஸ்டிக் என்று ஆரம்பித்த பெயர்களின் தொலைபேசி எண்ணை எழுதிக்கொண்டு, ரேவதியின் உதவியோடு போன் பூத்தை அடைந்தாள் முத்துலட்சுமி.

''நீ நம்பர் போடு, நான் பேசுகிறேன்...''

முதலிரண்டு எண்கள் ஏமாற்றமாய்ப் போக, அடுத்த நம்பர் அடிக்கையில் ரிசீவரை முத்துலட்சுமி காதில் வைத்தாள் ரேவதி.

''ஹலோ, எனக்கு ஸீமா என்பவருடன் பேச வேண்டும்.''

எதிர்முனையில் ''நீங்கள் மிஸஸ் ஸீமா வெங்கடேசனைப் பற்றிக் கேட்கிறீர்களா?''

''ஆ... ஆம்...ஆமாம். அவர்கள்தான்.''

''அவருடைய மையம் வேறு. அவருடைய நம்பரை எடுத்துக்கொள்ளுங்கள்...''

முத்துலட்சுமியின் முகம் பிரகாசமாயிருந்தது. ஆஸ்பத்திரியிலிருந்து திரும்பிய அம்மா இவர்களைப் பார்த்து உள்ளே வந்தவள், ''இங்க என்னடி செஞ்சுகிட்டிருக்க...'' என்று அலுத்துக் கொண்டாள்.

''அம்மா, ஸீமா அக்கா நம்பர் கிடைச்சுடுச்சு பாரு''

ஒரு நிமிடம் அம்மா முகத்திலும் நிழல் மறைந்தாற்போல் தோன்றிற்று. ''என்ன கேக்கப் போற அவங்ககிட்ட?''

''எப்படியாவது... எனக்குப் படிக்க உதவி கேக்கலாம்மா...''

''பிடிவாதக்காரி... விடமாட்டியே...''

அதற்குள் ரேவதி, ஸீமா அக்காவின் நம்பரைப் போட்டுக் கொடுத்தாள். ''ஹலோ, என் பெயர் முத்துலட்சுமி. நான் ஸீமா அக்காவுடன் பேச வேண்டும்...'' எதிர்முனையில் பாட்டு ஒலித்தது.

''ஹலோ?''

ஸீமா அக்காதான்... ''அக்கா, என் பெயர் முத்துலட்சுமி. நான் பத்து வருடம் முன்பு உங்கள் மையத்துக்கு வந்துகொண்டிருந்தேன். அப்புறம் மதுரை போய்விட்டேன்.'' அக்கா மௌனமானார். ''உன் அப்பாவுக்கு உடல்நலம் சரியில்லாமல் இருந்ததே...''

''ஆமாமாம், இப்போதுகூட வைத்தியத்துக்குத்தான் வந்திருக்கோம். அக்கா, எனக்குப் படிக்க வேண்டும். நீங்கள் ஏதாவது வழி சொல்லுங்களேன்.''

''நீ நேரில் வர முடியுமா? அம்மா

ரீடர்ஸ் கார்னர்



*#06# இது என்னவென்று புரிகிறதா?

உங்கள் செல்ஃபோனில் மேற்கண்ட எண் மற்றும் குறியீடுகளை அழுத்தினால், 15 இலக்க எண் வரும். அதுதான் உங்கள் செல்ஃபோனின் சீரியல் எண். இதனை ஐ.எம்.ஈ.ஐ. என்கிறார்கள். அதாவது 'இன்டர் நேஷனல் மொபைல் எக்யூப்மென்ட் ஐடென்டிடி எண்' என்கிறார்கள். ஒரு செல்ஃபோனுக்குத் தரப்பட்ட எண் மற்றொன்றுக்குக் கிடையாது. திருடப்பட்டாலோ, உங்களிடமிருந்து தொலைந்து போனாலோ காவல் நிலையத்தில் புகார் தரும்போது, இந்த எண்ணைக் குறிப்பிட்டுச் சொன்னால், உடனடியாக உங்கள் செல்ஃபோனை பிறர் பயன்படுத்தாதவாறு அதை செயலிழக்கச் செய்ய முடியும். பிறகென்ன? அந்த செல்ஃபோன் செல்லாத போன்தான்!

– கே.ராமச்சந்திரன்



"கட்டாயமாக இனி நான் மதுவைத் தொடமாட்டேன். இது சத்தியம்!"

உன்னுடன் இருக்கிறார்களா? அவர்களிடம் போனைக் கொடு.''

அம்மா பேசுகிறாள். ''நல்லா இருக்கிறீங்களா? இந்தப் பொண்ணு படிக்கணும்னு உயிரெடுக்குது... என்ன செய்றதுன்னே தெரியலை...

''இப்போது இங்கே கூட்டி வர முடியுமா?''

அத்தை ஆஸ்பத்திரிக்குப் போய்தான் அப்பாவைப் பார்த்துக்கொள்கிறேன் என்று சொன்னார்கள். முத்துலட்சுமியும் அம்மாவும் ஸீமா அக்காவை சந்திக்கச் சென்றார்கள்.

முத்துலட்சுமியைத் தன் மையத்தின் விடுதியில் தங்கிப் படிக்க அக்கா அனுமதித்தார். அடுத்த இரண்டு வருடங்களில் பத்தாவது தேர்வில் தேர்ந்து, ப்ளஸ் டூ படிக்க ஒரு முன்னிலைப் பள்ளியில் இடம் கிடைக்கச் செய்தார். முதல் வகுப்பில் தேர்ச்சி அடைந்து கல்லூரியிலும் சேர்ந்தாகிவிட்டது. இப்போது இரண்டாவது வருடம். ப்ளஸ் டூ படித்துக் கொண்டிருந்த போது அப்பா உடல்நிலை மிக மோசமாகி தவறிப்போனார். அம்மாவும் தம்பியும் மதுரையிலேயேதான் இருக்கிறார்கள். தனா ஐடிஐ படித்து சின்ன கம்பெனி ஒன்றில் வேலைக்கும் சேர்ந்துள்ளான். இப்போதெல்லாம் அக்காவைப் பெருமையுடன் பார்க்கிறான் அவன்.

இன்னும் ஐந்து படிகள்தான் இருக்கின்றன. ரம்யா குடிக்கத் தண்ணீர் கொடுக்கிறாள். விரிவுரையாளருடன் அமர்ந்திருக்கும் செந்தில் நாதனுக்கு முத்துலட்சுமி ஆலோசனை சொல்லியிருக்கிறாள். இவள் எதைச் சொன்னாலும் அதற்கு ஏதோ குதர்க்கமாகப் பதில் பேசுவார் அவர். ''என் அப்பா குடித்து குடித்துத்தான் போனார்'' என்றால், ''என் பெரியப்பா எழுபத்தைந்து வயதில் இன்றும் குடிக்கிறாரே, நல்ல திடமாக இருக்கிறாரே'' என்பார்.

இன்று என்ன தோன்றியதோ தெரியவில்லை. ''சரி, நீ சொல்வதைக் கேட்கிறேன். ஆனால், ஒரு சவால். இந்த மாடிப்படியை நீயாகவே ஏற வேண்டும்'' என்றார்.

''நான் ஏறினால் இனிமேல் குடிக்க மாட்டேன் என்று சத்தியம் செய்யுங்கள்'' என்று உறுதிமொழி வாங்கிக்கொண்டு இதோ கடைசிப் படி வரை ஏறிவிட்டாள் முத்துலட்சுமி.

ஒரு மணி நேரமாக, வளையாத உடம்பை எப்படியோ ஆட்டிப் படைத்து நேர்மையான நோக்கமும், ஏற்றமான எண்ணமும் மனதில் உறுதியும் கொண்டு இருபது படிகள் ஏறிவிட்டாள் முத்துலட்சுமி. செந்தில்நாதன் கைதட்டுகிறார். மேலே அவசர அவசரமாக ஏறி வருகிறார். ''ஸாரி, உன்னை ரொம்பவும் துன்புறுத்தி விட்டேன்... கட்டாயமாக இனி நான் மதுவைத் தொடமாட்டேன். இது சத்தியம்''- சொல்லும் போதே செந்தில்நாதனுக்குக் கண்கள் பனித்து விட்டன.

●

விமர்சனம்

காதல், காமெடி, ஆக்ஷன், சென்ட்டிமெண்ட்னு கலந்து கட்டி படம் பண்றதுன்னா பூபதி பாண்டியனுக்கு அல்வா சாப்பிடற மாதிரி. இதுல கிண்டி, கிளறி, தானும் சாப்பிட்டு நமக்கும் ஊட்டிவிட்டிருக்கார். விஷாலுக்கு காமெடி வருமான்னு இனிமே யாரும் யோசிக்கத் தேவையில்லை. மனுஷன் பிச்சு உதர்றார். ஊர்வசிகிட்ட கலாய்க்கறது, எதிரிகளைச் சுத்தவிட்டுச் சுழல விடறது, காதலிகிட்ட கெஞ்சுறது, சித்தப்பாகிட்ட கொஞ்சறதுன்னு காக்கைல தொடங்கி கல்லூரி வரைக்கும் விஷாலோட விஸ்வரூபம்!

சண்டைக் காட்சிகள் செம கிறுகிறு. க்ளைமேக்ஸ் மழை ஃபைட்டும், காலேஜ் ஃபைட்டும் கனல் கண்ணனோட பேரைச் சத்தம் போட்டுச் சொல்லும்.

ப்ரியாமணி, ப்ரியமான மணி. மாடர்ன் பொண்ணா வந்து ஆட்டம் பாட்டம், லகலகன்னு மனசை அள்றாங்க. அவங்க காக்காவுக்குச் சோறு வைக்கற அழகே தனி. ஒரு பொய் சொல்லிட்டுப் படம் முழுக்க ஓடிட்டே இருக்கும்போது பரிதாபத்தை ஈஸியா வாங்கிடறாங்க.

அசத்தல் மன்னன் ஆசிஷ் வித்யார்த்தி. விறைப்பான ஆளுன்னு நினைச்சா, ஊர்வசிகூட சேர்ந்து பின்னியெடுக்குறார். அதுவும் அந்த ஃப்ளாஷ்பேக் காட்சிங்க காமெடியின் உச்சம். ஊர்வசி ஊர்வசிதான். டீக்கடை 'பன்'னைப் பார்த்தா இனிமே இவங்க ஞாபகம்தான் வரப்போகுது. வில்லனா வர்ற பழனி பிரதர்ஸ், நல்ல தேர்வு. உயிரோட்டமா நடிச்சு நம்ம உள்ளத்தைப் பதற வச்சிருக்காங்க. குண்டு ஆர்த்தி, மயில்சாமி, மனோபாலான்னு ஒரு பக்கம் பட்டையைக் கிளப்ப, வில்லன் பொன்னம்பலத்தையும் காமெடி ட்ராக்ல இறக்கிவிட்டு வெற்றிகரமா ஓடவிட்டிருக்கார் டைரக்டர். கடைக்குட்டிய நினைச்சு அவர் கவலைப்பட்டுத் தவிக்கும்போது தியேட்டர்ல காது வரைக்கும் சிரிப்பு. 'பருத்தி வீரன் பொணந்தின்னி' நல்ல காமெடி ஆர்ட்டிஸ்ட்டா மாறி பவனி வந்திருக்கார். காதல் தண்டபாணி கூடச் சேர்ந்து லொள்ளு பண்றது அள்ளு அள்ளுன்னு அள்ளுது.

மணிஷர்மா இசை. சோடை போகாத பாடல்கள். 'ஆத்தோரமா' ரீமிக்ஸ் நெத்தியடி. காதல், வில்லத்தனம், காமெடின்னு பார்த்துப் பார்த்துப் போடப்பட்ட பின்னணி இதம். திருச்சிய தெனாவெட்டா காட்டியிருக்கு ஒளிப்பதிவு.

திரைக்கதை செம ஸ்பீடு. அடுத்து அடுத்துன்னு ஆவலைத் தூண்டுது. ஒரு சில காட்சிங்க ஏற்கெனவே பார்த்த ஞாபகத்தை ஏற்படுத்தினாலும் டைரக்டர் பூபதி பாண்டியன் நினைச்சதை சாதிச்சுட்டார். குறிப்பா படம் முடிஞ்ச பிறகும் தொடரும் கதாபாத்திரங்களோட லேட்டஸ்ட் நிலவரம், அணுஅணுவா ரசிக்க வேண்டிய அற்புத காமெடி!

– சித்ரா



மலைக்கோட்டை

பேட்டி என்று சென்றதுமே ''இத்தனை வருடப் போராட்டங்களுக்கும், நான் சந்தித்த சவால்களுக்கும் இப்போதுதான் பலன் கிடைக்க ஆரம்பித்திருக்கிறது. இனி என் அரசியல் வாழ்க்கையில் எனக்குச் சுக்ர திசை தான்'' என்று அமர்க்களமாக ஆரம்பிக்கிறார் விஜய டிராஜேந்தர். அவருடனான சந்திப்பிலிருந்து...

நேற்று அரசியலில் புகுந்தவர்கள்கூட கோட்டையைப் பிடிப்போம் என்று குரல் கொடுக்கும்போது, நீண்ட நாட்களாக அரசியலில் இருக்கும் நீங்கள் எதிர்பார்த்த வளர்ச்சி அடையவில்லையே... ஏன்?

''எல்லோருமே எம்.ஜி.ஆர். ஆகிவிட முடியுமா என்ன? நாளைக்கே முதல்வரா வேன் என்று சொல்லி முதன்முதலாகத் 'தாயக மறுமலர்ச்சிக் கழகத்தை' நான் துவங்கவில்லை. விதை ஊன்றிய கையோடு பழம் பறிக்கப் புறப்பட்டவன் அல்ல நான். நேர்மை, துணிவு இவற்றுடன் கடந்த இருபத்தைந்து வருடங்களாக ஒரு போராளியாகவே வாழ்ந்துள்ளேன். மக்களின் மனத்தில் இடம்பிடித்திருந்த எம்.ஜி.ஆருக்குக்கூட பதவிக்கு வர பல்லாண்டுகள் பிடித்தன. இடையில் அவர் எதிர்கொண்ட சவால்கள் நிறைய. தி.மு.க. பொதுக்குழுவால் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அதில் இணைந்த ஒரே கட்சி தாயக மறுமலர்ச்சிக் கழகம்தான்.

இப்போது எனக்கு கலைஞர் கௌரவமான பொறுப்பைக் கொடுத்திருக்கிறார். இது என்னுடைய அரசியல் வாழ்க்கையில் முக்கியமான காலகட்டம். என் பயணத்தில் இனி ஏற்றம் தான்.

தாயக மறுமலர்ச்சிக் கழகத்தை தி.மு.க.வோடு இணைத்ததுபோல இப்போது நீங்கள் நடத்தும் லட்சிய தி.மு.க.வும் ஒரு கட்டத்தில் தி.மு.க.வுடன் இணைந்துவிடுமா?

''நான் நடத்திவரும் லட்சிய தி.மு.க. எதிர்காலத்துக்கான கட்சி. தி.மு.க.வுடன் தோழமையாக இருப்போம். எந்தக் கட்டத்திலும் அதில் கரைந்துபோக மாட்டோம். தமிழகம் முழுவதும் எனக்குக் கணிசமாக ஆதரவு இருக்கிறது. மண்ணுக்குள் இருக்கும் வேர்கள் மாதிரி. வேர்கள் வெளியே தெரியாது.''

விஜயகாந்த், சரத் ஆகியோர் தி.மு.க.வுக்குக் குடைச்சல் கொடுக்கக் காத்திருப்பதால்தான், உங்களை அலட்சியப் படுத்தாமல், பதவியின் மூலம் கலைஞர் சமாதானப்படுத்தி இருக்கிறாரா?

''சென்ற தேர்தலில் தி.மு.க. வெற்றிக்குப் பாடுபட்ட நிலையில், எங்கள் தோழமை தொடர்ந்தது. ஆனால், அங்கிகாரம் இல்லை. அலட்சியப்படுத்தப்படுகிறோமோ என்ற எண்ணம் எனது தோழர்களுக்கு வந்தது. எனவே, பொதுக்குழுவைக் கூட்டினோம். அதே சமயத்தில் கலைஞர் தரப்பிலிருந்து 'நீங்கள் எங்களுடன்தான் இருக்கிறீர்கள்' என்று சிக்னல் வந்தது. கலைஞரை என் மனத்தில் குரு மற்றும் தலைவர் என்ற நிலையில் வைத்திருக்கும்போது அலட்சியப்படுத்தல் என்று சொல்வதெல்லாம் தவறு.''

தோழமைக் கட்சியாக நீடித்தால், உங்கள் சுதந்திரமாகக் கருத்துக்களைச் சொல்ல முடியாதே!

''எந்தக் கட்டத்திலும் என் கருத்துச்



''விஜயகாந்த் ஒரு

விளாசும் விஜய டி.ராஜேந்தர்

டூப்ளிகேட் தமிழர்!”

சுதந்திரம் முடக்கப்படும் அளவுக்கு நடந்து கொள்ள மாட்டேன். இராமர் பால விவகாரத்தில்கூட, கலைஞர், இந்துக்கள் மனது புண்படும்படி பேசியிருக்க வேண்டாமே என்று என் கருத்தைச் சொல்லியிருக்கிறேன். ஏனென்றால் நான் கடவுள் நம்பிக்கை உள்ளவன்.''

விஜயகாந்த், சரத்... எந்த அளவுக்கு வெற்றி பெறுவார்கள்?

''இருவரும் நாடாள ஆசைப்படுவதில் தவறில்லை. ஆனால், தகுதியை வளர்த்துக் கொள்ள வேண்டாமா? மீடியா மாயையைக் கிளப்பி விடுகிறது. இப்படித்தான் தி.மு.க.வுக்கு எதிராக வைகோவைக் கொம்புசீவி விட்டார்கள். அவர் 'வைக்கோல் போர்' ஆகிவிட்டார். நடுநிலையாளர் வோட்டுக்களைக் குறி வைத்து இறங்கியிருக்கிறார்கள் இவர்கள். நாளை எங்கள் லட்சிய தி.மு.க. களத்தில் இறங்கினால், இவர்களைவிட அதிகமான நடுநிலை வாக்குகளைக் கவரும். விஜயகாந்த் ஒரு டூப்ளிகேட் தமிழர். 'திராவிடனே' என்று பேசும் விஜயகாந்த் தன்னைத் தமிழன் என்று தைரியமாகச் சொல்லிக் கொள்வாரா? தமிழ்நாட்டில் பிறப்பது வேறு; தமிழனாக இருப்பது வேறு. விஜயகாந்த் முகத்திரையைக் கிழிப்பேன். அவரைச் சந்திக்க வேண்டிய விதத்தில் சந்தித்து, மக்கள் மன்றத்தில் அவரை வீழ்த்திக் காட்டுவேன். மார்க்கெட் இழந்து அரசியலுக்குத் தாவியவன் அல்ல நான். இன்றும் பெரிய திரை, சின்னத் திரை இரண்டிலும் கவனிக்கத் தக்கவனாக இருப்பவன்.''

சன் டி.டி.ஹெச்சைத் தொடர்ந்து, சுமங்கலி கேபிள் நெட் ஒர்க்கை முடக்க, ஆளும் கட்சி ஆதரவுடன் அராஜகங்கள் நடக்கின்றனவே?

''விஞ்ஞான முன்னேற்றத்தில் டி.டி.ஹெச்சின் பயன்பாட்டை யாராலும் தடுக்க முடியாது. காலத்தின் கட்டாயம். ஆனால், இதன் மூலம் ஆயிரக்கணக்கான கேபிள் தொலைக்காட்சி தொடர்பானவர்கள் பாதிக்கப்படுவார்கள் என்றால், அதையும் நாம் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும். எதற்கும் அராஜகம் தீர்வு அல்ல.''

– ப்ரியன்





* அஞ்சு பாபி ஜார்ஜ்

தங்கள் பாதம் தரையில் இருக்கிறதா என்று சோதித்துக் கொண்டார்கள் இந்திய கிரிக்கெட் அணியினர். 20-20 உலகக் கோப்பையை வென்று நாடு திரும்பியபோது, அவர்களுக்கு மும்பையில் நம்ப முடியாத அளவுக்கு வரவேற்பு வழங்கப்பட்டது. அந்த நிமிடங்களிலிருந்து நாட்டின் ஒவ்வொரு மூலையிலிருந்தும் கூக்குரல்கள் எழ ஆரம்பித்தன. கிரிக்கெட்டோடு ஒவ்வொரு விஷயமாகப் பொருத்திப் பார்த்து, 'அரசாங்கம் எங்களைக் கண்டுகொள்வதில்லை' என்று இப்போது இதர விளையாட்டு வீரர்கள் போர்க்கொடி உயர்த்திக் கொண்டிருக்கின்றனர்.

20-20 கிரிக்கெட்டில் மட்டும்தான் நாம் உலக சாம்பியன்கள் என்று நினைப்பது தவறு. எண்பதுகளுக்கு முன்பு வரை இந்தியாவை ஹாக்கியில் அடித்துக்கொள்ள ஆளே இல்லை. கேரம் விளையாட்டில் நீண்ட நாட்களாக இந்தியாதான் உலக சாம்பியன். ஒலிம்பிக்கில் கபடிக்கு இடமில்லையே தவிர, ஆடும் நாடுகளில் இந்தியாதான் நம்பர் ஒன். இதோ இன்றைய தேதிக்கு செஸ்ஸில் ஆனந்தும், பில்லியர்ட்ஸில் பங்கஜ் அத்வானியும் தான் உலக சாம்பியன்கள்.

அரசாங்கத்தின் மீது விளையாட்டு வீரர்கள் கோபம் கொள்வது இப்போது பொதுப் பண்பாக மாறியிருக்கிறது. முதல்கட்டமாக கடந்த வாரம் ஹாக்கி வீரர்களும், பயிற்சியாளர்களும் கர்நாடக முதல்வர் வீட்டு முன்பு உண்ணாவிரதம் இருக்கப் போவதாக அறிவித்தனர். பில்லியர்ட்ஸ் விளையாட்டில் உலக சாம்பியனான பங்கஜ் அத்வானி, கர்நாடக அரசு அளிக்கவிருந்த ஏகல்வ்யா விருதை வாங்க மறுத்தார். ஒலிம்பிக் மற்றும் ஏஷியன் கேம்ஸில் பதக்கம் வெல்பவர்களுக்கு எந்தப் பிரச்னைகளும் எழுவதில்லை. தங்கம், வெள்ளி, வெண்கலம் வெல்பவர்களுக்கு இலட்சக்கணக்கில் பண முடிப்புகள் தரப்படுகின்றன. கேரளாவைச் சேர்ந்த தமிழ்நாட்டு வீராங்கனை அஞ்சு பாபி ஜார்ஜ், எழுபது லட்சங்களை இதுவரைக்கும் தமிழக அரசாங்கத்திடமிருந்து பெற்றிருக்கிறார். 'கேரள அரசைவிட தமிழக அரசு விளையாட்டு வீரர்களுக்கு நிறைய செய்கிறது' என்று பாராட்டுகிறார் இன்னொரு கேரள வீராங்கனையான ஷைனி வில்சன். உலகம் ஏதோ ஒருவகையில் சிலரைப் பாதுகாக்கிறது. கிரிக்கெட், டென்னிஸ், அத்லெட்டிக் தவிர இதர விளையாட்டு வீரர்களின் பாடு எப்போதும் திண்டாட்டம்தான். தமிழ்நாட்டைச் சேர்ந்த குத்துச்

கண்டுகொள்ளுமா

சண்டை வீரரான தேவராஜன், உலக சாம்பியன்ஷிப் போட்டியில் மூன்றாவது இடத்தைப் பிடித்தார். கேரம் விளையாட்டில் மரியா இருதயம் நீண்ட நாட்களாக உலக சாம்பியனாக வலம் வந்தார். இருந்தும் ஏன் தமிழக அரசு தங்களைக் கண்டுகொள்ள வில்லை என்று கேள்விகள் எழுப்புகிறார்கள் இருவரும்.

இரண்டு முறை உலக சாம்பியன் பட்டம் வென்ற விஸ்வநாதன் ஆனந்த், தம் சுயமரியாதைக்கு ஒருபோதும் பங்கம் ஏற்பட்டதாக கருத்துகள் தெரிவித்ததில்லை. ஆனால், கிரிக்கெட் வீரர்களுக்கு வழங்கப்பட்ட மரியாதைகள் ஆனந்தையும் கடுப்பேற்றியிருக்கிறது. 'நான் இந்தியா திரும்பும்போது எந்த மாதிரியான வரவேற்பைக் கொடுக்கப்போகிறார்கள் என்று பார்க்கிறேன்' என தன் ஆதங்கத்தையும் எதிர்பார்ப்பை

* ஆனந்த்




ச.ந.கண்ணன்

யும் வெளிப்படுத்தியிருக்கிறார்.

ஆனால், இந்தக் கருத்தோடு வேறுபடுகிறார் பி.டி.உஷா. 1985-ஆம் ஆண்டு ஏஷியன் கேம்ஸில் இவர் தங்கம் வென்றபோது இரண்டு இலட்சமும் ஒரு வீடும் அரசாங்கத்திடமிருந்து இனாமாகப் பெற்றுக்கொண்டார். ''நான் தொடர்ந்து ஆறு சர்வதேச மெடல்களை வென்றபோது வேண்டிய வெளிச்சத்தை மீடியா கொடுத்தது. விளம்பர வாய்ப்புகளும் நிறைய கிடைத்தன'' என்று தெளிவாகப் பேசுகிறார் பி.டி.உஷா.

விளையாட்டு வீரர்களின் உழைப்பையும் தியாகங்களையும் அறியக்கூடிய நிலையில் யாரும் இங்கு இல்லை. 'அரசாங்கம் நிர்வாக முறையில் மட்டுமே தொடர்பு கொள்கிறது. மற்றபடி எங்கள் மீது அதற்கு எந்தவித உணர்ச்சிபூர்வமான ஈடுபாடும் இல்லை' என்று வீரர்கள் குமுறுகிறார்கள். நம் வாழ்க்கையின் அன்றாட அம்சங்கள் அனைத்திலும் அரசியல் சக்திகள் உள்ளன. அவர்கள் மீது எவ்வளவுதான் அவநம்பிக்கைக் கொள்வது? 'நடிகர்களை உற்சாகப்படுத்தி விருதுகள் வழங்கினாலாவது அவர்கள் தேர்தல் சமயத்தில் ஆதரவு கொடுப்பார்கள்; கூட்டத்தைக் கூட்டுவார்கள்; ஓட்டுகளைச் சேகரிப்பார்கள். வீணாக விளையாட்டு வீரர்களை ஊக்கப்படுத்துவதால் அரசியல்வாதிகளுக்கு என்ன பெரிய நன்மை கிடைத்துவிடப்போகிறது?

கவர்ன்மெண்ட்?





இன்று நிலவும் வெகுவேகமான வாழ்க்கை முறையில், நவீன தகவல் தொடர்பு புரட்சியின் ஓர் அங்கமான இன்டர்நெட் மூலமாக, திருமணங்கள் நிச்சயிக்கப்படுவது பிரபலமாக இருக்கிறது. ஆனால், இதுவரை இல்லாத அளவுக்கு, லியாகத் அலி, பிரபலமாக இருக்கும் திருமணத் தகவல் இணைய தளம் ஒன்றில், தன்னைப் பற்றிப் பொய்யான தகவல்களைக் கொடுத்து, வலை வீச, அதில் பல அப்பாவிப் பெண்கள் சிக்கிக்கொண்டு தங்கள் வாழ்க்கையைப் பறிகொடுத்துவிட்டு நிலைகுலைந்து

ஆன்லைன் மாப்பிள்ளை ஆபத்தா?

நிற்கிறார்கள்.

''லியாகத் அலி தேர்ந்தெடுத்த பெண்கள் விவாகரத்து வாங்கியவர்கள், கணவனை இழந்தவர்கள், உடல் ஊனமுற்றவர்கள் போன்ற சாஃப்ட் டார்கெட்கள். பேச்சு சாதுர்யம், படாடோபம் போன்றவற்றால் பெண்களை எளிதில் கவர்ந்து, அவர்களை ஏமாற்றியிருக்கிறான். எளிமையான திருமணம் என்று சொல்லி வீட்டிலும், ஓட்டல் அறைகளிலுமே திருமணத்தை இரகசியமாக நடத்தியிருக்கிறான். ஏமாந்துபோன பெண்கள் தரப்பில், சரியானபடி அவனைப் பற்றி விசாரிக்காமல், அவசரம்அவசரமாக திருமணத்துக்கு ஒப்புக்கொண்டது பெரும் தவறு'' என்கிறார் நம்மிடம் பேசிய ஒரு பெண் போலீஸ் அதிகாரி.

பாரத் மேட்ரிமோனி டாட்காமின் தலைமை நிர்வாக அதிகாரியான முருகவேலிடம், 'உங்கள் இணையதளத்தில் விளம்பரம் தருபவர்கள் பற்றிய தகவல்களைச் சரிபார்த்து, அதன்பின் நீங்கள் வெளியிட முடியாதா?' என்று கேட்டால், ''தினமும் நாடெங்கும் இருந்து எட்டாயிரம் பேர் புதிதாகப் பதிவு செய்கிறார்கள். நாட்டின் எந்த மூலையில் இருந்தாலும்,




''அந்தக் காலத்தில் இரு தரப்பு குடும்பங்களும் நேரில் சந்தித்துப் பேச பெண் பார்க்கும் படலம் நடக்கும். பிள்ளையைப் பற்றி விசாரிப்பார்கள். ஆனால், இப்போது அதெல்லாம் பழைய சம்பிரதாயங்கள் என்றும், 'நேரமில்லை' என்றும் சொல்லித் தட்டிக் கழித்துவிட்டு, பிறகு திண்டாடுகிறார்கள் எச்சரிக்கை, நடவடிக்கையாக மறுமணப் பிரிவில் வரும் அனைத்து விளம்பரதாரர்களும் சட்டபூர்வமான விவாகரத்துப் பெற்றதற்கான ஆதாரம் அளித்தாலன்றி, நாங்கள் ஏற்றுக் கொள்வதில்லை'' என்கிறார்.

''மாப்பிள்ளையைப் பற்றி அலுவலகத்திலும், சொந்தக்காரர்களிடத்திலும், அக்கம் பக்கத்திலும் விசாரிப்பதில் தப்பே இல்லை. இதில் பெண் வீட்டார் சிறிதும் தயக்கம் காட்ட வேண்டாம். காரணம், இது நம் வீட்டுப் பெண்ணின் வாழ்க்கை பிரச்னை. இப்போது அலட்சியமாக இருந்துவிட்டு, அப்புறம் ஏதாவது பிரச்னை என்றால் யாருக்கு நஷ்டம்? ஆனால், மாப்பிள்ளை வீட்டாரும் இன்றைய சூழ்நிலையைப் புரிந்து கொண்டு, யதார்த்தமாக இருக்க வேண்டும்'' என்று கூறுகிறார் கல்யாண மாலையைச் சார்ந்த திருமதி மீரா நாகராஜன்.

''அயல் மாநிலத்தில் வேலை பார்க்கிற மாப்பிள்ளை என்றால் எப்படி விசாரிப்பது? என்று சிலர் முணுமுணுக்கலாம். அவர்களுக்கு உதவ தனியார் நிறுவனங்கள் காத்திருக்கின்றன. குறிப்பிட்ட கட்டணம் செலுத்தினால், அந்த நிறுவனங்கள் இணைய தளத்தில் தரப்பட்டுள்ள மணமகன் குறித்த தகவல்களை நேரடியாக அவரிடமும், அவரது



* மீரா நாகராஜன்



* மோகன்

தகவலை ஈ-மெயில் மூலம் அனுப்பினால் போதும்; கட்டணத்தைக்கூட கிரெடிட் கார்டு மூலமோ, டிமாண்ட் டிராஃப்டாக தபால் மூலமோ அனுப்பிவிடலாம். ஒவ்வொருவரைப் பற்றிய தகவலையும் சரிபார்ப்பது என்பது இயலாத காரியம். அதனால்தான் இணைய தளங்களில், 'இங்கே குறிப்பிடப் பட்டுள்ள தகவல்களை நீங்கள் நன்றாக விசாரித்து, பிறகு திருமண முடிவுகளை எடுக்க வேண்டும்' என எச்சரிக்கை செய்கிறோம்''என்கிறார்.

கல்யாண மாலை மோகன் இதுபற்றிப் பேசும்போது,

இணையதளம் மூலம் மாப்பிள்ளை தேடுபவர்களுக்கு எச்சரிக்கை டிப்ஸ்:

- பெண்கள், இணையதளம் மூலம் அறிமுகமாகும் மணமகனைச் சந்திக்க தனியாகப் போகாதீர்கள். உங்கள் குடும்பத்துப் பெரியவர்களை அழைத்துக்கொண்டு செல்லுங்கள். அதேபோல மணமகன் தரப்பிலும் பெரியவர்கள் வரவேண்டும் என்று வலியுறுத்துங்கள். நீங்கள் இருவர் மட்டும் தனியாகச் சந்திக்க வேண்டிய கட்டாயமான சூழ்நிலை ஏற்படுமானால் பொதுமக்கள் நிறைந்த இடத்தில் சந்தியுங்கள்.
- அமெரிக்காவிலிருந்து வந்திருக்கிறேன். ஒரே வாரத்தில் கல்யாணம் செய்து கொண்டு திரும்பிப் போக வேண்டும். அம்மா / அப்பாவுக்கு உடல்நிலை சரியில்லை. எனவே, சீக்கிரமாகக் கல்யாணம் செய்து பார்க்க ஆசைப்படுகிறார்கள். ஜாதகப்படி இரண்டு வாரம் மிக நல்ல நேரமாம்; எனவே, சட்டென்று கல்யாணத்தை முடிக்க வேண்டும் என்கிற ரீதியில் பிரஷர் கொடுக்கும் மாப்பிள்ளைகளை அவசரப்பட்டு நம்பி விடாதீர்கள்.
- எந்தக் காரணம் கொண்டும் திருமணத்துக்கு முன்பு நகைகளையோ, பணத்தையோ மாப்பிள்ளையாக வரப் போகிறவர்தானே எனக் கொண்டுபோய் கொடுத்து விடாதீர்கள். மாடர்ன் அவுட்லுக் என நினைத்துக்கொண்டு, திருமணத்துக்கு முன் பாலியல் உறவுக்கு ஒருபோதும் பச்சைக்கொடி காட்டாதீர்கள்.
- மணமகன் அயல்நாட்டில் வாழ்பவராக இருந்தால், அந்த நாட்டில் உங்களுக்குத் தெரிந்த யார் மூலமாவது விசாரியுங்கள்.

அலுவலகத்திலும் அக்கம் பக்கத்திலும் விசாரித்து, சரிபார்த்துச் சொல்லுவார்கள். இன்று இதற்காகத் தனியார் துப்பறியும் நிறுவனங்களின் உதவியை நாடுபவர்களும் உண்டு'' என்கிறார் முருகவேல்.



முருகவேல்



வரதராஜன்

துப்பறியும் நிறுவனம் நடத்தி வரும் வரதராஜன் கூறுகையில், ''என்னிடம் வருகிறவர்களிடம் ஒரு விஷயத்தைத் தெளிவுபடுத்தி விடுவேன். இவர்தான் மாப்பிள்ளை என்று உங்கள் தரப்பில் முடிவு செய்து கொண்டு, பையன் வீட்டிலும் பேசிவிட்டு, நிச்சயம் செய்வதற்கு முன்னால் என்னிடம் வாருங்கள். பையனைப் பற்றி விசாரணை நடத்திச் சரியான ரிப்போர்ட் தருகிறேன். அதன் பிறகு மேலே தொடருங்கள். காரணம், நான் விசாரித்து பையனைப் பற்றி நற்சான்றிதழ் வழங்கியபின் ஜாதகம், பொருந்தவில்லை என்று சொல்லித் திருமணம் நடக்காத சம்பவங்களை பார்த்திருக்கிறேன். நான் தரும் ரிப்போர்ட் தவறு என்றால், என்னுடைய ரிப்போர்ட்டின் அடிப்படையில் என் மீது போடப்படும் நஷ்டஈடு வழக்கை நான் சந்திக்க நேரிடும். எனவே, பையன் நல்லவன் என்றாலும் சரி, கெட்டவன் என்றாலும் சரி, விசாரணை செய்து ஆதாரபூர்வமாக ரிப்போர்ட் கொடுப்பதை வழக்கமாக வைத்திருக்கிறேன்'' என்கிறார்.

ஒட்டுமொத்தமாகப் பார்க்கும் ஆன்லைனில் வரன் தேடும் போது பல வகைகளிலும் பெண் வீட்டார் எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டுமென்பது மட்டும் உறுதி.

- எஸ்.சந்திரமௌலி

இது வாரிசுகளோட காலம்! சினிமாவுல சக் கைப்போடு போட்டுட் டிருக்கிற எஸ்.வி.சேகர், தன் மகன் அஸ்வினைக் களமிறக்கியிருக்காரு. 'செல்லுலார்' இங்கிலீஷ் படத்தை மையமா வெச்சு எடுத்திருக்காங்க. ஆனா தமிழுக்கே உரிய தகிடு தத்தம் நிறைய. காதலியைத் தேடிப் போற இடத்துல ஒரு கடத்தல் கும்பலால ஏற்படுற அதிரடிதான் கதை.



வேகம்

அஸ்வினுக்குப் பொருத்தமான கதை தான். ஆனா, இன்னும் சிறப்பா பண்ணி யிருக்கலாம். அவரோட குண்டு உடம்பு சுலபத்துல வளைஞ்சு கொடுக்க மாட் டேங்குது. ஆக்ஷன் காட்சிகள்ல ஆளு தேறிடுறார். காமெடியிலயும் காதல் லயும் பார்ட்டி டியூஷன் படிக்கணும். கதாநாயகி அர்ச்சனாவை அர்ச்சிக்க ஏராளமான விஷயம் இருக்கு. 'நடிப்பா? கிலோ என்ன விலை, எங்கே கிடைக் கும்?'னு கேக்கறார். பிரபுவும் குஷ்புவும் நீண்ட நாட்களுக்குப் பிறகு ஒரே படத் தில். போலீஸ் அதிகாரியா வந்து மிரட்டியிருக்கார் பிரபு. கடத்தல் காரங்ககிட்ட சிக்கிக்கிட்டுச் சின்னா பின்னப்படுற வேதனையைச் சிறப்பா செஞ்சிருக்காரு குஷ்பு. ஆனா பாவம், பிரபுவும் குஷ்புவும் பேசிக்கிற மாதிரி படத்துல ஒரு சீன்கூட இல்ல. வில்லனா வர்ற ஸ்ரீமன் நல்ல தேர்வு. தமிழ் சினிமா டைரக்டர்கள் இவரை நல்லா பயன்படுத்திக்கலாம். குஷ்புவோட கண வரா வர்ற வேணு அர்விந்தும் ஸ்மார்ட் ரகம். காமெடிக்கு இருக்கவே இருக் காரு எஸ்.வி.சேகர். அவரோட அலம் பல்தான் படத்துக்குப் பெரிய ப்ளஸ். மயில்சாமி சிரிப்பு மண்டை காய வைக்குது.

ராஜேஷ் வைத்யாவோட பின்னணி இசை நல்லாருக்கு. ஆனா 'ஆறுமுகம்' ஓபனிங் ஸாங் தவிர, வேற எதுல யும் ஜீவன் இல்ல. மலேசியாவ கண்ணுக்கு விருந்தாக்கியிருக்கு கே.எஸ்.செல்வராஜோட ஒளிப்பதிவு. ஆக்ஷன் பிரகாஷோட ஸ்டண்ட் பலம், பலவீனம். கோபிநாத் வசனம் கொஞ்சம் அமுதம், கொஞ்சம் விஷம். சேகரோட திரைக்கதை படத்தை வேகமா நகர்த்த உதவியிருக்கு. டைரக் டர் உதயசங்கர் ஹீரோ, ஹீரோயின் கிட்ட சரியா வேலை வாங்கியிருக் கணும். அதே மாதிரி படத்தை வேகமா நகர்த்தினவர், விவேகமா நகர்த்தல. கோட்டைவிட்டதுல தடு மாறிடுது படம்.

– கோபிகா

'எளியோர்களுக்கு எட்டா கனியாகிவிட்ட கல்வி' என்ற தலைப்பில் கருத்துப் பகிர்வுக் கூட்டம் 'நந்தினி வாய்ஸ் ஃபார் தி டிப்ரைடு' என்ற தன்னார்வ தொண்டு நிறுவனம் ஏற்பாடு செய்ய, காந்தி ஜெயந்தி அன்று மயிலாப்பூர் பி.எஸ். மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்றது. அரசுப் பள்ளி உதவி பெறும் பள்ளிகளுக்கும் இடையே இருக்கும் கல்விக் கட்டணம் ஏற்றத்தாழ்வு குறித்து அறிஞர்கள் பேசியதிலிருந்து...

என்.எஸ்.வெங்கட்ராமன்:
(நிறுவனர், நந்தினி வாய்ஸ்)

தமிழ்நாட்டிலுள்ள அனைத்து அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகள், கல்வி கட்டணம், பெற்றோர் ஆசிரியர் சங்கக் கட்டணம் போன்றவை சேர்த்து 25 ரூபாய் மட்டும் பெற வேண்டும் என தமிழக அரசின் கல்வி நிர்வாக இயக்ககம் அறிவித்தது. கடந்த ஜூன் 6ஆம் தேதி பத்திரிகைகளிலும் வெளிவந்துள்ளது.



ஆனாலும் பல பள்ளிகளில் நூற்றுக்கணக்கான ரூபாய் கட்டணமாக வசூலிக்கப்படுகிறது. நாங்கள் கொடுத்த கல்விக் கட்டணத்தைக் காசோலையாக ஏற்க பள்ளி முதல்வர்கள் மறுத்தனர். அப்படியே காசோலையாக ஏற்றாலும், அதனை பள்ளி முதல்வர் தனியாகத் தொடங்கியிருக்கும் அக்கவுன்ட்டில் செலுத்த வேண்டும் என நிர்ப்பந்தித்தார்கள்.

அரசு ஆணை மீறித் தரப்படும் ரூபாயும் கறுப்புப் பணமாக மாறும் வாய்ப்பு உள்ளது. இப்படி வசூலிக்கும் கட்டணம் சராசரியாக ஆண்டுக்கு நூறு கோடியை எட்டும்.

டாக்டர் எம்.அனந்தகிருஷ்ணன்:
(மெட்ராஸ் இன்ஸ்டிடியூட் ஆஃப் டெவலப்மெண்ட் ஸ்டடீஸ்):

இங்கிலாந்து போன்ற மேலை நாடுகளில், ஆரம்பப் பள்ளிக் கல்வியை நல்ல தரத்தோடு அரசாங்கமே ஏற்படுத்தித் தருகிறது. நம் நாட்டில் 'ஸர்வ ஷிக்ஷா அபியான்' எனப்படுகிற 'அனைவருக்கும் கல்வி' திட்டத்தில் வருடத்துக்கு 15,000 கோடி ரூபாய் ஒதுக்கப்படுகிறது. இந்த நிதி சரியான முறையில் பயன்படுத்தப்பட்டிருந்தால் கல்வியின்மை மறைந்து போயிருக்கும்.

குழந்தைகளின் கல்வியைச் சிதைப்பவர்கள் யாராக இருந்தாலும் அவர்களும் சமூக விரோதிகள்தான் என்ற எண்ணம் மக்களுக்கு வர வேண்டும்.

ஆ.கி.பாலசுப்ரமணியன் (முன்னாள் ஐ.ஏ.எஸ்):

நகராட்சி, ஊராட்சிப் பள்ளிகளின் தரம் உயர்ந்தால் அதைவிட சமூக முன்னேற்றம் வேறொன்றும்



கழுத்தை நெறிக்கும் கல்விக் கட்டணம்!

இருக்காது. ஒவ்வொரு பஞ்சாயத்திலும் கிராம கல்விக் குழு இருக்கிறது. அதில் தலைமையாசிரியர் உறுப்பினராக இருக்கிறார். அதில் சேரும் வாய்ப்புள்ளவர்கள் உறுப்பினராக இருந்து செயல்படலாம். துவக்கப் பள்ளிகளில் வசூலிக்கும் வரியை துவக்கப் பள்ளி முன்னேற்றத்துக்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும். கல்வி வரியாக சென்னையில் மட்டும் ஆண்டுக்கு 62 கோடி ரூபாய் வசூலிக்கப்படுகிறது. பள்ளிகளில் நடக்கும் முறைகேடுகளுக்கு சமூக அக்கறையின்மைதான் காரணம்.

ஞாநி (பத்திரிகையாளர்):

என்றைக்குப் படித்த அரசு ஊழியர்கள், வங்கி ஊழியர்கள், கல்வித்துறை உயரதிகாரிகளின் வாரிசுகள் அரசுப் பள்ளிகளில் படிக்கிறார்களோ, அன்று அரசுப் பள்ளிகளில் நடக்கும் முறைகேடுகள் நின்று போகும். இதனை ஒரு சட்டமாகவே கொண்டு வரலாம். தங்களுடைய வாரிசுகள் படிக்கும் பள்ளியின் மீது அதிகாரிகளுக்கு அக்கறை வந்து விடும். எல்லாவிதமான பொருளாதார ஏற்றத் தாழ்வுகள் கொண்ட மாணவர்கள் ஒரே இடத்தில் படிக்க வேண்டும் என்பதே என்னுடைய கனவுக் கல்வி.

நடராஜ் (ஐ.பி.எஸ், இயக்குனர் - உளவுத்துறை):

மாநிலத்தின் பல பகுதிகளில் இருந்தும் எங்களுக்கு 8000 முதல் 10,000 வரை மனுக்கள் வருகின்றன. அதில் பெரும்பாலான மனுக்கள் கல்வியறிவில் அதிக சதவீதம் எட்டிய மாவட்டங்களில் இருந்து வருகிறது. இதற்கு அர்த்தம் கல்வியறிவு குறைவாக உள்ள மாவட்டத்தில் மனித உரிமை மீறல் குற்றங்கள் குறைவு என்பது அல்ல. தங்களுக்கு நேரும் பாதிப்பை அவர்கள் வெளிக் கொணரவில்லை என்பதுதான்.

மனித உரிமை மீறலில் மிக முக்கியமான உரிமை மீறல், ஊழல். இது கல்வித் துறையிலும் இருக்கிறது என்ற பட்சத்தில் அதை நீக்க வேண்டியது மிகவும் அவசியம்.

- ஜானு



ஆஸ்காருக்கு விருந்து கொடுத்த கமல்!

கமல் பத்து வேடங்களில் நடிக்கும் 'தசாவதாரம்' படம் பற்றின தகவல்கள் மெல்ல மெல்ல கசிந்து மீடியா உலகை வலம்வந்து கொண்டிருக்கின்றன. நம்மையும் அவை எட்ட, இதோ இனி அவை உங்களுக் கானவை :

★ தசாவதாரத்தில் டப்பிங் மிக முக்கிய பங்கு வகிக்கவிருக்கிறது. அசின் சொந்தக் குரலில் பேசியிருக்கிறார். கமலின் பத்து கேரக்டர்களுக்கும் பத்து விதமான குரல் தோரணை. 10,000 பேர் கொண்ட ஒரு காட்சிக்கான ஒலிப்பதிவை நேரு ஸ்டேடியத்தில் 5,000 பேரை வைத்துக் கள ஒலிப்பதிவு செய்யவிருக்கிறார்கள்.

★ படத்தில் இன்னொரு முக்கிய இடம் வகிப்பது சி.ஜி. எனப் படும் கம்ப்யூட்டர் கிராஃபிக்ஸ். இதற்காக மூன்று பெரிய நிறுவனங்கள் இரவு பகல் பாராது பணிபுரிந்து கொண்டிருக்கின்றன.

★ படத்தை ஆஸ்கார் நிறுவனம் சிறப்பாய் கொண்டு வந்திருப்பதில் கமல் பரம திருப்தியில் இருக்கிறாராம். 'ராஜ்கமல் நிறுவனத்துக்குப் பிறகு எனக்கு எல்லா வசதிகளையும் செய்து கொடுத்து, படத்தின் நலனை மட்டுமே கருத்தில்கொண்டு, நம்பிக்கை தளராமல், சந்தேகப் படாமல், பதற்றம்கொள்ளாமல் மலைபோல் துணையாய் நின்ற ஒரே நிறுவனம் ஆஸ்கார்தான்' என்று புகழ் விருதே அளித்தாராம் கமல்.

★ படத்தில் வரும் உச்சகட்ட சண்டைக் காட்சியை வடிவமைக்க அமெரிக்காவிலிருந்து ஜூப் என்னும் நிபுணரை வரவழைத்திருக்கிறார்கள். இந்தக் காட்சியை எடுக்க இருபது நாட்கள் ஆனதாம். கமலே கமலுடன் மோதுவதால் இவ்வளவு டைம்!

★ கம்ப்யூட்டர் கிராஃபிக்ஸ் வேலை தவிர, இன்னும் இரண்டு பாடல்கள் மட்டுமே படமாக்கப்பட வேண்டும். சென்னையில் இதனை மூன்று கோடி ரூபாய் செலவில் படமாக்கவிருக்கிறார்கள். தோட்டாதரணி அரங்கம் அமைத்துக் கொண்டிருக்கிறார்.

- ரேவதி

நான் ஏன் ஹீரோவானேன்!

பா.விஜய்


டைரக்டர்கள் ஹீரோவாகும் சீஸனில் பாடலாசிரியர்களும் கதாநாயக பவனி வரத் துவங்கிவிட்டனர். முதலில் பா.விஜய். கலைஞரின் திரைக் கதையில் நடிக்கவிருக்கும் பா.விஜய், தான் நடிக்கவிருக்கும் படம் பற்றி நம்மிடம் பேசினார்.

★மாக்ஸிம் கார்க்கியின் ரஷ்ய நாவல் தாய். உயரிய காவியமான இதனைத் தமிழில் தந்தவர் டாக்டர் கலைஞர் அவர்கள். இந்த நாவலை அடிப்படையாகக் கொண்ட கதையில்தான் நான் கதாநாயகனாக நடிக்கவிருக்கிறேன். கலைஞர் திரைக்கதை எழுதுகிறார்.

★ முதலில் நான் இந்தப் படம் பண்ணுவதாக இல்லை. ஒரு நாள் கலைஞர் அவர்களைச் சந்தித்து, நீண்ட நாட்களாகவே ஹீரோவாகும் எண்ணம் மனத்தில் உள்ளதைச் சொல்லி, 'பராசக்தி படத்தை ரீமேக் பண்ணி நடிக்கவிருக்கிறேன்' என்றேன். சட்டென்று அவர், 'ஏன் இந்த விபரீத முயற்சி?' என்றார். அதிர்ச்சியுடன் நான் அவரைப் பார்க்க, அவரோ 'படம் பார்த்துவிட்டு வெளியே வரும் ஒவ்வொருவரும் உன்னை சிவாஜியுடன் ஒப்பிட்டுச் சரியாகச் செய்யவில்லை என்று கூற மிக அதிக சதவிகித வாய்ப்பு உள்ளது' என்றார். பிறகுதான் எனக்கு உறைத்தது. பராசக்தி எண்ணத்தை அந்த நிமிடமே கைவிட்டேன். மீண்டும் கலைஞரே 'தாய்க் காவியத்தைப் பண்ணலாமே... உனக்கு மிகவும் பொருத்தமாக இருக்கும்' என்றார். அப்போதே முடிவுசெய்து, இதோ மிக விரைவில் கலைஞரின் இல்லத்திலேயே பட பூஜை நடைபெறவிருக்கிறது.

★ பார்த்திபன் அவர்களிடம் இணை இயக்குநராகப் பணியாற்றிய பாலி ஸ்ரீரங்கம் என்பவர் இப்படத்தை இயக்குகிறார். பலர் என்னிடம் வாழ்த்துச் சொன்னாலும் 'இவர் ஏன் ரிஸ்க் எடுக்கிறார்' என்று அடிமனத்தில் தோன்றலாம்; தோன்றும். வாழ்க்கையில் ஒரே இடத்தில் தேங்கி நிற்பது எனக்குப் பிடிக்காத ஒன்று. அடுத்தடுத்தென்று போய்க் கொண்டே இருக்க வேண்டும். அன்று கவிஞர். நேற்று பாடலாசிரியர். இன்று நடிகன் என்று வெவ்வேறு பரிமாணங்களை உடுத்திக் கொள்ள ஆசைப்படுகிறேன்-என்னை வாழ்த்தி வளர்க்கும் நல்லவர்களின் துணையோடு.

- மனஸ்வினி



“ஆபீஸ் பாய்னா அடியும் விழும்!



“சினிமா கம்பெனில ஆபீஸ் பாயா வேலை செய்றதும் சித்தாள் வேலை செய்றதும் ஒண்ணுதான். ரெண்டுக்குமே பெரிசா எந்த கிரியேட்டிவிட்டியும் தேவை இல்ல. கடினமா உழைக்கத் தயாரா இருந்தா போதும்'' என்கிறார் பிரசாந்த். அரக்கோணத்தை விட்டு சினிமா ஆசையில் சென்னை வந்து, கடந்த நான்கு வருடங்களாகப் பல சினிமா கம்பெனிகளில் ஆபீஸ் பாயாகப் பணிபுரிந்தவர்; புரிபவர்.

''ஆபீஸ் பாய் வேலைன்னாலும் அதுவும் ஒண்ணும் சும்மா கிடைச்சிடா துங்க. ஓரளவுக்குப் படிச்சிருக்கணும். நெளிவு சுளிவு தெரியணும். முக்கியமா சினிமா கம்பெனிக்கு யாராவது நம்மள ரெக்கமண்ட் பண்ணணும். மத்தபடி யூனியன், லொட்டு லொசுக்கெல்லாம் இங்க இல்ல. காலைல ஆறு, ஏழு மணிக் கெல்லாம் ஆபீஸ்ல இருக்கணும். கூட்டிப் பெருக்கி சாமிக்கு ஊதுபத்தி ஏத்தி, பூப்போட்டு நீட்டா வெச்சுக் கணும். ஒம்போது, பத்து மணியப் போல புரொடியூசர், டைரக்டர், அசிஸ்டண்ட் டுங்க, அவங்க இவங்கன்னு எல்லாரும் வர ஆரம்பிப்பாங்க. ஒவ்வொருத்தரை யும் தனித்தனியா வரவேற்று உட்கார வைக்கணும். தேவையானதை செஞ்சு தரணும். காஃபில ஆரம்பிக்கும் அன்

றைய தேவை. அப்படியே கூல் ட்ரிங்க்ஸ், இளநீர், பழரசம், டிஃபன், மதியச் சாப்பாடுன்னு தொடர்ந்து ராத்திரி டின்னர் வரைக்கும் ஓயாம வேலை இருக்கும். முகம் சுளிக்காம செய்யணும். சமயத்துல புரொடியூசர், கதை டிஸ்கஷனுக்கு டைரக்டர் ரூம்-க்கு ரூம் போட்டுக் கொடுத்து நம்மளை உதவியா இருக்க வச்சிடுவார். டீ, சிகரெட், டி.வி.டி.ன்னு அப்பவும் வேலை விதவிதமா இருக்கும்.

ஆபீஸ் பாய்க்கு இருக்கவே கூடாதது கோபம். அது அவனையும் அவன்




கேரியரையும் அழிச்சிடும். அவங்க கேட்டது சமயத்துல கிடைக்காது. இல்லைன்னு உடனே வந்துடக் கூடாது. முடிஞ்ச வரைக்கும் வாங்கப் பார்க்கணும். இல்லைன்ற பட்சத்துல மாற்று வழிய யோசிச்சு சினிமா ஆட்களோட மனம் கோணாம நடந்துக்கணும்.

சரி, அப்படி நடந்துக்கலைன்னா? திட்டு விழும். உங்க வீட்டு, எங்க வீட்டு திட்டு இல்ல... ராஜா வீட்டுத் திட்டு. ச்சும்மா பிச்சு உதறுவாங்க. அவங்கள குத்தம் சொல்ல முடியாது. அவங்க டென்ஷன் அவங்களுக்கு. கோடி கோடியா கொட்டிப் படம் எடுக்க யோசிச்சுக்கிட்டிருக்கும்போது நாம செய்ற சின்ன மிஸ்டேக்கூட பூதாகரமாத்தான் அவங்களுக்குத் தெரியும். இப்படித் தெரியும்னு நாம தெரிஞ்சுக்கிட்டா போதும், நமக்கு வேலையத் தட்டிக் கழிக்கிற எண்ணமே வராது.

சம்பளம் ரொம்பக் கம்மியாத்தான் இருக்கும். ஆனா சினிமால பெரிய ஆளா வரணும்னு துடிக்கிற என்னை மாதிரி ஆட்களுக்குச் சம்பளம் ஒரு பொருட்டே இல்ல. அந்த வேலைதான் முக்கியம். பலதரப்பட்ட ஆட்களோடு பழக்கம் கிடைக்கும். விதவிதமான அனுபவங்கள். தினமும் சினிமாவ சுவாசிச்சிக்கிட்டே இருக்கலாம். அப்பப்போ அங்க வர்ற டைரக்டர்கள், உதவி இயக்குநர்கள்கிட்ட நம்ம திறமையை வெளிப்படுத்தலாம். உடனே கூப்பிட்டு வேலை கொடுக்கலைன்னாலும் முகத்துக்கு நேரா நம்மளப் பத்தின விமர்சனத்தை ஒளிக்காம கொள்ளாம சொல்லிடுவாங்க. இதுதான் இன்னிக்கு சினிமால வேணும். தன்னோட பலம், பலவீனம் தெரியாமத்தான் அவனவன் இங்க அல்லாடிக்கிட்டிருக்கான். அதை உணர வைக்கற இந்த ஆபீஸ் பாய் வேலை உண்மையில எனக்கு ரொம்பப் பிடித்தமான ஒண்ணு.

திருட்டுத்தனம் பண்றதுக்குக்கூட இந்த வேலைல ஏராளமான வழி இருக்கு. இங்க்லீஷ் பட டி.வி.டி. வாங்கிட்டு வரச் சொல்லுவாங்க. கமிஷன் அடிக்கலாம். இளநீர் வாங்கிட்டு வரச் சொல்லுவாங்க. காசை உயர்த்திச் சொல்லி நாம ஒண்ணு குடிக்கலாம். எல்லாமே செய்யலாம்... ஆனா நீங்க நல்லவனா வர மாட்டீங்க. சினிமால ஜெயிக்க மாட்டீங்க. வேலைய செஞ்சுட்டு பத்து



ரூபா வேணும்னு கேட்டா, நூறு ரூபா எடுத்துத் தர்ற ஆட்கள்தான் இங்க அதிகம். திட்டி பேசியிருப்பாங்க. அடுத்த நிமிஷம் தோள்ல கைபோட்டு 'மனசுல வச்சுக்காத, இந்தா'ன்னு பணத்தை நீட்டுவாங்க. மனிதாபிமானம் நிறைய இருக்கு. ஆனா அதை வெளிப் படுத்த நாம மொதல்ல மனிதாபி மானத்தோடு நடந்துக்கணும். நீங்க சரியா நடக்காம அவங்க மட்டும் புத்தர் மாதிரி நடக்கணும்னு ஆசைப் பட்டா எப்படி?

நான் உதவி இயக்குநர் கனவோடு ஓடி வந்தவன். எத்தனையோ பேர் என்னை மாதிரி வந்து வாய்ப்பு தேடி அலைஞ்சு, கிடைக்கற வரைக்கும் ஏதோ ஒரு வேலைல ஒண்டிக்கிறாங்க. நான் ஒண்டிக்கிட்டது ஆபீஸ் பாயா. ஏன் ஒரு சர்வரா, ஒரு பெட்ரோல் பாயா, நைட் வாட்ச்மேனா பல வேலை செஞ்சுக் கிட்டே வாய்ப்புத் தேடியிருக்கலாம். எனக்கு அதுல விருப்பமில்ல. வெங் கடேசப் பெருமாளை திருப்பதி போய் தரிசனம் பண்றதுக்கும் தி.நகர் போய் தரிசனம் பண்றதுக்கும் வித்தியாசம் இருக்கில்ல! சினிமால ஏதோ ஓர் அங் கமா இருந்துக்கிட்டே என் லட்சியத் துக்கான பாதையை நான் சீர் செஞ்சுகட் டிருக்கறது எனக்குச் சரியாப்படுது. நான் நினைச்ச டைரக்டர்களை ரொம்ப சுலபமா பார்த்து என் எண்ணங்களைச் சொல்ல முடியுது. சினிமா ஆட்களோடு பழக முடியுது. சினிமாவா நான் மாறிப் போறேன். என் வேகம் இன்னும் அதிகமாகுது. ஜெயிக் கணும்ங்கற எண்ணம் வலுப்பெறுது. இங்க இன்னொரு கேள்வியும் வரலாம். இந்த எண்ணங்கள் என் ஆபீஸ் பாய் வேலைக்குத் தடையா இருக்குமா? இருக்கும். எப்போ தெரியுமா? அதிகப்பிரசங்கித்தனமா டைரக் டர்கள், உதவி டைரக்டர்கள்கிட்ட போய் லொடலொடன்னு பேசறது, அவங்க ஆளுமைக்குள்ள நம்ம மூக்கை நீட்டறதுன்னு தகுதிக்கு மீறிச் செயல்படும்போது எல்லாமே பிரச்னையாயிடும். ஆக, நம்ம எண்ணங் களைக்கூட நேரம் பார்த்து, கேக்கப் போற வங்க சூழ்நிலை பார்த்து, சரியான விதத்துல சிறப்பா சொல்லணும். இல்லேன்னா டேன் ஜர்தான்.

சாப்பாடு மத்த விஷயத்துக்கெல்லாம் என்னிக்கும் இந்த வேலை குறை வெச்ச தில்ல. என்ன, நம்மையே நம்பி இருக்குற வீட்டுக்கு எதுவும் செய்ய முடியாது. மாசம் மூந்நூறு ரூபா அனுப்பினாலே பெரிய விஷயம். இது மாதிரி நேரத்துலதான் மனசு வலிக்க ஆரம்பிச்சிடும். அப்பல்லாம் நாம பெரியாளா வந்து நம்ம குடும்பத்தை ராஜா வாட்டம் வச்சுக்கற மாதிரி கற்பனை பண்ணத் தோணும். என்னமோ தெரியல, இப்படிப் பண்ணும்போது வாழ்க்கையே லேசா ஆகி, வானத்துல பறக்கற மாதிரி ஒரு ஃபீலிங்!

ஒரே ஒரு விஷயத்தை மட்டும் மனசுல வச்சுக்கிட்டா போதும். ஆபீஸ் பாய் வேலைன்னா அடியும் விழும்! அடிதான் அவ மானத்தோட உச்சபட்சம். அதையே சகிச்சுக் கிட்டு நீ இருந்துட்டா சாதிச்சிடலாம்!''



சந்திப்பு: **மு.மாறன்**

படங்கள்: **பொள்ளாச்சி சுந்தரம்**



''ஏன் கிட்டு மாமா, நீங்க மந்திரவாதியா?''

''ஏண்டா கேட்கறே?''

''அப்போ அப்பா சொன்னாரே... கிட்டு முழு பூசணிக்காயவே சோத்துல மறைப்பான்னு!''

- ஆர்.நரசிம்மன்

சும்மா அதிருதில்ல!





''அங்க தெருச் சண்டை போடுறதுல யாரு உங்க மனைவி?''

''பேச்சைக் கேட்டாலே ச்சும்மா அதிருதுல்ல... அவதான்!''

- திருமயம் பெ.பாண்டியன்

''மாப்பிள்ளை சென்னையில் நல்ல பவர்ல இருக்கார்னு சொல்றீங்களே... என்ன வேலை பார்க்கறார்?''

''ஆயிரம் விளக்குல குடியிருக்காருங்க.''

- தேனி முருகேசன்



‘பார்த்திபன் கனவு தொடரை இப்போதுதான் முதன்முதலாகப் படிக்கிறேன். அற்புதமான நடை. அடுத்த வாரம் எப்போது வரும் என்ற ஆர்வத்தை ஏற்படுத்துகிறது. வர்ணனைப் போட்டி முடிவைக் கண்டேன். வாசகர்களுக்குள் புதைந்துள்ள எழுத்தாளனை வெளியே கொண்டு வரும் தங்கள் முயற்சிக்குப் பாராட்டுகள். சமீபகாலமாக அட்டைப் படங்கள் சட்டெனக் கவர்ந்து இழுக்கும் விதமாக உள்ளன. பக்கங்களை அதிகப்படுத்தினால் இன்னும் சிறப்பாக இருக்கும்'' என்கிறார் சாலை அகரம் கா.சங்கர்.



✱ ஆறுமுகம்

‘‘நான் முப்பத்தைந்து வருடங்களாக கல்கியை வாசிக்கிறேன். கிரேஸி பதில்கள் ரசிக்கும் விதமாக உள்ளன. கல்கியில் இரண்டு வரி விமர்சனம் வந்தால்கூட இலவசமாகப் புத்தகம் அனுப்புகிறீர்கள். வாசகர்களை மதிக்கும் இந்தப் பண்பு, வேறு எந்தப் பத்திரிகையும் செய்யாதது. இன்னொரு விஷயம், எனது தந்தை கல்கியில் வெளியான பல தொடர்கதைகளைக் கத்தரித்து, 'பைண்ட்' செய்து வைத்திருந்தார். நானும் எனது சகோதரிகளும் அவரிடம் 'அப்பா, எங்களுக்குக் கல்யாண சீதனமாக எதைத் தருகிறீர்களோ இல்லையோ, இந்தப் புத்தகங்களைத் தந்து விடுங்கள்' என்று சொல்வோம். அந்த அளவுக்கு கல்கியை நேசிக்கிறோம்'' என நெகிழ்கிறார் சென்னை, மீனா ரெங்கநாதன்.



✱ கா.சங்கர்

‘‘கடந்த நான்கு வருட கல்கி வாசகன் நான். ஜோக்ஸ், கவிதை எழுதுவதுண்டு. பழைய வாசகர்களைத் தக்க வைத்துக் கொள்ளும் அதேசமயம், எங்களைப் போன்ற இளைய, புதிய வாசகர்களை ஈர்க்கும் வகையில் சமீப காலமாகப் பல மாற்றங்களைக் காண முடிகிறது. காதல் பொன்மொழிக் கதைகளை மிகவும் ரசித்துப் படித்து வருகிறேன். மருதன் எழுதும் உள்ளும் புறமும் கண்டிப்பாகப் பாராட்ட வேண்டிய பகுதி. வேறு எந்தப் பத்திரிகையிலும் வராத புதுமை. ஜோக்ஸ் மிகக் குறைவாக உள்ளன. இந்த வாரம் மொத்தமே ஆறு



✱ கலியபெருமாள்

ஜோக்ஸ்தான் இடம்பெற்றிருந்தன. இன்னும் அதிகமாக எதிர்பார்க்கிறோம்'' என்கிறார் வைகை ஆறுமுகம்.

ஆர்ப்பாட்டமில்லாத புரட்சி!



மீனா ரெங்கநாதன்

''கல்கி வெறும் பொழுதுபோக்குப் பத்திரிகையல்ல. அதன் ஒவ்வொரு பகுதியும் தனி மனிதனுக்கு, சமுதாயத்துக்கு ஏதாவது ஒரு வகையில் நன்மை தருவதாக அமைந்திருக்கிறது. சுருக்கமாகச் சொல்வதென்றால் விளம்பர ஆர்ப்பாட்டமின்றி, ஒரு மௌனப் புரட்சியை செய்துகொண்டிருக்கிறது. தகவல் தொழில்நுட்ப மாற்றங்களால் இன்றைய இளைஞர்களிடம் கலாசாரத்தில் வேகமான மாற்றம் ஏற்பட்டிருக்கிறது.

சில நல்லவையாக இருந்தாலும் பல, அபாயமான பாதைக்கு அழைத்துச் செல்வதாக உள்ளன. அத்தகையோரை நல்ல பாதைக்குக் கொண்டுசெல்ல வேண்டிய கடமையை கல்கி போன்ற பத்திரிகைகள் செய்ய வேண்டும். செய்வீர்கள் என நம்புகிறேன்'' என்று வாழ்த்துகிறார் பெரம்பலூர் கலியபெருமாள்.



எஸ்.எஸ்.மணி

''ஒரு சாதாரண வாசகனாக இருந்த என்னை, பல வருடங்களுக்கு முன்பே 'சேதி கேட்டோ?' என்ற தலைப்பில் கேரள செய்திகளை கல்கியில் தொடர்ந்து எழுத வைத்து, கௌரவம் செய்தீர் கள். ஐம்பது வருடங்களுக்கும் மேலாக கல்கி யைப் படிக்கிறேன். சமீபத்திய புதிய பகுதிகளில் மருத் துவம் சிறப்பாக உள்ளன. பக்கங்கள் குறைவாக இருப்பது நீண்ட காலமாகவே ஒரு குறையாகத் தோன்றுகிறது. பக்கங்களை அதிகரியுங்கள். மற்றபடி மனத்துக்கு முழு திருப்தி தருகிறது'' என மகிழ்கிறார் திருவனந்தபுரம், எஸ்.எஸ்.மணி.

அல்லிப் பூக்கள்!

அல்லிப் பூ! தூய்மையான வெண்மை நிறத்துக்குச் சின்னமாகக் கொள்ளப்படும் அழகு மலர்.

கௌரி ராம்நாராயண் எழுதி, இயக்கிய வாட்டர் லில்லீஸ் (அல்லி மலர்கள்) என்ற முப்பிரிவு நாடகத்தில் அல்லிப் பூக்கள் அழகோடு அதிர்ச்சியும் ஆறுதலும் ஊட்டும் படிமங்களாகப் பயன் படுத்தப்பட்டன. 'ஜஸ்ட் அஸ் ரெபர்டோரி'யின் தயாரிப்பாக, சென்ற வாரம் சென்னை, சிவகாமி பெத்தாச்சி அரங்கில் அரங்கேறியது இந்நாடகம்.



கௌரி

அல்லிப் பூக்களைப் பற்றிய இரு ஆங்கிலக் கவிதைகளையும் பிரஹதாரண்யக உபநிஷத்திலிருந்து ஒரு சுலோகத்தையும் மையப்படுத்தி மூன்று குறு நாடகங்களைப் படைத்திருந்தார் இயக்குநர். ஒவ்வொன்றிலும் உலகின் வெவ்வேறு பகுதிகளைச் சேர்ந்த ஓர் ஆணும் பெண்ணும் யதேச்சையாகச் சந்தித்து உரையாடுகிறார்கள். ஒரு சிறு சரடு அவர்களை இணைக்க, அற்புத அனுபவங்கள், ஆழ் மன அச்சங்கள், பட்ட அடிகள், கற்ற பாடங்கள் என்று அவர்கள் பரிமாறிக் கொள்ள, அரங்கையும் கதைக் களத்தையும் கடந்து, அழகுணர்ச்சி அல்லி இதழ்களென மென்மையாக விரிந்து, இருந்தும் இல்லாத இலேசான சுகந்தத்தைப் பரப்புகிறது.

Fawn Lilies, Water Lilies, Black Lilies என்ற மூன்று நாடகங்களிலும் நெஞ்சை உலுக்கும் தார்மிக வினாக்களும் எழுப்பப்படுகின்றன. சில வினாக்களுக்கு விடைகளைத் தேடிக் கொண்டேயிருப்பதில் உள்ள சுவாரஸ்யம் உணர்த்தப்படுகிறது. வேறு சில வினாக்களுக்கு விடை இல்லை என்பதே விடை ஆகிறது! இன்னும் சில வினாக்களுக்கான விடைகளை அறிந்தும் அறியாததுபோல் பாவனை செய்யும் மனித மனத்தின் கல்மிஷம்; உணர்வுக்குத் தெரிந்த விடைகளை, அறிவால் சதா சவால் விட்டுச் சோதிக்கும் விளையாட்டு... என்று கௌரி ராம்நாராயண் வெகு நேர்த்தியாக உரையாடல்களைக் கொண்டே பாத்திரங்களுக்கு முழுமை தந்ததோடு கதையம்சத்துக்கு வலுவூட்டியிருக்கிறார்.

கனந்தா ரகுநாதன் - நீஷ் மாரிவாலா; சுவர்ண மால்யா (ஆமாம், 'மொழி' சுவர்ண மால்யாவேதான்!) - வி.பாலகிருஷ்ணன்; த்ரிதிமன் சாடர்ஜி - பிரதிக்ஷா என மூன்று நாடகங்களில் மூன்று ஜோடி நடிகர்கள் கதாசிரியர் - இயக்குநரின் எண்ணத்துக்கு வடிவம் கொடுத்து பிரமாதமாக நடித்திருக்கிறார்கள்.

மிக எளிமையான மேடை அமைப்பு; கவித்துவமான ஒளி அமைப்பு, அனில் ஸ்ரீநிவாஸனின் மேற்கத்திய பியானோ இசை இழைந்து ஒலிக்கும் அழகு... கொஞ்சம் மெருகேற்றினால் சர்வதேச நாடக அரங்கில் வரவேற்பும் விருதும் பெறத்தக்க அம்சங்கள் இருக்கின்றன 'வாட்டர் லில்லீஸ்' நாடகத்தில். கலையுணர்வு மிக்க ஸ்பான்ஸர்களின் கண்ணில் படவேண்டும்!



Registered with the Registrar of Newspaper of India under No.1041/57*Registered No.TN/CC(S)DN/144/06-08-Licensed to post without prepayment under PMG s Licence No.WPP TN/CC(S)DN/70/06-08-Registered as a Newspaper in Srilanka.